2912

T.N.C.A. Debates

Official Report

Vol 19 No. 3

27th March 1986

V211,31 N86
N86 19.3
136459

வெளியீடு 4-11-1986] [Issued 4-11-1986

887/87.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

2912

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 27, 1986 - தொகுதி 19 எண் 3
Thursday, 27th March 1986 - Volume 19 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

ர
N211, 31 N86
N86-19-3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136459
சென்னை-600 008.

உள்ளடக்கம்.

27-3-1986 பக்கங்கள்.

1. இரங்கற் குறிப்பு—
பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சி. ஆர். இராமசாமி மறைவு குறித்து .. 391—392

2. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 392—431

3. கவன ஈர்ப்புகள்—
(அ) சமூக நலக் காடுகளில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுவது குறித்து .. 431—432
(ஆ) ஆத்தூர் ஒன்றியம் மஞ்சிறை கிராமத்தில் வயிற்றுப் போக்கால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளது .. .. .. 432—435

4. அறிக்கைகள் அளித்தல்—
பொதுக் கணக்குக் குழு .. .. 436

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1986 437
(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு 1986 .. .. .. 437—438

6. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் (தொடர்ச்சி) 438—561
மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத்தலைவர்) 438—464
திரு. என். எஸ். வி. சித்தன் 469—492
திரு. கி. நா. கோ. அ. மனோகரன் 492—496
திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் 497—508
திரு. ஜெ. ராஜாபாபு 509—514
திரு. க. சோலைராசு 514—522
திரு. எஸ். வேணுகோபால் 522—534
திரு. எல்ல. ராசமாணிக்கம் 534—540
திரு. கே. பாலாஜி 541—544
திரு. மு. மாரிமுத்து 544—550
டாக்டர் கே. சமரசம் 551—561

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 562—563

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

1986, மார்ச் 27, வியாழக்கிழமை

**பங்குனி 13, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். **பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீ

நன்றின்பால் உய்ப்ப தறிவு"

மனத்தைச் சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்ல விடுவதே அறிவாகும்.

### 1. இரங்கல் குறிப்பு.

**பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சி. ஆர். இராமசாமி மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. ஆர். இராமசாமி அவர்கள் 26—3—1986 அன்று மாலை மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆர். இராமசாமி அவர்கள் 1952 ஆம் ஆண்டில் இருந்து 1962 ஆம் ஆண்டு வரை மைலாப்பூர் தொகுதியில் இருந்து சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அவர் பல பொது நிறுவனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றியுள்ளார். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பல ஆண்டுகள் நாட்டுக்கு

குறிப்பாக தமிழ் நாட்டிற்கு தொண்டாற்றியுள்ளார். அவர் மறைந்த பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### தனியார் பஸ் கம்பெனித் தொழிலாளர்கள்.

294—(*வினா எண் 343)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை தனியார் பஸ் கம்பெனிகள் உள்ளன ?

(ஆ) அவற்றில் எத்தனை தொழிலாளர்கள் பணி யாற்றுகிறார்கள் ?

(இ) அவர்களுக்கு சட்டப்படியான உரிமைகளை நிர்வாகம் வழங்கி வருகிறார்களா ?

(ஈ) இல்லை எனில், உரிமைகள் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தமிழ் நாட்டில் 1,580 தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் 1962 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அவற்றில் 21,880 தொழிலாளர்கள் பணி யாற்றுகிறார்கள்.

(இ) ஆம், வழங்கி வருகிறார்கள்.

(ஈ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் ஆச்சரியத்தை அளிக்கிறது. தமிழ் நாட்டில் 21,880 தொழிலாளர்கள் தனியார் பஸ் கம்பெனிகளில் பணியாற்றி வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்த்தால், ஒருவிதமான கொத்தடிமைகளைப் போல தொழிலாளர்களை நடத்துகிற முறை தனியார் பஸ் கம்பெனிகளில் இருந்து கொண்டிருக்கிறது. தனியார் பஸ் கம்பெனிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சட்ட உரிமைகளும் வழங்கப்படாததோடு மட்டுமல்ல, அடிக்கடி அவர்களுடைய சர்வீஸ் கட் செய்கின்ற சட்ட விரோத நடைமுறையும் இருந்து கொண்டிருக்கிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கக் கூடிய சம்பளமோ, பணி நிலைமைகளோ தனியார் பஸ் கம்பெனிகளில் அமல் ஆக்கப்படுவதில்லை. எனவே இந்த நிலைமைகளை முற்றிலும் மாற்றுகிற முறையில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திலே இருக்கக் கூடிய அனைத்து தனியார் பஸ்களையும் தேசியமயமாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தமான பிரச்சனை.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தமான பிரச்சனை; என்றாலும் நான் அதிலிருக்கிற இன்னொரு சங்கடத்தையும்

[1986 மார்ச் 27

குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே எந்த ஒரு தனியார் பஸ் கம்பெனியிலும் உள்ள தொழிலாளர்களுக்கு சட்ட நடைமுறையில் உரிமைகள் அமல் ஆக்கப்படுவதில்லை. இன்னொரு முக்கியமான அபாயகரமான விளையாட்டை தனியார் பஸ் கம்பெனிக்காரர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களின் பணியை மறுக்கின்ற முறையில், சர்வீஸை கட் செய்கின்ற முறையில் அடிக்கடி கம்பெனியின் பெயர் மாற்றம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பெயர் மாற்றம் செய்கின்ற நேரத்தில் தொழிலாளர்களின் 'நோ அப்ஜெக்சன்' லெட்டர் இருந்தால்தான் அந்தக் கம்பெனிகளின் பெயர் மாற்றப்படும் என்ற முறையில் சட்ட விதிகளை திருத்த அரசு முன்வருமா? அதைப்போல மாநிலத்திலே உள்ள அரசு போக்குவரத்து கழகங்களிலே வழங்கக்கூடிய சம்பளமும், பணி நிலைமைகளையும் அமல் ஆக்க வேண்டுமென்று, குறுகிய கால வரம்பு வரையறுக்கப்பட்டு, தனியார் பஸ் கம்பெனிகளுக்கு உடனே அதை அமல் ஆக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறுப்பில் இருக்கின்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பை இந்த அரசு செய்து வருகிறது. குறிப்பாக 1984 ஆம் ஆண்டில், இந்த தனியார் நடத்துகின்ற அந்த போக்குவரத்து நிறுவனங்களிலே ஆய்வு செய்து இப்போது ஏறத்தாழ 289 பேர் தவறுகள் செய்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அதில் 269 பேர்கள் மேல் வழக்குப் போட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். மீதம் உள்ள 20 பேர்கள் மீது உள்ள வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்து கொண்டு இருக்கின்றன.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை நமது அரசு எந்த நிலையில் அமல் செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு தனியார் பஸ்



1986 மார்ச் 27]

தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. நம்முடைய அரசு சார்பில் நடந்து வருகின்ற சோழன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு கிடைக்கக் கூடிய அத்தனை சலுகைகளும் தனியார் பஸ் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி இன்றைக்கு அமல் செய்து வருகிறோம். ஏதாவது குறைகள் இருந்தால் அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர்கள் திரு. சுப்பராயன் அவர்களும், திரு. உத்திராபதி அவர்களும் தனியார் பஸ் தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லை, உத்திரவாதம் இல்லை, அவர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். யாரைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பஸ்ஸை வைத்து நடத்தக்கூடிய தனியார் முதலாளியாக இருந்தால் கூட லேபர் ஆக்ட் படி, சட்டப்படி தொழிலாளர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுத்து ஆக வேண்டும். எல்லா உரிமைகளையும் கொடுத்து ஆக வேண்டும். எல்லாப் பாதுகாப்பையும் கொடுத்து ஆக வேண்டும். அடிக்கடி சம்பந்தப்பட்ட லேபர் ஆபிஸர்கள், தணிக்கை அதிகாரிகள் வந்து பார்வையிடுகிறார்கள். தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பும், உத்திரவாதமும், சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கிறார்கள். இவர்களை யாரை குறிப்பிடுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்பது அகில இந்தியாவில் இருக்கக்கூடிய பிரச்சினை. தமிழகத்தில் அந்தப் பிரச்சினை எழுப்பப்படவில்லை. ஆகவே நான் குறிப்பிடுவது எந்தத் தனியார் பஸ்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்தான் கேட்க வேண்டும். மற்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கக் கூடாது.

**திரு. ஆர். செங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பஸ் கம்பெனிகளில் மினிமம் வேஜஸ் ஆக்ட் படி சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்? அடுத்தபடியாக டிரான்ஸ்போர்ட் ஆக்ட் படி ஒர்க்கிங் அவர்ஸ், லீவ் போன்றவைகள் எல்லாம் அவர்களுக்கு தரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களுக்கு 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதிய விகித சட்டத்தின் அடிப்படையில் குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. 15—2—1979 முதல் அது திருத்தி அமைக்கப்பட்டு நிர்ணயித்த குறைந்த அளவு ஊதிய விகிதங்களை மாற்றியமைக்க ஒரு ஆலோசனைக் குழுவை அரசு நியமித்தது. அதன் அறிக்கை அரசுக்கு கிடைக்கப் பெற்று தொழிலாளர் ஆணையாளர் அவர்களோடு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. விரைவில் தனியார் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் மீண்டும் மாற்றி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைப் பிரச்சினை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொள்கைப் பிரச்சினைப் பற்றி கேள்வி நேரத்தில் கேட்கக் கூடாது என்றும் பதில் அளிக்கக்கூடாது என்றும் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. இருப்பினும் நான் என்னுடைய கேள்வியைக் கேட்கிறேன். கட்டணம் வசூலிப்பதில் தனியார் துறையும், பொதுத் துறையும் ஒரே கட்டணத்தைத் தான் வசூல் செய்கிறார்கள். ஆயிரக்கணக்கான வண்டிகளை நாம் அரசின்



1986 மார்ச் 27]

சார்பில் ஓட்டுகிறோம். அதில் 72 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பலயிடங்களில் தனியார் பஸ்களில் கட்டணத்தை தவறாக வசூலிக்கிறார்கள். ஆனால் தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் கொடுக்கப்படுகின்ற சம்பளம் கிடையாது. 72 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற பஞ்சப்படி சம்பளம் இந்த தனியார் பஸ் தொழிலாளர்களுக்கு கிடையாது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறைந்த அளவு ஊதிய விகித சட்டம் இன்றைக்கும் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி வருடக் கணக்கில் அந்த பரிந்துரை இங்கே தேங்கி இருக்கிறது. அதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அதுமட்டுமல்ல. . . . (குறுக்கீடு)

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. வி. பி. சிந்தன்:** அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே, ஒரு பஸ்ஸிற்கு 7 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதே சட்டத்தை ஏன் இங்கு நிறைவேற்றக் கூடாது. அரசுத் துறையோடு போட்டியிடுகிற அவர்களுக்கு இவ்வளவு சலுகைகளை ஏன் கொடுக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் மிகவும் விவரம் தெரிந்தவர்கள், தொழிற்சங்கத் தலைவர். இந்தக் கேள்விக்கான பதிலை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1986 மார்ச் 27

### ராணிப்பேட்டை தொழிற்பேட்டை மருத்துவ மனை.

295—(*வினா எண். 3924)—திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை 'சிப்காட்' தொழிற்பேட்டை மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) ஆம்.

(ஆ) தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தை வட ஆற்காடு மாவட்டம் பிஞ்சிப் பகுதிக்கு விரிவுபடுத்தி, அந்தப் பகுதியினை, ஏற்கனவே இயங்கி வரும் ராணிப்பேட்டை ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ராணிப்பேட்டை மருத்துவமனையில் ஏற்பட்ட அதிகப்படியான வேலைப் பளுவினை உத்தேசித்து, அதிகப் பணியாளர்களை அம்மருத்துவமனைக்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணை நிலை எண். 1912, தொழிலாளர் துறை, நாள் 6—9—1985-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை "சிப்காட்" பகுதியில் ஏறத்தாழ 17,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்த மருத்துவமனையை போதிய வசதிகளுடன், விரிவு படுத்துவதற்கு அனுமதி கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் மூலமாக ஆய்வுக் குழு ஒன்று வந்து ஆய்வு செய்தது. இந்தத் திட்டத்தினுடைய நிதியோடு, மத்திய அரசிடம் நிதி கேட்டு, இரண்டையும் சேர்த்து செயல்படுத்துகிற திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் தரப்படும்.



1986 மார்ச் 27]

### குனியமுத்தூரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

296—(*வினா எண். 6207)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குனியமுத்தூரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) குனியமுத்தூரில் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் மட்டுமே கட்டும் திட்டம் உள்ளது.

(ஆ) மருந்தகம் கட்ட குனியமுத்தூர் கிராம ச. எண். 368/2-ல் 1.25 ஏக்கர் நன்செய் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நிலத்தை நில எடுப்புச் சட்டத்தின் கீழ் எடுக்க மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடமிருந்து பெறப்பட்ட 4 (1) பிரேரணை அரசின் பரிசீலனையில் இருக்கையில், இந்த நன்செய் நிலத்தில் தற்போது பயிர் செய்யப்பட்டு வருகிறது என்றும் வேறு தகுதியான நிலம் தேர்ந்தெடுத்தல் அவசியம் எனவும் கோவை மாவட்ட வருவாய் அலுவலர் தற்போது தெரிவித்துள்ளார். எனவே வேறு தகுதியான நிலம் தேர்ந்தெடுக்கும் பணி பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குனியமுத்தூரில் நீண்ட நெடுநாட்களாக ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை வாடகைக் கட்டிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் ஏதோ விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியை எடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அரசாங்கம் பார்த்து, அதற்குத் தகுதியான இடங்களை உடனடியாக ஆர்ஜிதம் செய்து, தொழிலாளர்கள் தங்குவதற்கான எல்லா வசதிகளுடன் அந்த இடத்தில் மருத்துவ மனையைக் கட்டித் தருவதற்கு, உடனடியாக உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் அவசியமாக குனியமுத்தூரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை அமைய வேண்டுமென்பதிலே, மாண்புமிகு உறுப்பினருக்கு

இருக்கின்ற அக்கறையைப் போலவே, அரசுக்கும் மிகுந்த ஈடுபாடு இருக்கிறது. அந்த மருந்தகத்தைக் கட்டுவதற்கான விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

### கொடைக்கானலில் சுற்றுலா விடுதிகள்.

297—(*வினா எண். 4133)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் தங்க கூடுதல் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சுற்றுலாத் துறையின் சார்பில் ஒரு இளைஞர் விடுதி கட்ட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. மற்றும் தனியாருக்குச் சொந்தமான மாளிகை ஒன்றைக் கையகப்படுத்தி, அதிகமான தங்கும் அறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் நடவடிக்கையில் உள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன்**: பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல், வெளிநாட்டுப் பயணிகள் வருகின்ற முக்கியமான கோடை வாசஸ்தலமாக இருக்கிறது. அதை 'இண்டர்நேஷனல் டூரிஸ்ட் ஸ்பாட்' ஆக அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த சுற்றுலாத் தலத்தையும் சர்வதேச சுற்றுலா வளாகம் என்றோ தேசிய சுற்றுலா வளாகம் என்றோ அறிவித்து நடவடிக்கைகள் எடுப்பது வழக்கமில்லை. அந்தத் தலத்தினுடைய முக்கியத்துவம் கருதி அங்கே பல்வேறு வசதிகளைச் செய்து கொண்டு வருகிறோம். அதை ஒட்டிப் பயணிகளின் வருகை அங்கே அதிகரிக்கிறது. அந்த முறையிலே அது வளர்ந்து வருகிறது. ஆகவே இப்போது கொடைக்கானலில் அகில உலகத்திலிருந்தும் மக்கள் அங்கே வந்து தங்குகிற வகையிலே வளர்ந்து வருகிறது. புகழ்பெற்ற உலக சுற்றுலாத் தலமாக அது விளங்கி வருகிறது.



**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்**: தலைவர் அவர்களே, கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் தங்க கூடுதல் விடுதிகள் கட்டும் திட்டம் உண்டா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இப்போது எத்தனை விடுதிகள் அங்கே இருக்கின்றன? என்ன வாடகை? சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தால் சலுகைகள் கொடுக்கிறார்களா என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சுற்றுலாத் துறையின் சார்பில் 142 படுக்கைகள் கொண்ட ஹோட்டல் தமிழ்நாடு என்ற விடுதியும் 76 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதியும் அங்கே நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. ஹோட்டல் தமிழ்நாடு என்கின்ற அந்த விடுதியில் பல்வேறு கட்டண விகிதங்கள் இருக்கின்றன. அந்த விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. இளைஞர் விடுதி என்ற அந்த விடுதியில் 7½ ரூபாய், 10 ரூபாய் என்ற வகையிலே கட்டணம் விதிக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகையில் அந்த விடுதிகள் அனுமதிக்கப்படுகிறதா என்று பல முறை இங்கே கேட்கப்பட்டு அது இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. உ. சுப்பிரமணியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் இந்தியாவிலே உள்ள மலை வாசஸ்தலங்களிலே மிக அழகு நிரம்பிய இயற்கை எழில் கொஞ்சும் கோடை வாசஸ்தலமாக இருக்கிறது. அங்கே பெரும் பணக்காரர்களும் மேல் தட்டிலே இருக்கிறவர்களும் செல்வதற்கும் சென்று தங்குவதற்கும் வசதிகள் உள்ளன. சாதாரண மக்கள், நடுத்தர மக்கள், கீழ்தட்டிலே இருக்கிற மக்களும் சென்று தங்குகிற அளவுக்கு எல்லோரும் தங்குகிற முறையிலே விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று ஒரு காலத்திலே கொடைக்கானல் என்பது பணக்காரர்கள், உயர்ந்த அதிகாரிகள் மாத்திரமே சொந்த பங்களாக்களைக் கட்டித் தங்குகிற வழக்கம் இருந்து வந்தது. ஆனால் சமீப காலத்திலே அது மக்களால் பெரிதும்

[1986 மார்ச் 27

கவரப்பட்டு சாதாரண மக்களும் அங்கே வருகின்ற முறையில் அவர்களின் வருகை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. ஆகவே நடுத்தர மக்களும குறைந்த செலவில் தங்குகிற அளவுக்கு ஏழை மக்களும் அங்கே வந்து தங்க வேண்டுமென்ற அளவில் சுற்றுலாத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அங்கே ஹோட்டல் தமிழ்நாடு விடுதியில் நடுத்தர மக்களும் தங்குகிற அளவுக்கு கட்டணம் விதிக்கப்படுகிறது. இளைஞர் விடுதியிலே 5 ரூபாய், 7½ ரூபாய், 10 ரூபாய் என்ற வகையிலே கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. இவையெல்லாம் சாதாரண, நடுத்தர மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு தனியாருடைய நிறுவனத்திற்குச் சொந்தமான நல்ல பரப்பளவுள்ள ஒரு மாளிகை அடங்கியிருக்கிற இடத்தைக் கையகப்படுத்துகிற முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது.

### ஜவ்வாது மலையை சுற்றுலா மையமாக்கல்

298—(* வினா எண். 4524)—**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையை சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஜவ்வாது மலை 3,500 அடி உயரத்திலே நல்ல சீதோஷ்ண நிலையிலே இருக்கிறது. அதைத் தவிர ஹாலி வால் நட்சத்திரம் என்று பிரமாதமாகப் பேசப்படும் அந்த நட்சத்திரத்தைக் காணக்கூடிய முறையிலே உள்ள காவலூர் வான ஆராய்ச்சி நிலையம் அங்கே தான் உள்ளது. அது தவிர தமிழகத்திற்குச் சந்தன மரங்களை அதிகமாகத் தந்து அதன் மூலமாக வருடத்திற்கு 8 கோடி



1986 மார்ச் 27]

ரூபாய்க்கு வருவாய் அளிக்கக்கூடிய மலையாக இருக்கிறது. அங்கே நடுத்தர மக்கள் வந்து தங்குகிற வகையிலே சுற்றுலா மையமாக பின்வரும் காலங்களிலேயாவது ஆக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஏலகிரி மலையை மாவட்ட உலாத்தலமாகக் குறிப்பிட்டு அதை அபிவிருத்தி செய்வதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே அவைகள் முடிவுற்றதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று ஜவ்வாது மலையை அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-20)

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி மாதத்திலேகூட நமது பாரதப் பிரதமர் இராஜிவ் காந்தி அவர்கள் அங்கே வந்து காவலூரில் உள்ள வான் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்த்தும், மலையின் எழிலைக் கண்டு ரசித்தும் உள்ளார்கள். அது தவிர, வசதி படைத்தவர்கள் ஊட்டி, கொடைக்கானல் என்று போவதற்கு வசதி இருக்கின்றன. ஆனால் நடுத்தர மக்கள் சென்று அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் ஜவ்வாது மலையைச் சுற்றுலா மையமாக ஆக்கினால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதை அமைச்சரவர்கள் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்னர் கேட்ட கேள்வியையே மீண்டும் வேறு வார்த்தைகளால் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்பே பதில் சொல்லி விட்டேன். வட ஆற்காடு மாவட்டத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற அந்த ஜவ்வாது மலையைவிட ஏலகிரி மலைக்கு அதிகமான மக்கள் சென்று தங்குகின்ற பழக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பலருக்குச் சொந்தமான கட்டிடங்களும் அங்கே இருக்கின்றன. பக்கத்திலே இருக்கின்ற மலைதான் ஏலகிரி மலை. ஒரு மாவட்டத்தில் ஒரு

மலைவாசஸ்தலத்தை உருவாக்கினாலே அது பயனுள்ளதாக இருக்கும். ஜவ்வாது மலை இன்னும் மக்கள் அதிகமாகச் செல்லாமல் இருக்கின்ற ஒரு பகுதியாகும். ஆகவே, Virgin Land என்று சொல்லப்படும் அந்தப் பகுதியிலே நாம் இன்னும் அதிக மக்களை அனுப்பி சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்துவிடக் கூடாது. இன்னும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற சந்தன மரக் காடுகளுக்குப் பல சேதாரங்களையும். தொல்லைகளையும் உருவாக்கக் கூடிய இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது என்று தான் அரசு கவனமாகப் பரிசீலிக்கின்றது. ஆகவே, வடார்க்காடு மாவட்டத்தில், உறுப்பினரவர்கள் சொன்னதைப் போன்று கொடைக்கானல் அல்லது நீலகிரி போன்ற இடங்களுக்குச் செல்வதைப் போன்று, எழை எளிய மக்கள் பக்கத்திலேயே இருக்கின்ற மலைவாசஸ்தலத்தை அனுபவிக்க எலகிரி மலை, ஜவ்வாது மலையை விட எந்த வகையிலேயும் குறைந்தது அல்ல. மாண்புமிகு பிரதமர் அவர்கள் வந்தார்கள் என்றால், அங்கே தொலைநோக்குக் கருவி இருக்கிற காரணத்தினால் வந்தார்கள். அப்படிப்பட்ட பாதுகாப்பான கருவிகள் பாதுகாக்கப்படுகின்ற இடத்தில் அதிகமான மக்களை அனுப்பினால் அது அந்தச் சுற்றுப்புற சூழலையும் பாதிக்கும், இயற்கைத் தன்மையையும் கெடுக்கும் பல விதமான பாதகங்களுக்கு வழிவகுக்கும். ஆகவே எலகிரி மலையை அதிக கவனத்தோடு நாம் அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் காவலூரில் ஆசியாவிலேயே பெரிய வான் ஆராய்ச்சி தொலை நோக்குக் கண்ணாடி அமைக்கப்பட்டிருக்கிறது. இதைக் காண்பதற்காக அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் தங்குவதற்கு குறைந்த கட்டணத்தில் விடுதியைச் சுற்றுலாத் துறையின் மூலம் அமைப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தத் தொலைநோக்குக் கருவியைப் பார்த்துவிட்டு உடனே திரும்பிவிட வேண்டுமே தவிர அங்கேயே தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து பயன் இல்லை. அப்படிச் செய்தாலும் அங்கே தங்கவும் மாட்டார்கள். காரணம், வேறு விதமான மகிழ்ச்சி தரத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறவோ அல்லது கிடைக்கவோ வாய்ப்பு இல்லை.

### மணப்பாறை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் திருப்பணி

299—(*வினா எண். 5950)—திரு. க. சோலைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் புனரமைப்பிற்கு அரசு மானியம் எவ்வளவு தொகை வழங்கியுள்ளது?

(ஆ) அத் திருக்கோயிலில் ராஜகோபுரம் கட்ட அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) ரூ. 98,850.

(ஆ) இல்லை.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயில் புனரமைப்புக்காக அரசு உதவித் தொகை வழங்கி வேலை சிறப்பான முறையில் நடைபெற்றிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதைப்போல, சமீபத்தில் இராஜகோபுரம் கட்டக் கூடிய கோரிக்கையை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள்; அத்துடன் அமைச்சரவர்களிடத்திலேயும் சொல்லப்பட்டு இருக்கிறது. முன் தொகையாக, பங்குத் தொகையாக அறங்காவலர்களும், பொதுமக்களும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மீதித் தொகையைக் கொடுத்து, அந்த இராஜகோபுரம் உயர்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்டுகின்ற முயற்சியில் அங்கே இருக்கின்ற மக்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். திருப்பணிக் குழு அமைக்கப்பெற்று, அந்த இராஜகோபுரத் திற்கான திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, அரசுக்கு அனுப்பப் படுமேயானால், அதிலே பொதுமக்களினுடைய பங்கு எவ்வளவு என்பதைத் தெரிந்து கொண்டு அரசு அல்லது அறநிலையத்துறை மற்ற ஆலயங்களின் மூலம் எந்த அளவிற்கு உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்து, எப்படியும் அந்த இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்றுவதற்கு அரசு உதவியாக இருக்கும்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பங்குத் தொகை கட்டுகிற நேரத்தில் திட்ட மதிப்பீடு இராஜகோபுரம், திருமண மண்டபம் இவற்றிற்கு சேர்த்து கொடுக்கப்பட்டு அதற்குரிய பங்குத்தொகை கட்டினால் அங்கே திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபம் கட்டுகிற அந்தக் கொள்கை முடிவு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே திருப்பணி வசூல் செய்து இராஜகோபுரம் கட்டுகிற முயற்சிகள் ஒருபுற மிருந்தாலும் திருமண மண்டபம் கட்டவேண்டுமென்ற முயற்சியை அறநிலையத் துறைக்கு முறையான மனுக்கள் அல்லது திட்ட மதிப்பீடுகள் வந்தால் மேற்கொண்டு நிறைவேற்றித் தரும்.

**பல்கலைக் கழகங்களில் சிறுதொழில் கல்வி முறை**

300—(*வினா எண். 2768)—**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மாணவர் களுக்கு சிறுதொழில் துவங்குவதற்கான கல்வி முறையை (Entrepreneurship) எல்லா பல்கலைக் கழகங்களிலும் புகுத்த அரசு நடவடிக்கை எதும் எடுத்துள்ளதா?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழ் நாடு பல்கலைக் கழகங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மாணவர்களுக்கு கீழ்க்கண்ட வகுப்புகள் நடத்தப்படுகின்றன:—

**வேளாண்மை பல்கலைக் கழகம்:**

மலைப் பயிர்கள் சாகுபடி, பயிர் பாதுகாப்பு மற்றும் பட்டுப் பூச்சி வளர்ப்பு குறித்து டிப்ளமோ படிப்பு.

அழகப்பா பல்கலைக் கழகம்:

வேதி இயல் துறை என்ற முதுகலைப் பட்ட வகுப்பு, கம்ப்யூட்டர் பெருஞ்சான்றிதழ் படிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்:

1. ஈட்டுறுதி (Insurance Career) வாழ்க்கைத் தொழிலாக கொள்வோருக்கு பகுதி நேர டிப்ளமோ படிப்பு.

2. செயல் முறை பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டப் படிப்பு.

3. பொறியியல் துறையில் தொழிற்சாலைகள் குறித்த படிப்பு.

4. மேலாண்மை உளவியல் துறையில் முதுகலைப் பட்டப் படிப்பு.

**அண்ணா பல்கலைக் கழகம்.**

உற்பத்தியியல் மற்றும் இயந்திரவியல் மாணவர்களுக்கு "தொழில் முனைவு திறன் மற்றும் தொழிற்சாலை உருவாக்கும் முறை" என்ற பாடம் மற்றும் "நிர்வாகம் மற்றும் தொழில் முனைவு திறன் துறை" துவங்கி இருக்கின்றன. மேலும் தொழில் முனைவு முன்னேற்ற மையம் ஒன்றை நிறுவுவதற்கான கருத்துரு தயாராகி வருகிறது.

[1986 மார்ச் 27

## அண்ணா பல்கலைக் கழகத்தில் பராமரிப்பு மற்றும் விடுதிப் பிரிவுத் தொழிலாளர்கள்

301—(*வினா எண். 3778)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா பல்கலைக் கழகத்தில் தினக்கூலியாக நீண்ட காலமாக பராமரிப்புத்துறை மற்றும் விடுதியில் பணிபுரிந்து வந்த 73 தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப் படாமல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்களா?

(ஆ) இவர்களை மீண்டும் வேலையில் அமர்த்தி "பணி நிரந்தரம்" செய்யும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) பணிநீக்கம் என்ற முறையில் எந்தவித நடவடிக்கைக்கும் அவர்கள் உள்ளாக்கப்பட வில்லை.

(ஆ) இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பலகலைக் கழகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் 13 ஆண்டுக் காலமாக அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் அவ்வப்போது அவர்கள் வருகையை நிறுத்தியும், மூன்று நாட்கள், நான்கு நாட்கள் அவர்கள் வருகையை நிறுத்தி மீண்டும் பணி கொடுக்கிறார்கள். ஆகவே 13 ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டு வருகிற அவர்களுக்கு பணிப் பாதுகாப்பும் அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதமுமில்லாதிருக்கிற ஒரு சூழ்நிலையை மாற்றி நிரந்தரப் பணி இருக்கிற காரணத்தினால் அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சில பேர்கள் விரும்பத்தகாத முறையில் நடந்துகொண்டதன் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட முறையில் அவர்கள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அல்லாது



1986 மார்ச் 27]

மற்ற ஒழுங்கான முறையில் வேலைக்கு வந்து கொண்டிருக்கிறவர்களைப் பற்றி பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பில் ஆலோசனை சொல்லப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடாக நடந்தவர்களைப் பற்றிய கேள்விக்கு நான் வரவில்லை. ஆனால் அங்கே தொடர்ந்து பத்து பதிமூன்று ஆண்டுக் காலமாக பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படித் தொடர்ந்து பணி செய்து கொண்டிருப்பவர்கள் பணிப் பாதுகாப்பு இல்லாமலிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா? நிரந்தரமான பணியில் நிரந்தரமில்லாத ஆட்களை வைத்துக் கொண்டிருப்பதை விட நிரந்தரமான ஆட்களை வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பல்கலைக் கழக அதிகாரவரம்பிற்குட்பட்டது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை பல்கலைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்வோம்.

## மயிலாடுதுறை மருத்துவமனையில் தொழுநோய் சிகிச்சைப் பிரிவு.

302—(*வினா எண் 1903)—திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் தொழு நோயாளிகளுக்காக புதிய கட்டிடம் (வார்டு) கட்டியும் இதுவரை செயல்படாதது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் தொழுநோய் சிகிச்சைப் பிரிவு 4—3—1985 முதல் செயல்பட்டு வருகின்றது.

**திரு. மு. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் தொழுநோய் பிரிவு செயல்பட்டுக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மருத்துவ மனையில் தொழுநோய் பிரிவில் தனி மருத்துவர் செயல்பட்டு வந்தார். அவர் கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் மாற்றப்பட்டு, இன்னும் அந்த தொழுநோய் பிரிவிற்கு மருத்துவர் இல்லாமல் இருக்கிறது. அதனால் தொழுநோயாளிகள் சிரமப் படுகிறார்கள். எனவே, உடனடியாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனை தொழுநோய் பிரிவிற்கு தனி மருத்துவர் ஒருவரை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நியமிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப் பட்டு இருந்தது. ஆனால், ரீ-வாலிடேட் செய்ய வேண்டுமென்று 29—2—1984 அன்று ஒரு அரசாணையை பிறப்பித்திருக்கிறோம். அதன் அடிப்படையிலே அங்கே மருத்துவர்களும், மற்றும் ஏனைய சிப்பந்திகளும் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தொழுநோய் பிரிவிற்கு மருத்துவர் இல்லை என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சனையைத் தீர்க்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் 12 மருத்துவர்கள் பணி யாற்றுவதாகச் சொன்னார்கள். ஆனால் இப்போது அங்கே 9 மருத்துவர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு தாலுக்கா மருத்துவமனையாக இருப்பதால், அங்கே நோயாளிகள் அதிகம் வருகிறார்கள். எனவே, பற்றாக் குறையாக உள்ள அந்த 3 மருத்துவர்களை உடனடியாக நியமிக்க மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவர்கள் விடுமுறை யில் சென்றிருக்கிறார்கள். லீவ் அப்ளிகேஷன் போட்டிருக்கி றார்கள். ஆகவே, உடனடியாக அந்த 3 இடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழுநோய் ஒழிப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி.**

303—(*வினா எண் 2848)—**திரு. எம். செல்லமுத்து மற்றும் திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் ஒழிப்புத் திட்டத்திற்கென மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கியுள்ள தொகை ஒரு ஆண்டிற்கு எவ்வளவு?

(ஆ) அது எவ்வாறு செலவழிக்கப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) கடந்த மூன்று நிதியாண்டுகளில் இந்திய மைய அரசு சராசரியாக ஆண்டொன்றுக்கு 140 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

(ஆ) தொழுநோயாளர்க்கு மருந்துகள் (சிகிச்சைப் பிரிவு களில் விநியோகிக்க மருந்துகள்) தொழுநோய் சிகிச்சை கட்டடங்கள் மற்றும் தளவாட சாமான்கள், பணியாளர்களின் சம்பளத்திற்கும் செலவழிக்கப்படுகிறது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தொழுநோய் ஒழிப்புத் திட்டத்திற்கு 3 ஆண்டுகளாக, சராசரி ஒரு ஆண்டிற்கு ரூ. 1.40 கோடி மத்திய அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தொழுநோயாளிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக அந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கோருமா? தொழுநோயாளிகள் பல இடங்களில் இருப்பவர்களை பாதுகாப்பு இல்லங்களிலோ அல்லது மருத்துவ மனைகளிலோ கொண்டு வந்து சிகிச்சை அளிக்க ஒரு தனி விரைவுத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 27

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அதற்காக பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாம் மத்திய அரசைத் தொகையாக கேட்க முடியாது. சில திட்டங்களைக் காண்பித்து, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் கேட்கிறோம். அவர்களும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த கட்டமாக, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தொழு நோயாளிகள் எல்லோருக்கும் இப்போது மல்டி டிரக் ரெஜிமென் (எம்.டி.ஆர்.) திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு நாளைக்கு சராசரி ரூ. 18 ஆகிறது. கூடுதல் செலவாவதால், அதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனை எல்லா மாவட்டங்களுக்கும், எந்தெந்த மாவட்டத்தில் தொழு நோயாளிகள் 1 சதவிகிதத்துக்கு மேற்பட்டிருக்கிறார்களோ, அந்த மாவட்டத்தில் முதற் கட்டமாக எம்.டி.ஆர். திட்டத்தை விரிவுபடுத்த இருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஏராளமான மாணவர்களை தமிழக சர்க்காரின் சார்பில் நாம் பரிசோதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே 1980 ஆம் ஆண்டு 18 இலட்சம் மாணவர்களை பரிசோதித்திருக்கிறோம். இப்போது 65 இலட்சம் பேர்களை பரிசோதனை செய்திருக்கிறோம்.

**திரு. கோ. இரகுபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடி தொகுதியில் தனிப்பட்டோர் நிறுவனம் சார்பில் தொழுநோய் மருத்துவ மனை ஒன்றிருக்கிறது. அரசு மூலமாக ஏதாவது சப்சிடி திட்டத்தில் உதவி வழங்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தெளிவுபடுத்துவதற்காகச் சொல்கிறேன். தமிழகத்திலே தனியார்கள் நிரம்ப மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதிலும், வெளி நாடுகளிலே இருக்கக் கூடியவர்கள், ஜெர்மன் போன்ற பல்வேறு நாடுகளிலே உள்ளவர்கள் இதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



1986 மார்ச் 27]

அவர்களுக்கு உதவிப் பணம் கொடுப்பதில்லை. அரசாங்கம் எதற்குக் கொடுக்கிறது என்றால், பிரிவென்டிவ்வாக பரிசோதனை செய்வதற்கு, அந்த வகையில் கொடுக்கிறோம். அந்த மருத்துவமனையில் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நமது தமிழக சர்க்காரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, ஒரு பகுதியைச் சொல்ல விட்டுவிட்டேன். இப்போது நாம் மத்திய அரசாங்க பணத்திலே ஆயிரம் படுக்கைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளை நாம் 50 இங்களிலே ஏற்படுத்தியிருக்கிறோம்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டத்தில் குப்பன்பாளையம் என்ற கிராமத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்கின்ற மக்களின் மொத்த ஜனத்தொகையில், ஏறத்தாழ 30 சதவீத மக்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நோய் வேகமாகப் பரவி, இன்னும் அதிக அளவிலே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களைப் பாதிக்கின்ற அபாய நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சரியான வகையிலே தகவல் கொடுக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். 30 சதவிகிதம் உலகத்தின் எந்தப் பகுதியிலும் கிடையாது. பெரியார் மாவட்டத்திலே 1.5 சதவிதம் இருக்கிறது. அதையே நாம் ஜாஸ்தியாகக் கருதுகிறோம். ஏனென்றால், ( (Prevalence rate) ஆயிரத்திற்கு 15 என்று ஆகிறது. தமிழகத்திலே 204 ஆக இருந்தது 1977-லே; இப்பொழுது 13.8 ஆகக் குறைந்திருக்கிறது.

[1986 மார்ச் 27

## மாநிலத்தில் வழங்கப்பட்ட பாமோலின்

77--(*வினா எண் 3905)--திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 ஆம் ஆண்டு டிசம்பர் வரை தமிழகத்தில் வழங்கப்பட்ட பாமாயில் எவ்வளவு?

(ஆ) அது 5 கிலோ டின்களுக்குப் பதிலாக 2 கிலோ டின்னாக தரப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு 1984 ஆம் ஆண்டு 60,850 டன் உதிரி பாமோலினும், 24,128 டன் டின்களில் அடைக்கப்பட்ட பாமோலினும் ஒதுக்கீடு செய்தது. இந்த எண்ணெய் அவ்வப்போது இருப்புக்கேற்றவாறு மாதாமாதம் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது.

(ஆ) 5 கிலோ டின்கள் வழங்கப்படுவது 1—3—1985 முதல் நிறுத்தப்பட்டு தற்போது குடும்ப அட்டைகளுக்கு உதிரியாகவும், 2 கிலோ டின்களிலும், 1 கிலோ பாலிதீன் பைகளிலும் பாமோலின் வழங்கப்படுகிறது.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான அரசு நடத்துகின்ற கடைகளிலே, ஒரு மாதம் பாமாயில் டின்கள் கொடுக்கிறார்கள்; அடுத்த மாதம் பாமாயில் டின்கள் கொடுப்பதில்லை. அதற்கடுத்த மாதம் தருவதாகப் பெரும்பாலான குடும்பங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. ஆகவே, அந்த பாமாயில் மாதாமாதம் தவறாமல் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, இதற்கு முன்னாலே 5 கிலோ டின்களிலே கொடுத்த காரணத்தாலே, சில இடங்களிலே அதுபோல, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படுகிற சூழ்நிலையிலே, அதனாலே, சில குடும்பங்களிலே மாதாமாதம் பெறமுடியாத



1986 மார்ச் 27]

சூழ்நிலை இருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. இப்பொழுது 1—3—1985 முதல் 5 கிலோ டின் வழங்குவது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாதாமாதம் சமையல் எண்ணெய் தொடர்ந்து எல்லா குடும்பங்களுக்கும் கொடுக்கின்ற விதத்திலே வழங்கப்படும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** பேரவையின் தலைநாயகர் அவர்களே, நம்முடைய அரசு நடத்துகின்ற கடைகளில் எல்லாம் பாமாயில் குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக வாங்க வேண்டுமென்று ஒரு வரையறையினை அரசு கட்டளையாகப் பிறப்பித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால், அந்த நாட்களிலேயே வாங்கவேண்டுமென்று வற்புறுத்துவது முறையாகுமா? ஏழை, எளிய மக்கள் பல்வேறு நிலைகளில் ஊதியங்கள் பெறுவதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, எப்பொழுது வேண்டுமானாலும் வாங்குகின்ற வகையில் வழிவகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மாதத்திலே, தேதியோ, நாளோ, குறிப்பிடப்பட்டிருப்பதாக என்னைப் பொறுத்த வரையில் தெரியவில்லை. அப்படியிருந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1—3—1985-லிருந்து 2 கிலோ, 1 கிலோ பாலிதீன் பைகளிலே பாமாலின் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். அதை மாற்றி, ஏழை எளிய மக்கள் பயன்படுகிற வகையில்—இப்பொழுது பால் கூட ¼ லிட்டர் பாலிதீன் பைகளில் விற்கப்படுகின்றது; அதுபோல்—பாமாலினையும் ¼ கிலோ ½ கிலோ என்ற வகையில், பாலிதீன் பைகளில் கொடுத்தால், கலப்படம் இல்லாத வகையில், பாமாலின் ஏழைகளுக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கும். அதை விடுத்து இப்பொழுது லூசாகக் கொடுக்கிறார்கள். அதில் கலப்படம் இருப்பதாகப் புகார்கள் வருகின்றன. எனவே, அதை விடுத்து, ¼ கிலோ, ½ கிலோ பாமாலின் எண்ணெயை பாலிதீன் பைகளில் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா? அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்குப் பயன் கிடைக்கும் என்பதை அரசு அறிந்து அத்தகைய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 5 கிலோ டின் விநியோகிப்பது நிறுத்தப்பட்டு 2 கிலோ டின்களும் 1 கிலோ பைகளும் விநியோகிக்கப்படுகிறது. இன்னும் அதை 1/2 கிலோ அளவிலே குறைக்க முடியுமா என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசீலிக்கப் படும்.

### போளூரில் நவீன அரிசி ஆலை.

78—(* வினா எண் 4467)—திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூரில் நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. ஜெ. ராஜாபாபு: தலைவரவர்களே, இந்தத் திட்டம் பற்றி கடந்த சில தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, போளூரில் நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பது கேள்வி. அப்படிப் பட்ட செயற்குறிப்பு பரிசிலனையில் இல்லை என்று சொன்னேன். ஆனால் நவீன அரிசி ஆலைகள் மற்ற இடங்களில் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன. அதைப் பற்றி எல்லாம் விவரமாக 2-ந் தேதி மானியக் கோரிக்கையின்போது சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 304, 305 ஆகியவை மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் வேண்டுகோளிற்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.





### கூலிக்கு செய்யும் தொழில் மீதான விற்பனை வரி.

79—(* வினா எண். 514)—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பீஸ் ஒர்க் என்ற முறையில் கூலிக்கு வேலை செய்யும் தொழில்களுக்கு அரசு விதித்துள்ள விற்பனை வரியினைக் கைவிடும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: இல்லை.

### வரிவிலக்கு பெற்ற திரைப்படங்கள்.

80—(* வினா எண் 1740)—திரு. குமரி அனந்தன் மற்றும் திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு வரி விலக்கு பெற்ற திரைப்படங்கள் எத்தனை?

(ஆ) அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (அ) சென்ற ஆண்டு வரி விலக்கு பெற்றத் திரைப்படங்கள் மொத்தம் 14.

(ஆ) வரிவிலக்கினால் அரசிற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ. 1,07,77,471.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: தலைவரவர்களே, வரி விலக்கு என்று சொல்லுகின்ற முறையானது எந்த கோட்பாட்டின் அடிப்படையிலே எடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 27

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** தலைவரவர்களே, இரண்டு வகையான திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

(1) வர்த்தக ரீதியான திரைப்படங்கள்.

(2) சிறுவர்களுக்கான திரைப்படங்கள்.

வர்த்தக ரீதியான திரைப்படங்கள் கீழ்க்கண்ட மூன்று அம்சங்களைப் பெற்றிருந்தால் வரி விலக்கு அளிக்கப்படுகிறது:

(1) இந்தத் திரைப்படம் தமிழ்மொழியில் இருக்க வேண்டும்.

(2) மக்களின் மனதில் பதிந்து, சமுதாயத்தில் ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் ஒரு கருத்து இந்தத் திரைப்படத்தில் இருக்க வேண்டும்.

(3) இந்தத் திரைப்படம் மைய தணிக்கைக் குழுவினால் தணிக்கை செய்யப்பட்டு 'யு' அல்லது 'ஏ' சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

**திருமதி பா. வளர்மதி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையில் பொதுமக்கள் பயனடைகின்ற கருத்துக்களுடைய திரைப்படங்களான 'நாடோடி மன்னன்', 'நம்நாடு' ஆகிய திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** தலைவரவர்களே, நாடோடி மன்னன் வெளிவந்தது 1957 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். எனவே இப்போது இந்தக் கோரிக்கைக்கு அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. இளம்வழுதி:** தலைவரவர்களே, சென்ற ஆண்டு 'மை டியர் குட்டிச்சாத்தான்' என்ற திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு, திடீரென்று வரி விலக்கு ரத்து செய்யப்பட்டது உண்மையா? ஆம் எனில் வரிவிலக்கு எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டது? எந்த அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** தலைவரவர்களே, 'மை டியர் குட்டிச்சாத்தான்' என்ற 3-டி சிறுவர் திரைப் படத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது உண்மை. பின்னால் வரி விலக்கு ரத்து செய்யப்பட்டதும் உண்மை. அதற்குரிய காரணம் வரி இழப்பு அதிகம் இருக்காது என்ற அடிப்படையிலும் முதன் முதலில் வெளிவந்த சிறுவர்களுக்கான '3-டி' திரைப்படம் என்ற அடிப்படையிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பிறகு அதிக அளவில் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டதன் காரணமாக அதை ரத்து செய்தோம். அந்தப் படத் தயாரிப்பாளர்கள் நீதிமன்றத் திற்குச் சென்றார்கள். நீதிமன்றம், ரத்து செய்தது சரியில்லை என்று தீர்ப்பு கூறியது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குத் தலைவணங்கி அதற்குரிய காலத்தை இந்த அரசு நீட்டித்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி மாற்றம் செய்யப்படக்கூடிய படங்களுக்கு இந்த மாதிரி வரிவிலக்கு இல்லை என்று சொல்லி, தமிழிலே தயாரிக்கப்படக்கூடிய படங்களுக்கு மட்டும் வரிவிலக்கு அளிப்பது என்ற வகையில் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** பேரவைத் தலைவரவர்களே, வர்த்தக ரீதியிலான திரைப்படங்களைப் பொறுத்தவரையில் அவை தமிழ் மொழியில் இருந்தால்தான் வரிவிலக்கு என்று இந்த அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் 9 படங்களுக்கு வரிவிலக்கு அளித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்தப் படங்கள் என்பதை விவரித்தால் நாங்கள் எல்லாம் கேட்டு மகிழ்கிற வாய்ப்பு உருவாகும். எனவே அதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 10 தமிழ் படங்களுக்கும் 4 ஆங்கிலப் படங்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது என்பதைச் சொன்னேன். ஆக மொத்தம் 14 திரைப்படங்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் 10 படங்கள் அல்ல. அக்ரோபேடிக் நைட்ஸ் — ஆங்கிலம், சிம்ப்மேட் சீரிஸ்—ஆங்கிலம், ராஜு & டிங்கு—தமிழ், வீரபாண்டிய கட்டபொம்மன் —தமிழ், புதுமைப் பெண் — தமிழ், சுமங்கலிகோலம் — தமிழ், அழகிய மக்கள் — தமிழ், உன்னோடு நான் வருவேன் — தமிழ், கோடுகள் இல்லாத கோலம் — தமிழ், டிக். பை. தி பிக்கஸ்ட் டாக் இன் தி வோர்ல்டு — ஆங்கிலம், இயற்கையின் அதிசயங்கள் — தமிழ், புதிய சங்கமம் — தமிழ், மை டியர் குட்டிச்சாத்தான் — மலையாளத்திலிருந்து தமிழில் டப்பிங் ஆனது, எ ஹார்ஸ் கால்டு ஜெஸ்டர்—ஆங்கிலம் ஆகிய 14 படங்களுக்கு வரி விலக்கு சென்ற ஆண்டு அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு 'ரூலிங்'கை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

'Noticing some members conversing with the Ministers in the treasury benches from behind, the Chair observed :—"Until the question hour is over, nobody should talk to the Ministers from behind and members should not walk across the House during question hour.".

## துவாக்குடி பேரூராட்சியில் சிறு தொழிற் கூடங்கள்.

306—(*வினா எண். 3990)—திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி — துவாக்குடி பேரூராட்சியில் சிறு தொழிற்கூடங்கள் கட்டுவதற்காக அரசு கையகப்படுத்தி உள்ள நிலம் எவ்வளவு?

(ஆ) அதில் கட்டப்பட்ட தொழிற்கூடங்கள் எத்தனை?

(இ) தொழிற்கூடம் கட்டப்படாமல் உள்ள கையகப்படுத்தப்பட்ட நிலப்பகுதி எவ்வளவு?



மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: (அ) 478 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) சிட்கோ 15 பெரிய தொழிற்கூடங்களையும், 29 சின்னஞ் சிறு தொழிற்கூடங்களையும் கட்டி இருக்கிறது. தனியார் தொழில் முனைவோருக்கென ஏறக்குறைய 64 தொழில் கூடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

(இ) 20 ஏக்கர் மேம்படுத்தப்பட்ட மனைகளாக ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது. இது தவிர 90 ஏக்கர் நிலம் மேம் படுத்தப்படாமல் கையிருப்பில் உள்ளது.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியில் உள்ள துவாக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட இடங்களைக் கையகப்படுத்தி அதிலே தொழில் கூடங்களை அமைத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் உள்ள நிலங்களை அரசு வழங்குவதைப் பொறுத்த வரையில் ஒரு நபருக்கு ஒரு இடம்தான் கொடுப்பது என்று விதி இருக்கிறதா? அல்லது அதே நபருக்குப் பல பெயர்களில் பல இடங்களைக் கொடுக்கலாம் என்று அரசின் விதி ஏதாவும் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் தனி நபர்கள் தொழில் கூடங்கள் அமைக்க ஒதுக்கீடு பெற்று, தொழில் கூடங்கள் அமைக்காமல் வேறு யாரும் அந்த இடத்தை பயன்படுத்திக் கொள்ளாமல் அங்கே ஆக்கிரமிப்பு போல வைத்துள்ளார்களே, அப்படி இருப்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து, ஒதுக்கீடு செய்திருக்கிற இடத்தில் ஆக்கிரமிப்பை நீக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவர்கள் அங்கே ஏறத்தாழ 64 தொழிற் கூடங்களை கட்டியிருக்கிறார்கள். தவறுகள் ஏதாவது நடந்திருப்பின் சுட்டிக் காட்டினால், அந்தத் தவறுகளை களைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற போது சில இடங்கள் இன்னமும் தொழில் கூடம் கட்ட பயன் படுத்தப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தூவாகுடி போன்ற இடத்தை எல்லாம் அரசுக்கு கையகப் படுத்துகிறபோது, அது மைனர் பஞ்சாயத்தாக இருந்தது. இப்போது அது மேஜர் பஞ்சாயத்தாக செலக்ஷன் கிரேடு பேரூராட்சியாக ஆகியிருக்கிறது. இன்றைக்கு தமிழக அரசு போடுகின்ற நல்ல திட்டங்களைப் பயன்படுத்துவதற்கு அங்கே எந்தவிதமான இடமும் கிடையாது. ஆகவே அதுபோன்ற பல திட்டங்களை அரசு அமல்படுத்த, அந்த மக்களுக்கு நன்மையைச் செய்வதற்கு ஏதுவாக, விவசாயிகளிடத்திலிருந்து அரசு என்ன விலைக்கு வாங்கியதோ, அதே விலைக்கு பேரூராட்சிக்கு கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூவாகுடி ஒரு காலத்தில் கிராம பஞ்சாயத்தாக இருந்தாலும் இப்போது பேரூராட்சியாக ஆகியிருக்கிறது. அப்படி பேரூராட்சியாக இருக்கிற இடத்தில் ஏராளமான தொழிற் கூடங்களை கட்ட வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதையே சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏறத்தாழ 478 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதில் 388 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டு மனைகளாகவும், தொழில்கூட கட்டிடங்களாகவும் கட்டி ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் கையிருப்பிலே 20 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்ட மனைகளாகவே இருக்கின்றன. யாராவது தொழிற்சாலைகள் கட்டுவதற்கு முன் வருவார்களேயானால், அவர்களுக்கு அந்த 20 ஏக்கர் நிலத்தில் எவ்வளவு தேவையோ அதைத் தரமுடியும். மேற்கொண்டு இருக்கிற 90 ஏக்கர் நிலம் அப்படியே மேம்படுத்தப்படாத நிலமாக இருக்கிறது. தேவைப்படுகிறபோது மேம்படுத்தப்பட்டு, மனைகளாக ஆக்கி, தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு தேவையான அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்படும், என்பதையும் இவைகள் தொழிற்கூடங்கள் கட்டுவதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் வேறு காரியங்களுக்கு தருவதற்கு அரசாங்கத்தால் இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





## திருமயத்தில் தொழிற்பேட்டை.

307—(*வினா எண் 4607)—**திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தொழிற் பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** (அ) ஆம்.

(ஆ) திருமயத்தில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான முயற்சிகள் புதுக்கோட்டை மாவட்டத் தொழில் மையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழிற்பேட்டை அமைக்கத் தகுதியான இடமும் தொழில் முனைவோரும் முடிவு செய்யப்பட்ட பின், தொழிற்பேட்டை அமைக்கும் பணியினை 'சிட்கோ' மேற்கொள்ளும்.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்திலே தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல கந்தர்வகோட்டை, அன்டை குளம், கீரனூர், அறந்தாங்கி போன்ற பகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்பு குறித்து அரசின் பரிசீலனையில் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி திருமயத்தைப் பற்றியதாக இருப்பினும், எந்தெந்தப் பகுதியில் தொழிற் சாலைகள் தேவைப்படுமோ, அந்த இடங்களில் எல்லாம் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு சிட்கோ நிறுவனமும், அரசும் தயாராக இருக்கிறது. இருந்தாலும் கூட இதுவரையில் பல இடங்களில் தொழிற்பேட்டையை உருவாக்க தொழிற் கூடங்களைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பரவலாக கட்டப்பட்ட அப்படிப்பட்ட தொழிற்கூடங்களில் பல பயன்படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால் தற்போது, தொழிற்பேட்டை எந்தப் பகுதியில் தேவை என்று கருதப்படுகிறதோ, அந்தப் பகுதியில் குறைந்தபட்சம் 10 பேர்களாவது போதுமான நிதி வசதியுடன் விண்ணப்பம்

செய்து தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அந்த இடங்களில் தொழிற்பேட்டையை அமைத்துத் தர அரசு முன் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## அனாதை இல்லங்களுக்கு நிதி உதவி.

39—(* வினா எண் 2988)—திரு. எஸ். இராசாராமன், திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனாதை இல்லங்களில் உள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ) 1984-85-ல், 16 புதிய அரசு அனாதை இல்லங்கள் திறக்கப்பட்டன. இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகள் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 வழங்க அரசு ஆணை நிலை எண் 2143, சமூக நலத் துறை, நாள் 4—9—1984-ல் ஆணையிடப்பட்டது. அதேபோன்று இதற்கு முன்னால் இயங்கி வரும் நான்கு அரசு அனாதை இல்லங்களிலும் குழந்தை ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 36-லிருந்து ரூ. 60-க்கு அரசு ஆணை நிலை எண் 1556, சமூக நலத் துறை, நாள் 29—7—1985-ல் உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 36-லிருந்து ரூபாய் 60 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தினம் மூன்று வேளை சாப்பாட்டிற்கு மாதத்திற்கு 60 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாக இருக்கிறது. இந்தத் தொகையில் தரமான உணவு அளிக்க இயலுமா என்பதை அரசு கவனிக்க வேண்டும். பல அனாதை இல்லங்கள் மிகவும் மோசமான பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பதவியேற்றதற்குப் பிறகு தான் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 36-லிருந்து ரூபாய் 60 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை அந்தக் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்கு போதுமானதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல அனாதை இல்லங்கள் சரியாக இயங்கவில்லையென்ற கருத்தை இங்கே குறிப்பிட்டார்கள். எந்த இல்லம் சரியாக இயங்கவில்லையென்ற தகவலைத் தெரிவிப்பார்களானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி :** தலைவர் அவர்களே, குழந்தைகளின் உணவுத் தொகை ரூ. 36-லிருந்து ரூ. 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மக்களின் வாழ்க்கைச் செலவுகள் கூடியிருக்கிற இந்த நிலையில் அமைச்சர்களிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் வரையில் நாம் சம்பளத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. பரிதி இளம்வழுதி :** தலைவர் அவர்களே, அந்த அனாதைச் சிறுவர்களுக்கு அரசு தான் உதவ வேண்டும். மனிதாபிமான கண்ணோட்டத்தோடு அந்தச் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உணவுத் தொகை மேலும் உயர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, மனிதாபிமானத்தோடு தான் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகளின் உணவுத் தொகையை 36 ரூபாயிலிருந்து 60 ரூபாயாக இன்றைக்கு உயர்த்தி இருக்கிறார்கள். இந்த 60 ரூபாய் 1985 ஆம் ஆண்டு தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த 60 ரூபாய் அந்தக் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்கு போதுமானதாக

இருக்கிறது. அப்படி போதுமானதாக இல்லையென்றால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன் :** தலைவர் அவர்களே, பல அனாதை இல்லங்களில் இந்த 60 ரூபாயில் குழந்தைகளுக்கு உணவு வழங்க இயலாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே தான் இந்தத் தொகை போதுமானதாக இல்லையென்று குறிப்பிட்டேன். பல அனாதை இல்லங்களின் கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றனவென்பதை அரசு அறியுமா என்றும் கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாக தகவல் கொடுக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கபாலீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் அனாதை இல்லம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அனாதை இல்லம் எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்ற ஆபத்தான நிலையில் இருப்பதை அரசு அறியுமா? அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, அரசு அனாதை இல்லங்கள் இருக்கிற கட்டடங்கள் சரியான முறையில் இல்லையென்றும், அவை பழுதடைந்த நிலையில் இருக்கின்றனவென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எந்தெந்த இடங்களில் பழுதடைந்து இருக்கிறதோ அந்தக் கட்டடங்களை எல்லாம் பழுதுபார்க்கிற நடவடிக்கையை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும். கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான கட்டடம் சரியான நிலையில் இல்லை, பழுதடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டடத்தைப் பழுது பார்க்கிற நிலையை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.



**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அனாதை இல்லங்கள் எங்கெல்லாம் சரியாக பராமரிக்கப்படவில்லையோ, அதனுடைய விவரங்களைப் பற்றி சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரில் உள்ள அனாதை இல்லம் பற்றி பல ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டும் அது இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கட்டிடம் இருந்துவிடுமோ என்று அச்சப்படுகிற நிலைமை இருக்கிறது. தற்போது அந்த இல்லம் வாடகைக் கட்டிடத்தில் தான் இருந்து வருகிறது. எனவே அதை உடனடியாக வேறு கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் இருக்கின்ற அந்த அரசு அனாதை இல்லம் வேறு கட்டிடத்திற்கு மாற்றப்படும்.

**திரு. சு. பாலன்:** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அன்பகச் சிறுவர்களுக்கு மாதம் 60 ரூபாய் அரசு வழங்குகிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். இந்த 60 ரூபாயிலே தினம் அவர்களுக்கு 2 ரூபாய் தான் ஒரு நாளைக்கு வருகிறது. அப்படியானால் காலை உணவுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, மதிய உணவுக்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, இரவு உணவிற்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை உணவுக்கு எவ்வளவு, மதிய உணவுக்கு எவ்வளவு, இரவு உணவுக்கு எவ்வளவு என்பது பற்றி என்னிடம் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளுக்கு மாதம் 60 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பது எல்லாம் மாதம் 60 ரூபாய் என்று சொன்னால்,

ஒரு நாளைக்கு 2 ரூபாய்தான் வருகிறது. அப்படியானால் ஒரு வேளைக்கு 70 பைசாதான் வருகிறது. அனாதைக் குழந்தைகளை அரசு ஏற்றுக்கொண்டால், அவர்கள் அரசின் குழந்தைகளாக மாறிவிடுகிறார்கள். எனவே தனியார் குழந்தைகளைவிட இவர்கள் இன்னும் அதிக மேன்மையாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு இன்னும் 1 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி, ஒரு வேளைக்கு ஒரு ரூபாய் என்கிற அளவிற்கு அவர்களுக்கு உணவு அளிக்க அரசு முன்வருமா? அமைச்சர் அவர்கள் இதுகுறித்து வாக்குறுதி அளிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளை, அரசுக் குழந்தைகளாக ஏற்றுத்தான் அவர்களுடைய நலனில் அக்கறை காட்டி அவர்களுக்கு கொடுக்க வேண்டிய உணவுகளின் தொகையை மேலும் அரசு உயர்த்திக் கொடுத்து இருக்கிறது. எனவே குழந்தைகளுக்கு தேவை இருப்பின், நிச்சயமாக அரசு உயர்த்தும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தளநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களும், மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையாரும், அனாதைச் சிறுவர்கள் என்று சொல்வதை விட, அந்தக் குழந்தைகள் வாழும் இடத்திற்கு நம்முடைய தமிழக அரசு 'குழந்தைகள் அன்பகம்' என்று அழகான பெயரை வைத்திருக்கிறது. ஆகவே அவர்களை அன்பகத்துக் குழந்தைகள் என்று அழைத்தால் சிறப்பாக இருக்கும். அப்படி அழைக்க நம்முடைய அமைச்சர் பெருந்தகையார் அவர்கள் முன்வருவார்களா ? நம்முடைய அரசு நடத்தும் அன்பகச் சிறுவர்களுக்கு வழங்கப் படும் தொகை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார்கள் சிலர் அனாதை இல்லங்கள் வைத்துக் கொண்டு, அதை வாணிகமாக ஆக்கி, அந்தக் குழந்தைகளை சாகடிக்கின்ற நிலைமைகள் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கையை எடுத்து இருக்கின்றீர்கள் ? அமைச்சர் பெருந்தகையார் அவர்கள் என்பதை இந்த மன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளை அரசுக் குழந்தைகளாக ஏற்று, இந்த அரசு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. அந்தக் குழந்தைகள் எல்லாம் சரியான முறையில்தான் பராமரிக்கப்பட்டுக் கொண்டு வளர்க்கப்படுகிறார்கள். தனியார் நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் சரியான முறையில் இல்லாமல், விற்கப்படுகின்ற நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட எந்தத் தகவலும் எனக்கு வரவில்லை. இனிமேல் வந்தால், அதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனை இடங்களில் அனாதை இல்லங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அனாதை இல்லங்கள் அமைப்பது எந்தக் கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது ? அந்த அனாதை இல்லங்களுக்குச் செலவு செய்கின்ற பணம் முழுமையாக தமிழக அரசினுடைய பணம் தானா ? அப்படி இந்த அனாதை இல்லங்களை ஏற்படுத்துகின்ற போது, இந்த அனாதை இல்லங்களுக்கு அந்தப் பகுதியில் உள்ள வளமான திருக்கோயில்களின் உதவியோடு பராமரிப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 20 அரசு அனாதை இல்லங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. திருக்கோயில்கள் நடத்துகின்ற அந்த திருப்பணிகளின் மூலமாக அனாதை இல்லங்களை நடத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

### பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள்.

40--(*வினா எண். 3349)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1986 மார்ச் 27

(ஆ) ஆம் எனில், மதுரையில் அவ்விடுதி எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** (அ) இல்லை.

(ஆ) மதுரையில் ஏப்ரல் 1981 முதல், பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று சமூக நலத் துறையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் பணியாற்றும் பெண்களுக்கான விடுதிகள் அமைக்கப்படவில்லை என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு இப்படி எல்லா மாவட்டங்களிலேயும் ஆரம்பிக்க முடியவில்லை என்றாலும் சில சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் இப்படிப் பணியாற்றுகிற பெண்களுக்கான விடுதிகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி அவர்கள் ஆரம்பிக்க முன்வந்தால், அதற்கு அரசு என்னென்ன வசதிகளைச் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிபுரியும் மகளிர் விடுதி தனியார் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு நியதியை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் மகளிர் நலம், சமூக நலம், மகளிர் கல்வியில் ஈடுபாடுடைய தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் இந்தப் பணி புரியும் பெண்களுடைய விடுதியை நடத்தலாம் என்ற முடிவை அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதைப்போல உள்ளாட்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் பணி புரியும் மகளிர் விடுதியை நடத்தலாம். இந்த விடுதியை கட்டுவதற்கான கட்டிடத்தின் மொத்த மதிப்பீட்டில் 75 விழுக்காடு தொகையை மத்திய அரசு நான்கு தவணைகளில் வழங்கும். மத்திய அரசின் மானியம் பெற்ற பின்பு மாநில அரசுக்கு மானியம் கோரி விண்ணப்பித்தால் கட்டிடத்தின் மொத்த மதிப்பீட்டில்



1986 மார்ச் 27] [திருமதி கோமதி சீனிவாசன்]

15 விழுக்காடு அல்லது 35,000 ரூபாய், இவற்றில் எது குறைவோ அத்தொகையை மாநில அரசு வழங்கும். மீதியுள்ள செலவினத்தை அந்த நிர்வாகமே ஏற்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) சமூக நலக் காடுகளில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுவது குறித்து.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "சமூக நலக் காடுகள் சிறப்புத் திட்டத்தில் யூகலிப்டஸ் மரங்கள் நடுவதால் சுற்றுப்புற சூழல்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூகலிப்டஸ் செடிகள் நடுதல், சுற்றுப்புற சூழல்களை பாதிக்கும் என்ற கருத்து எந்த விஞ்ஞான காரணங்களின் அடிப்படையிலும் சரியானதல்ல என்று தெரிகிறது.

கற்பூரத் தைல மரங்கள் அதிக தண்ணீரை உறிஞ்சி நிலத்தையும் மற்ற பயிர்களையும் கெடுக்கின்றன என்பதற்கு இதுவரை எவ்வித விஞ்ஞான ஆதாரமும் கிடைக்கவில்லை. இருந்தபொழுதிலும், பொது மக்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் சமூக நலக் காடு திட்டத்தில் அரசு தரப்பில் கற்பூரத் தைல மரங்கள் அதிகம் நடக்கூடாதென்று ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. 1984 ஆம் வருடத்தி லிருந்து சமூக வனவியல் திட்டத்தின் கீழ் சமுதாய நிலங்களில் யூகலிப்டஸ் மரங்கள் நடப்படவில்லை. இதற்கு முன்பு கூட

அந்தந்த வருடத்தில் நடப்படும் மொத்த பரப்பில் 6 விழுக்காடுகளுக்கு அதிகப்படாமல் சிறிய அளவில்தான் கற்பூர மரங்கள் நடப்பட்டு வந்தன. பெரும்பாலான பரப்பளவில் கருவேல மரங்களும் மற்ற மரங்களும் நடப்பட்டன.

இருந்தபோதிலும் விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த இடங்களில் நடும் பொருட்டு விநியோகம் செய்வதற்காக மற்ற மர வகை செடிகளுடன் யூகலிப்டஸ் செடிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்ற மரவகைச் செடிகளை விட அதிகமாக யூகலிப்டஸ் செடிகளை ஆதரிக்கின்றனர். ஏனெனில், அது வளர்க்க சுலபமாகவும், விரைவில் வளரும் தன்மையுடையதாகவும் அதிக அளவில் உற்பத்தித் திறனுடையதாகவும் மேலும் நடுவதற்கு பொருளாதார முறையில் லாபகரமானதும் கூட. விவசாயி, தான் நடுவதற்கேற்ற மரவகைச் செடிகளை அவரே தேர்வு செய்து நடும் உரிமை உள்ளவர்.

### (ஆ) ஆத்தூர் ஒன்றியம் மஞ்சிறை கிராமத்தில் வயிற்றுப் போக்கால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் சி. பழனி முத்து, சு. பாலன், மா. மணிமாறன் மற்றும் இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மஞ்சனி கிராமத்தில் கடந்த 10—3—1986-லிருந்து வயிற்றுப் போக்கு காரணமாக மூன்று பேர் இறந்துள்ளார்கள். மேலும் பல குழந்தைகளும், பெரியவர்களும் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டாரத்திலுள்ள மல்லிக்கரை ஆரம்ப சுகாதார நிலையத்தின் எல்லைக்குட்பட்ட மஞ்சனி என்ற கிராமத்தில் 17—3—1986 ஆம் நாளன்று வயிற்றுப்போக்கு நோய் நிகழ்வு ஏற்பட்டு சிலர் மரணமடைந்தனர் என்ற தகவல் கிடைத்தவுடன் அம்மாவட்ட சுகாதார அலுவலர் பாதிக்கப்பட்ட இடத்திற்கு விரைந்தார். இதற்கிடையில் மல்லிக்கரை, ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர், பொது சுகாதார ஆய்வாளர் மற்றும் பொது சுகாதாரப் பணியாளர்கள் மேற்படி கிராமத்தில் முகாமிட்டு இந்நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தனர். 4,140 மக்கள் தொகை கொண்ட இம்மஞ்சனி கிராமத்திலுள்ள ஆதித் திராவிடர் குடியிருப்புதான் இந்நோயினால் பாதிக்கப் பட்ட பகுதியாகும். இக்குடியிருப்பில் வாழும் மக்கள் ஒரு பொது கிணற்றின் மூலமும் மற்றும் இரண்டு சவ்வரிசித் தொழிற்சாலை நிறுவனங்களைச் சார்ந்த இரண்டு தனியார் கிணறுகளின் மூலமாகவும் குடிநீர் பெறுகிறார்கள்.

19—3—1986 ஆம் நாளிட்ட மாவட்ட சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி, திரு. முனியனின் இரண்டு வயதுடைய குழந்தை பழனிச்சாமிக்கு 13—3—1986 ஆம் தேதியன்று வயிற்றுப்போக்கு ஏற்பட்டு இது 'குடல் மாரியம்மா' என்று கருதி மூட நம்பிக்கையின் காரணமாக இந்நோய்க்கான மருத்துவ சிகிச்சை பெறப்படவில்லை. இதன் காரணமாக இக்குழந்தை 15—3—1986 ஆம் தேதியன்று வீட்டில் மரணமடைந்தது. இதைப்போன்று, திரு. வரதனின் இரண்டு வயதுடைய குழந்தை சக்திவேலுக்கு 15—3—1986 ஆம் தேதியன்று வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட்டு யாதொரு மருத்துவ சிகிச்சையும் பெறாததால் இக்குழந்தையும் 16—3—1986 அன்று வீட்டிலேயே மரணமடைந்தது. இக்குடியிருப்பில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களை

கண்டுபிடிக்க வீடுதோறும் சென்று விவரம் எடுக்கும் பணியை மாவட்ட சுகாதார அலுவலர் ஏற்பாடு செய்தார். அவ்வாறு செய்ததில், 19—3—198 ஆம தேதி வரை, 52 நபர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிய வந்தது. ஆத்தூர் அரசு மருத்துவமனையில், 10 நபர்கள் மட்டும் சிகிச்சைக்காக வந்தனர். 60 வயதுடைய பெருமாள் என்ற முதியவர் 18—3—1986 ஆம் தேதியன்று மரணமடைந்தார். இந்நோயினால் பாதிக்கப்பட்ட 52 நபர்களுக்கு வாந்தி ஏற்பட்டதாக தகவல் இல்லை. வயிற்றுப்போக்கு மட்டுந்தான் ஏற்பட்டது என்ற புகார் வந்தவுடன், ஒரு நோயாளியின் மலம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு ஆய்வக பரிசோதனையின் முடிவு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. இதனையடுத்து மாவட்ட சுகாதார அலுவலர், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர், ஆறு சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் இதர பொது சுகாதார பணியாளர்கள், இப்பாதிக்கப் பட்ட இடத்தில் முகாமிட்டு போதிய நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இந்நோயினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வயிற்றுப் போக்கு தடுப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை 774 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப் பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட 43 வீடுகளில் தொற்று நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆதி திராவிட குடியிருப்பு மக்களுக்கு குடிநீருக்காகப் பயன்படும் ஒரு பொது கிணறும், மற்றும் இரண்டு தனியார் கிணறுகளும் குளோரினேசன் செய்யப் பட்டிருக்கிறது. குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள பதினோரு கிணறுகளையும் நாள்தோறும் குளோரினேசன் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அளவு உட்கொள்ளும் நீர் கரைத்த உப்பு பொட்டலங்களை (Oral rehydration sal's) வழங்கப்பட்டு அவைகளைப் பயன் படுத்தும் முறையினைப் பற்றியும் இவர்களுக்கு விளக்கப் பட்டிருக்கிறது. காய்ச்சின குடிநீரைப் பருகுமாறு, பொது மக்களுக்கு தண்டோரா மூலம் அறிவிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நோய் தடுப்பு பணி முழுமூரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இதன் பிறகு, அதாவது 19—3—1936 தேதிக்கு பிறகு, இந்நோயினால்



யாதொரு நிகழ்வும் ஏற்படவில்லை என்றும், இந்நிலைமை கட்டுக்குள் உள்ளது என்றும் பொது சுகாதாரம் மற்றும் நடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பில் தெரிவித்ததுபோல் அந்த மஞ்சனி கிராமம் ஆதி திராவிடர் வாழ்கின்ற ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்திலே வயிற்றுப்போக்கின் காரணத்தால், இரண்டு வயது நிரம்பிய ஒரு சிறு குழந்தையும், 14 ஆம் தேதி ஒரு குழந்தையும், 18 ஆம் தேதி 60 வயது பெரியவர் ஒருவரும் இறந்து இருக்கிறார்கள். இதுபற்றிய செய்தி 15, 16 ஆம் தேதியிலே அருகிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தெரிவிக்கப் பட்டு, அதற்கு மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த மஞ்சனி கிராமத்திற்கும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 6 கிலோ மீட்டர் இருக்கிறது. இதிலே சப்-சென்டர் என்ற தாய் சேய் நல விடுதியை நாம் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது, அருகில் இருக்கக் கூடிய சப்-சென்டருக்கு போக வேண்டும் என்று சொல்லுகிறோம். இதிலே ஏற்படக்கூடிய பிரச்சினையை எல்லாம் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லியும் கூட இது அம்மை என்று நினைத்துக் கொண்டு சிகிச்சைக்கு நாங்கள் வர மாட்டோம் என்று அவர்கள் சொன்னதன் காரணமாகத் தான் ஏற்பட்டது. (Dehyderation) உடம்பில் நீர் இருக்கக்கூடிய அளவுக்கு இல்லாமல் போனதால் தான் இந்த இறப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆக அதற்கு எல்லாம் வைத்தியம் செய்து கொள்ள வேண்டும். (Rehyderation) -க்கு ஊசி மூலமாக மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன பிறகு இப்போது நிலைமை அங்கே சீர்பட்டு இருக்கிறது.

### 4. அறிக்கைகள் அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட மூன்று அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :

(அ) தமிழ்நாடு அரசின் 1966-67, 1967-68, 1968-69 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது வனம் மற்றும் மீன்வளத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை.

(ஆ) 1970-71, 1971-72 மற்றும் 1972-73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தி நான்காவது அறிக்கை.

(இ) தமிழ்நாடு அரசின் 1961-62, 1962-63, 1964-65, 1965-66, 1967-68 முதல் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது வேளாண்மைத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தைந்தாவது அறிக்கை.



### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### (ஆ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**6. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம்—தொடர்ச்சி.**

***மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள், புரட்சித் தலைவர் அரசின் சார்பில் சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை வரவேற்று பாராட்டி, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற பட்ஜெட், இந்தியத் துணைக் கண்டத்தில் சமுதாயத்தில் இருக்கிற ஏழைகளுக்கும், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இத்தனை ஆண்டுக் காலமாக இழைக்கப்பட்டு வந்த சமூக அநீதிகளை ஒழித்து, அவர்களுக்கு சமூக நீதியை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில், ஒரு மாநில அரசு தன் அதிகாரத்திற்கு உட்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதாக இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லி இருப்பதை நான் பாராட்டுகிறேன். காரணம், 1984-85 ஆம் ஆண்டு இந்திய நாட்டினுடைய தேசிய வருமானம் 2 இலட்சம் கோடி ரூபாய் என்று இருக்கிற சூழ்நிலையில், தேசிய வருமானத்தை





மறு விநியோகம் செய்கின்ற முறையில் 6, 7 ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் போட்டிருந்தாலும் கூட, தேசிய வருமானத்தை மறு விநியோகம் செய்வதில் பல தவறுகளை கடந்த கால திட்டங்கள் செய்திருக்கின்றன என்று பல்வேறு பொருளாதார நிபுணர்கள் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 1984-85 ஆம் ஆண்டில் மொத்த தேசிய வருமானம் ரூ. 2 இலட்சம் கோடி என்றிருக்கின்ற சூழ்நிலையில், இந்தியத் திருநாட்டில் இருக்கின்ற அரசாங்கங்கள் அதற்குச் செலவு செய்கின்ற தொகை 46,865 கோடி ரூபாய் நேர்முக வரியின் மூலமாகவும், மறைமுகமாக வருகின்ற வருமானத்தின் மூலமாகவும், பல்வேறு மாநிலங்களும், மத்திய அரசும், ரூ. 46,865 கோடியை இந்த நாட்டு மக்களுக்காக செலவு செய்கின்றன. தேசிய வருவாயில் நான்கில் ஒரு பங்கு வருகின்ற வரி வருவாயைப் பெற்று, இந்த நாட்டு மக்களுக்கு செலவு செய்கின்றபோது, அதை மீண்டும் பகிர்ந்தளிப்பதிலே, அதை மறுபடியும் மறு விநியோகம் செய்வதிலே, அது ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று பல்வேறு வகையில், பொருளாதார நிபுணர்கள் இன்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு போடுகிற நிதிநிலை அறிக்கைகள் இந்த மறு விநியோகத்தில் உள்ள சமூக அநீதிகளை ஒழிக்கின்ற வகையில், மறு விநியோகம் சரியாக செய்யப்பட வேண்டுமென்கிற வகையில், சமூக நலத் திட்டங்களைப் போட வேண்டுமென்ற அடிப்படையில் தான் திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த முறை மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கின்ற உதவிகள் கூடியிருக்கின்றன என்ற கருத்தை மாண்புமிகு டாக்டர் நாவலர் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் போடப்பட்ட நிதி ஒதுக்கீடு தமிழகத்திற்கு ரூ. 3,150 கோடி. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்திற்கு ரூ. 5,750 கோடியை மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. 82.54 சதவீதம் கூடியிருக்கிறது என்பதோடு திட்ட ஒதுக்கீடு, மத்திய அரசு உதவிகள் கடந்த காலத்தில் ரூ. 675 கோடியிலிருந்து இவ்வாண்டு ரூ. 1,438 கோடியாக உயர்த்தப்பட்டு, மத்திய அரசால் அளிக்கப் பட்டிருக்கிறது. 116 சதவீதம் கூடுதலாகப் பெற்றிருக்கிறோம்

என்று சொல்வது, மாநில அரசு, இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்காக, இந்த மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்காக, மத்திய அரசிடம் வாதாடி, உரிய அளவில் கூடுதலாக நிதியைப் பெற்றிருக்கிறது என்பதனைக் காட்டும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையானது காலக் கண்ணாடியாக அமைந்திருக்கிறது. திட்டங்களுக்கு ஒதுக்குகின்ற தொகையில் உண்மையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும், முதல்வர் அவர்களும் மத்திய அரசிடம் வாதாடியதன் அடிப்படையில் மிகக் கணிசமான அளவு இன்று இந்த மாநிலம் உதவியைப் பெற்றிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற மாநிலங்களில் ஐந்தாவது இடத்தில் இன்று திட்ட உதவியை மைய அரசிடமிருந்து பெறுகிற மாநிலமாக நம்முடைய மாநிலத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது இந்த மாநிலத்தை வளம் கொழிக்கின்ற மாநிலமாக மாற்ற இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

7-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் அகில இந்தியாவில் 5-வது இடத்தைத் தமிழகம் பெறுகிறது. மராட்டிய மாநிலத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாயும் உத்திரப் பிரதேசத்திற்கு 10,447 கோடி ரூபாயும், மத்தியப் பிரதேசத்திற்கு 7 ஆயிரம் கோடி ரூபாயும், குஜராத்திற்கு 6 ஆயிரம் கோடி ரூபாயும், தமிழ் நாட்டிற்கு 5,750 கோடி ரூபாயும், ஆந்திராவிற்கு 5,200 கோடி ரூபாயும், பீகார் மாநிலத்திற்கு 5,000 கோடி ரூபாயும், மேற்கு வங்கத்திற்கு 4,125 கோடி ரூபாயும், கர்நாடகத்திற்கு 3,500 கோடி ரூபாயும், பஞ்சாபிற்கு 3,255 கோடி ரூபாயும், ராஜஸ்தானிற்கு 3 ஆயிரம் கோடி ரூபாயும், அரியானாவிற்கு 2,900 கோடி ரூபாயும் கொடுக்கப் பெற்றிருக்கின்றன.

அதேபோல் நபர்வாரி மைய அரசு அளித்திருக்கிற திட்ட உதவி 1980-81 ஆம் ஆண்டிலே ரூ. 28.4 பைசா என்ற சூழ்நிலை இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் நபர்வாரி மைய அரசு அளிக்கிற திட்ட உதவி 24.79 என்று குறைகிறது. 1983-84 ஆம் ஆண்டிலே தமிழகத்திற்கு அளித்த தனி நபர் திட்ட உதவி 27.67 என்ற அளவிற்கு உயருகிற நிலையைப் பார்க்கிறோம்.





அதேபோல் 1983-84 ஆம் ஆண்டில் தனி நபர் மத்திய அரசினுடைய திட்ட உதவி 31 ரூபாய். 1984-85 ஆம் ஆண்டிலே தனி நபர் திட்ட உதவி 36.79 என்ற அளவிற்கு மைய அரசிடம் இந்த அரசு வாதிட்டுப் பெற்றிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். எனவே இந்த அரசை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் இங்கே சில நண்பர்கள் சொன்னார்கள். மைய அரசைச் சாடுவதற்கே பயப்படுகிறார்கள், மத்திய அரசைக் குறை சொல்வதற்கே பயப்படுகிறார்கள் என்று. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில் யாரை எப்போது எதிர்க்க வேண்டுமோ அப்போது எதிர்க்கத் தயங்கியதில்லை. தமிழகத்தின் வளம் தான் முக்கியம், தமிழகத்தின் முன்னேற்றம் தான் முக்கியம். ஆளுங்கட்சியாக இருந்தாலும் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறபோதும் மைய அரசை எதிர்த்திருக்கிறார்கள், கூட்டு இல்லையென்றாலும் எதிர்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து இருக்கிறோம்.

இந்த நேரத்திலே போராடிப் பெறுவதை விட வாதாடிப் பெற வேண்டுமென்ற சூழ்நிலையில் இந்த அளவுக்கு உதவித் தொகைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு பெற்றிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் ஏதோ மைய அரசைக் கண்டு புரட்சித் தலைவர் அவர்கள் நடுங்குவதைப் போலவும், பயப்படுவதைப் போலவும் இன்னும் கடுமையான வார்த்தைகளை எல்லாம் சொன்னார்கள். கடந்த கால வரலாறுகளை திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்தே மறந்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினரை விட மத்திய அரசுக்குத் துதிபாடியவர்கள் யாரும் இருக்க முடியாது. அப்படிச் சொல்லியிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு அருள்கூர்ந்து நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டு என்கிறபோதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்க்க வேண்டிய நேரத்திலே மைய அரசை எதிர்த்திருக்கிறார்கள்.

1980 ஆம் ஆண்டு தமிழகத்திலே கடுமையான வறட்சி ஏற்பட்டது. 1981 ஆம் ஆண்டிலேயும் வறட்சி, 1982 ஆம் ஆண்டிலேயும் வறட்சி, 1983 ஆம் ஆண்டிலேயும் வறட்சி,

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1986 மார்ச் 27

1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலே 11 மாதங்கள் மையத் தொகுப்பிலிருந்து ஒரு கைப்பிடி அரிசியைக்கூட இந்த மாநிலத்திற்கு கொடுக்கவில்லை. தமிழகத்திலே பட்டினிச் சாவு ஏற்பட்டு விடுமோ, தமிழகத்து மக்கள் இந்த மாநிலத்தை விட்டு வெளியேறுகிற சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ, உணவுதானியங்கள் கிடைக்காமல் மக்கள் தெருக்களில் நிற்கிற சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ, தமிழக மக்கள் இந்த மாநிலத்தைக் காலி செய்துவிட்டு வேறு மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற பயங்கரமான நிலைமை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையிலே மைய அரசைக் கேட்டுப் பார்த்தோம். காலந்தாழ்த்தினார்கள். குரல் கொடுத்தோம், பொறுத்துப் பார்ப்போம் என்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு மாநில அரசின் முதல்வர் அவர்களே அதைக் கண்டிக்கிற முறையிலே மைய அரசை எதிர்த்துதான், உண்ணாவிரதம் இருந்தார்கள். மத்திய அரசை எதிர்க்க நாங்கள் பயப்படுகிறோம் என்று சொல்கிற திராவிட முன்னேற்ற கழக நண்பர்களே, இந்த மாநிலத்திற்கு அரிசி கொடுக்க வேண்டுமென்று தமிழக மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள், மைய அரசே உடனே மாநிலத்திற்கு நீ அரிசி அனுப்ப வேண்டும் என்று மனுவை அ.இ.அ.தி.மு.க. எம்.பி. க்கள் கொடுக்கிறார்கள். அதிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. க்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதைப்போல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம்.பி. க்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம்.பி. க்கள் கையெழுத்து இட்டிருக்கிறார்கள், ஜனதாக் கட்சியைச் சேர்ந்த எம்.பி. க்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த எம்.பி. க்கள் தமிழக மக்களின் வயிற்றை எண்ணிப் பார்க்கிறார்கள், கேரள எம்.பி. க்கள் தமிழக மக்களின் வயிற்றை எண்ணிப் பார்க்கிறார்கள். காஷ்மீரத்தில் இருக்கிறவர்கள் தமிழ்நாட்டு மக்கள் பட்டினியால் சாகக் கூடாது என்று கையெழுத்துப் போடுகிறார்கள். மைய அரசே, பிரதமர் அவர்களே உடனே அரிசியை அனுப்ப வேண்டும் என்று அந்த மகஜரிலே அவர்கள் எல்லாம் கையெழுத்துப் போடுகிறார்கள். . . .



1986 மார்ச் 27]

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு அரிசி பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே உரிய அரிசியை மைய அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றைக்கும் எதிர்த்தது இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் பேசி முடிந்தவுடனே கடைசியிலே வாய்ப்புக் கொடுக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அந்த பாயின்டை பாஸ் பண்ணியவுடனே எனக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசி முடிக்கட்டும். பேசி முடித்தவுடன் என்ன என்ன கேட்க வேண்டுமோ கேளுங்கள். இடையிலே குறுக்கிட்டு குறுக்கிட்டு ஒவ்வொரு பாயிண்டுக்கும் கேட்பது என்றால் நேரம் இருக்காது.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே பேசும்பொழுது அந்தந்தக் கட்சிகளுக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற நேரத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள்கூட நேற்று, முன்தினம் இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசிவிட்டார்கள். இப்பொழுது ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே குறுக்கிட்டு ஒரு உறுப்பினருடைய நேரத்தை எடுத்துக்கொள்வது என்பது வாடிக்கையாக, வழக்கமாக ஆகிவிட்டது. இனி ஒரு தீர்ப்பை வழங்கி, அந்தந்தக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரம் அவரவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவரவர்களே, இதைச் சொல்கிறபொழுது பத்திரிகைச் செய்தி என்றாலும், தினகரன் பத்திரிகையிலே வந்த செய்தியை ஆதாரமாக சொல்கிறேன். அதை அவைத் தலைவரிடம் காண்பித்திருக்கிறேன்.

23—3—1983 ஆம் தேதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலங்களவை உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் சொல்கிறார்.

"He said that the D.M.K. members refused to sign because of mention in the representation of the beneficial effects of the Chief Minister's Mid-day Meals Programme.".

கையெழுத்துப் போட மறுத்து விட்டார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். அத்துடன் நின்றாலும் பரவாயில்லை.

இன்னொன்றும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை மறுப்பார்கள் என்றால்கூட, தினகரன் பத்திரிகையிலே இருந்து, நாடாளுமன்றத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கொடுத்த அறிக்கையைத்தான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். கையெழுத்துப் போடவில்லை. ஆந்திரத்து எம்.பி.க்கள் கையெழுத்துப் போடுகிறார்கள்; காங்கிரஸ் கட்சி போடுகிறது; கம்யூனிஸ்ட் கட்சி போடுகிறது; ஜனதா போடுகிறது; கேரளத்திலே இருக்கின்றவர்கள் இந்த மாநிலத்து மக்களை எண்ணிப் பார்த்து கையெழுத்து போடுகிறார்கள். தமிழகத்து மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்க திராவிட முன்னேற்றக் கழகம் தவறியது மட்டும் அல்ல; 26—3—1983 ஆம் தேதிய சென்னை தினகரன் பத்திரிகையில் சி. டி. தண்டபாணி, நாடாளுமன்ற உறுப்பினருடைய அறிக்கை வருகிறது. பக்கம் 2, பத்தி 7, 8. "மத்திய அரசு மீது பழி போடும் இந்த மனுவில் இந்திரா காங்கிரஸ் எப்படித்தான் கையெழுத்து போட்டார்களோ தெரியவில்லை". காங்கிரசுக்கு உங்களை விடவா நாங்கள் வால் பிடிக்கிறோம்? காங்கிரஸை நாங்கள் எதிர்ப்பதைப் பார்த்தே, கூடாது என்று சொன்ன நீங்களா எங்களைப் பார்த்து—புரட்சித் தலைவர்களைப் பார்த்தாக் குறை சொல்வது? அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதைப்போலத்தான் 1975 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நினைவு இருக்குமென்று நினைக்கிறேன். இதே சட்டமன்றத்தில் 1975 ஆம் ஆண்டு 17—3—1975 வேறு யாரும் அல்ல, இதை இங்கே முழங்கியவர் அன்னாள் முதல்வர் மாண்புமிகு கலைஞர்





கருணாநிதி அவர்கள்தான். "மேற்பார்வை இடுவோம், கண்காணிப்போம் என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு மாநில அரசை மிக இழிவான முறையில் நடத்துவதாக இருந்தால் நாமெல்லாம் தமிழர்கள்; உணர்வை விட, வயிற்றை விட மானம் பெரிது என்று மதிப்பவர்கள்; நாம் அவர்களிடம் கேட்பது பிச்சை அல்ல; நாம் கொடுத்த வரிப் பணத்திலிருந்து நமக்குத் தரவேண்டிய உரிமையைத்தான் கேட்கிறோம். இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இனிமேல் உங்களை வறட்சி நிவாரண நிதி கேட்கப் போவதில்லை என்று சொன்னேன். சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கிறவரை நிச்சயமாக கேட்க மாட்டேன்." இது சட்டமன்ற விவாதம் 17—3—1975, வால்யூம் 56; பக்கம் 29.

இதை நான் சொல்வதற்குக் காரணம், வறட்சி நிதிக்குக் கணக்கு கேட்போம், கண்காணிப்போம் என்று அன்றைய மைய அரசினுடைய நிதியமைச்சரவர்கள் சொன்னதற்காக இவ்வளவு பெரிய போர்ப் பிரகடனத்தை இங்கே வெளியிட்டார்கள். 25—2—1982 கதை மாறுகிறது; காட்சி திரும்புகிறது. நாடாளுமன்றத்திலே பேசுகிறார், திரு. சி. டி. தண்டபாணி அவர்கள். 26—2—1982 "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை, பக்கம் 9. இதிலே தவறு இருக்கும் என்றால் அந்த நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தைக் கூட நான் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு ஒப்படைக்கிறேன்.

Thiru C. T. Dhandapani said—An agency to watch the State's performance was urgently called for. as some of the programmes initiated for the benefit of weaker sections had not yet been taken up, The Centre........

இதுதான் மிக முக்கியமான வார்த்தை. அடுத்த வார்த்தை:

"The Centre which gave money to the States for the programmes is well within its reach to appoint such a body.".

பணம் கொடுக்கிற அவர்களுக்குக் கவனிக்கின்ற, கண்காணிக்கின்ற உரிமை இருக்கிறது என்று மைய அரசுக்கு வக்காலத்து வாங்கியவர்கள், மத்திய அரசுக்குத் துதிபாடக் கூடிய காட்சியை நாம் அங்கே பார்க்கிறோம். அந்த நிலை உண்டா? இதில் மறுப்பு ஏதேனும் இருந்தால்கூடச் சொல்லலாம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அரிசி ஒதுக்கீடு சம்பந்தமாகத் தமிழகத்திற்கு வர வேண்டிய அளவு சரியாகத் தரப்பட வேண்டுமென்ற கருத்திலே

திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ எந்த வேறுபாடும் கிடையாது. அதுமட்டுமல்ல, தமிழகத்தினுடைய எந்த நலத்திற்கான பிரச்னையாக இருந்தாலும், மத்திய அரசு முறையாக அதைப் பரிசீலித்து தமிழகம் முன்வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டுமென்ற கருத்திலே மாறுபாடு கிடையாது.

(முற்பகல் 10.30)

இந்தப் பிரச்சனை வந்தபொழுது, நானும் இந்த அவையில் உறுப்பினராக இருந்ததை நீங்களும் அறிவீர்கள். இதே பிரச்சனை சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட கொடுத்து; நாங்கள் கூட பேச முற்பட்ட பொழுது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமசாமி அவர்கள் கூடக் குறுக்கிட்டார்கள், சில புள்ளிவிவரத்தைச் சொல்ல வருகின்றபொழுது, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் கூட இது சம்பந்தமாக முரசொலியில் கடிதம் எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிய குற்றச் சாட்டுக்கு நான் வருந்துகிறேன். இதற்கிடையிலே மத்திய சர்க்கார், சென்ட்ரல் பூலுக்கு, பல்வேறு மாநிலங்களின் சார்பாகத் தர வேண்டிய ஒதுக்கீட்டில், தமிழகத்தின் சார்பாக, தர வேண்டிய ஒதுக்கீட்டை, முறையாக, மாநில சர்க்கார் தரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை, சொன்னார்கள். அந்தப் புள்ளி விவரத்தின் அடிப்படையிலே, நம்முடைய தரப்பிலே, மாநில சர்க்காரால், அந்தக் காரியத்திலே சில சிக்கல்கள் ஏற்பட்டது. அப்பொழுது இருப்பில் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. அதை நான் சுட்டிக்காட்டிவிட்டு . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அவர் உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லிக் கொண்டு வருவதால், நான் சொல்கிறேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடித்துவிட்ட பிறகு சொல்லுங்கள்.



திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அந்தத் தகவலை இங்கே வலியுறுத்தி, அந்த ஆதாரத்தைச் சொல்கிற பொழுதுதான், அன்றைக்கும் கூட, அது தவறான தகவல்—பிரச்னைக்கு வருகிறேன்—மத்திய சர்க்காருடைய சென்ட்ரல் பூலுக்கு ஒதுக்க வேண்டிய அரிசி முறைப்படி அவர்கள் அளவிட்டு கொடுக்கவில்லையென்ற (குறுக்கீடுகள்) குற்றச் சாட்டு வந்தபொழுது, அது சம்பந்தமாக எங்கள் கருத்தை இங்கே சொல்கிற நேரத்தில்கூட, இதே போன்று தவறான தகவல் தருகிறோம் என்று வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதித்துக் கொண்டிருக்கிறார். இது மூன்று பேரும் பார்த்து முடிவுசெய்ய வேண்டிய ஒன்று. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள் எந்த இடத்திலே தலையிட்டு, எந்த இடத்திலே நிறுத்தவேண்டுமோ, அந்த இடத்திலே நிறுத்துவார்கள். ஆகவே, ஆளுக்கு ஆள் கிளப்ப வேண்டாம் என்பதையும் ஒவ்வொருவரும் கிளப்பினால் சட்டசபையை நடத்த முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அதற்கான முடிவை எடுப்பார். எந்த இடத்தில் எந்த அளவுக்குச் சொல்லலாமோ, அந்த அளவுக்குச் சொல்ல வேண்டும். தனி சொற்பொழிவு ஆற்றுவதும் சரியாக வராது. எடுத்துச் சொன்ன கருத்துக்கு நேரடியாகப் பதில் வரவேண்டுமே தவிர, எல்லா கருத்துக்களையும் சொல்லி, வரலாற்றைத் துவக்கினால், மறுபடியும் பிரச்னை வேறு எங்கோ போய்விடும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுகின்ற உறுப்பினர் கேட்டதற்குப் பதில் சொன்னால் போதுமானது.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில், நீங்கள் கையெழுத்து கேட்டு அந்த மனுவிலே நாங்கள் கையெழுத்துப் போடவில்லை. ஆனால், அரிசி கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை, எங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அவைகளில் பேசியிருக்கிறார்கள். காரணம், நீங்கள் உண்ணாவிரதம் இருந்ததே, உண்மையானது அல்ல, அது ஓரங்க நாடகம் என்று நாங்கள் கருதினோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். மாநில அரசு, ஒதுக்க வேண்டிய அரிசியை ஒதுக்கி வைத்திருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் சொன்னமாதிரி, அந்த அப்போதே, மத்திய உணவு அமைச்சராக இருந்தவர், குற்றச்சாட்டு சொன்ன நேரத்திலேயே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். மைய தொகுப்பிற்கு, மாநில அரசு 1 இலட்சம் டன் ஒதுக்கி யிருந்தது என்ற அந்த விவரம் எல்லாம், அப்பொழுதே பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருந்தது. அதற்குப் பின்னாலே, விலை நிர்ணயத்திலே மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் பிரச்னை வந்த காரணத்தாலே, இங்கே நாம் ஒதுக்கியிருந்த அரிசி, இங்கேயே இருந்தது. (குறுக்கீடுகள்) ஆகவே, மாநில அரசு, மைய அரசு தொகுப்பிற்கு ஒதுக்க வேண்டிய அளவு ஒதுக்கியிருந்தது என்பது உண்மை. அப்பொழுது உணவு அமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களும் அப்பொழுதே தெளிவாக விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார். (கூச்சல்—குழப்பம்).

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறியதற்கு நான் விளக்கம் அளித்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். அதற்கு பதில் சொன்னேன். ஆனால் இடையிலே தகாத வார்த்தைகளை



ஆளும்கட்சி உறுப்பினர் கூறலாமா? சந்தேகங்களை எழுப்புகிறோம், பதில் சொல்கிறோம், அமைச்சர்கள் விளக்கம் சொல்கிறார்கள். ஆனால் ஒரு உறுப்பினர் ** போட்டு பேசுவது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபோன்று யாரும் சொன்னதாக என் காதில் விழவில்லை. அப்படி யார் சொல்லி யிருந்தாலும் அது தவறுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, மத்திய தொகுப்புக்கு மாநில அரசு அரிசி ஒதுக்கியது மட்டுமல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மரியாதைக்குரிய பிரதமர் அவர்களை நேரில் பார்த்து இங்கே இருக்கிற நிலைமைகளை விளக்கினார். அப்போது தமிழகத்தில் இருந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, இந்த மாநிலத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து அதிகமான அரிசி ஒதுக்க வேண்டுமென்று கேட்கச் சென்றபோது ஆளுநர் அவர்களும் சென்றார்கள். ஆனால் இந்த மாநில மக்களுக்கு விரோதமாக தி.மு.க. நடந்து கொண்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சனை எங்கே போய் விட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சனையைப் பொறுத்தவரையில், தமிழகத்திற்கு அரிசி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையில் பாராளுமன்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கையெழுத்திடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஏன் கையெழுத்துப் போடவில்லை என்பதற்கு காரணங்கள் வேறு இருக்கலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மத்திய தொகுப்புக்கு மாநிலத்தின் பங்காக ஒரு இலட்சம் டன் அரிசி கொடுக்க வேண்டும், அதைக் கொடுக்கவில்லை என்ற பிரச்சனை பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பல தடவை விளக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் மத்திய தொகுப்புக்கென தனியே அரிசி ஒதுக்கி வைத்திருந்தோம். அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. பல ஆண்டு காலமாக எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்துள்ளது. கடுமையான வறட்சி நமது மாநிலத்தில் ஏற்பட்டபோதுதான் மத்திய தொகுப்பிலிருந்து மாநிலத்திற்கு அரிசி தாருங்கள் என்று சொன்னோம். நமது மாநிலத்திலே பற்றாக்குறை இருக்கிறபோது மத்திய தொகுப்புக்கு எப்படி அரிசி தர முடியும்? கிட்டத்தட்ட 57 இலட்சம் டன் அரிசி உற்பத்தியான இந்த மாநிலத்தில் 28 இலட்சம் டன்தான் உற்பத்தியாகியிருந்தது; அதனால் மத்திய தொகுப்புக்கு தர முடியாது, நீங்கள்தான் தர வேண்டுமென்று வாதிட்டோம். அவர்கள் தரவில்லை. அந்த நேரத்தில் மத்தியில் இந்தப் பொறுப்பிலே இருந்த அமைச்சரும் மாற்றப்பட்டார். மத்திய தொகுப்பிலிருந்து அரிசி வராததால் இங்கே உண்ணாவிரதம் இருந்தோம். அப்போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தலையிட்டு, ஓரளவுக்கு அரிசி கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். அதைத் தொடர்ந்து முதலிலே 25 இலட்சம் டன், அதன் பிறகு 30 இலட்சம் டன். 40 இலட்சம் டன் என்று. தந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனைக்குள் இப்போது போக வேண்டியதில்லை. ஆக, தமிழ்நாட்டுக்கு உணவு வேண்டுமென்ற கோரிக்கையில் கையெழுத்திடவில்லை என்பதை ஒத்துக் கொண்டு, அதற்கான காரணத்தை திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அதோடு பிரச்சனை முடிந்து விட்டது; மேற்கொண்டு இந்தப் பிரச்சனையில் இறங்க வேண்டாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உட்காருங்கள். ஏதாவது விளக்கம் அளிக்க வேண்டுமென்றால் பின்னால் அனுமதி தருகிறேன்.





**திரு. அ. ரகுமான்கான்:** ஒரு நிமிடம் கொடுங்கள், அதற்கு மேல் வேண்டாம். பேரவைத் தலைவரவர்களே, மத்திய சர்க்காருடைய சென்ட்ரல் பூலுக்கு திரு. மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த காலத்திலிருந்து இன்று வரையில் தமிழகத்திலிருந்து அரிசி கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பட்டியலைப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடும்.

* *

என்று சொன்னதை அவைத் தலைவராகிய நீங்கள் கண்டிக்காத காரணத்தால் நாங்கள் சபையை விட்டு வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) யாரும் வெளிநடப்பு செய்வதை நான் தடை செய்யவில்லை. எனினும் இங்கு நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாகச் சொல்லிவிட்டுப் போவது முறையல்ல.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லியது அவையிலே நடைபெறாத ஒன்று; அவைக் குறிப்பிலே இல்லாத ஒன்று; தங்களுடைய கவனத்திற்கோ, செவிக்கோ வராத ஒன்று. அப்படி வராத ஒன்றை, அவைக் குறிப்பிலே ஏறாத ஒன்றை எடுத்துச் சொல்லியிருப்பது என்பது சரியாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை சுமுகமாக நடப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நடக்கின்ற நிகழ்வுகளைப் பொறுத்துத்தான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வது யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. உட்கார்ந்து கொண்டே ஏதாவது சொன்னால், அதெல்லாம் அவை நிகழ்ச்சியினைச் சேர்ந்ததாகக் கருத முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி யாரும் சொன்னதாக என்னுடைய காதில் விழவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாகச் சொல்லிவிட்டுப் போவது அரசியல் விளம்பரத்திற்குப் பயன்படுமே தவிர, உண்மைக்கு ஒத்துவராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அதைப் பார்த்து தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போகிற போக்கில் இவ்வாறு சொல்லிவிட்டுப் போவது நல்ல வழக்கம் இல்லை. இப்படி நாளைக்கு இன்னொரு உறுப்பினரும் சொல்லக் கூடும். எனவே திரு. ரகுமான்கான் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

* *

என்று சொல்கிறார்களே. அதுமட்டும் சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தமாதிரி எல்லாம் நடந்துகொள்வது பாராளுமன்ற ஜனநாயக முறை அல்ல. இதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது ஓரங்க நாடகம் என்று அவர்கள் சொன்னார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அப்படிச் சொன்னதன் அடிப்படையில்தான் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் உண்மையிலே உள்ள வெப்பத்தைத் தாங்க முடியாமல் அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது தமிழ் மக்களின் மீது அவர் காட்டிய அன்பின் வெளிப்பாடுதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்திலே அன்றைக்குக் கையெழுத்துப் போட மறுத்ததுதான் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யப்பட்ட கடைந்தெடுத்த துரோகம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** பேரவைத் தலைவர் அவர்களே,

* *

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்த பின் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிய பேச்சில் அவைக் குறிப்பில் பதிவு செய்கிறபடி பேசப்பட்ட பேச்சு ஓரங்க நாடகம் என்று குறிப்பிடப்பட்டதாகும். ஆனால் சாதாரணமாக உட்கார்ந்து கொண்டு பேசுகிற பேச்செல்லாம் பதிவேட்டில் ஏறாது. அப்படி ஏதேனும் தவறாகக் குறிப்பிடப்பட்டு இருந்தால் மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்திலே அதைச் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும். அப்படிச் சுட்டிக் காட்டியதற்குப் பிறகு அவைத் தலைவரின் விளக்கத்தைப் பெற்றிருக்கலாம். எனவே இந்த நிலைமையில் அவர்கள் சொல்வது அவையிலே நடைபெறாத ஒன்றாகத்தான் கருத வேண்டி இருக்கிறது. அந்த முடிவுக்குத்தான் வரவேண்டிய தன்மை ஏற்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்ன ஓரங்க நாடகம் என்ற அந்தக் குறிப்பும் இருக்கலாம். அதற்குப் பதிலாக மாண்புமிகு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் சொன்ன அந்தக் கூற்றும் இருக்கட்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் நான் முதலிலே கேட்டபோதே சொல்லியிருக்கலாம். பிரச்னை முடிகிற நேரத்தில் இப்போது சொல்லி புதிய பிரச்னையை உருவாக்க வேண்டாம். அதை நீக்கிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற விவாதத்தில் அவர்கள் இருந்து இங்கே பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம், முடியாமற் போய்விட்டது. கையெழுத்துப்போட்டு தனியாக ஒரு மகஜர் கொடுத்தோம் என்பதையும், இந்த மகஜரில் கையெழுத்துப் போடவில்லை என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கேள்வி அது அல்ல. மைய அரசை எதிர்ப்பதற்கு இந்த அரசு பயப்படுகிறது, புரட்சித் தலைவர் அவர்கள் பயப்படுகிறார் என்று சொல்கிற திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மைய அரசின் காங்கிரஸ் கட்சிக்காரர்களிடம் இந்த மாநில மக்களுக்காக அரிசி கொடுங்கள் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரகடனம் செய்து கொடுத்த மகஜரில், காங்கிரஸ் எம்.பி.க்கள் கையெழுத்துப் போட்டதை தி.மு.க. பாராளுமன்றக் குழு தலைவர் சி. டி. தண்டபாணி அவர்கள் கேலி செய்திருக்கிறார்களே, உங்கள் நிலை என்ன? அது பச்சோந்தித்தனம் அல்லவா என்பதைத்தான் நான் கேட்க விழைகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தமட்டில் எப்பொழுது எதிர்க்க வேண்டுமோ மைய அரசை, அப்போது எதிர்த்திருக்கிறார்கள். பாராட்டுகிற காலத்தில் பாராட்டுவார்கள். போராடுகிற நேரத்தில் போராடியிருக்கிறார்கள். வாதாட வேண்டிய நேரத்தில் மாநிலத்தினுடைய வளத்திற்காக, நலத்திற்காக வாதாடியிருக்கிறார்கள். 1972-லே புரட்சித் தலைவர் அவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்திருக்கிறார்கள்.





1977-லே எதிர்த்திருக்கிறார்கள். 1980-லும் எதிர்த்திருக்கிறார்கள். 1984-லே டெலிவிஷனிலே இந்தி திணிப்பு ஏற்பட்டபோது எதிர்த்திருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு மைய அரசின் உள்துறையமைச்சர் மாண்புமிகு திரு. பி. சி. சேத்தி அவர்கள் சென்னை விமான நிலையத்தில் காலப்போக்கில் இந்தியை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னபோது சிலர் தமிழகத்தில் மௌனம் சாதித்தார்கள். 1983 ஆம் ஆண்டு வேறு மாநிலத்தினைச் சார்ந்தவர்களை சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக நியமித்தபோது, இந்த நாட்டினுடைய மொழிப் பிரச்சனையை இது பாதிக்கும். தமிழகத்திலே இருக்கிற உயர்நீதிமன்றத்தின் வழக்காடும் முறைகள் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று இந்த அரசு போராடிக் கொண்டிருக்கிறபோது, வேறு ஒரு மொழிப் படித்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள் நீதிபதியாக வந்தால், அது சரியாகாது, முறையாகாது என்று சட்டமன்றத்திலேயே புரட்சித் தலைவர் அவர்கள் குரல் கொடுத்தார்கள். ஆனால், பத்திரிகை நிருபர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவரை, மாண்புமிகு டாக்டர் கருணாநிதி அவர்களை பார்த்து கேட்கிறபோது, No Comments அபிப்பிராயம் எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை', என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட இரட்டை நிலையையா எடுத்தார்கள் புரட்சித் தலைவர் அவர்கள்?

1977-லேயும் இந்தி திணிப்பை எதிர்த்தார்கள். காங்கிரஸோடு கூட்டு வைத்திருந்தபோது கூட 1985 லே டெலிவிஷனிலே இந்தி திணிப்பு செய்த போது அதை எதிர்த்து வன்மையாக கண்டித்து கடிதம் எழுதினார்கள். அதுதான் புரட்சித் தலைவர். ஆனால் பதவிக்காக இரட்டை வேடம் போடுகிறவர் அல்ல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இந்த மாநிலத்தினுடைய பொது நலனுக்காக, ஒட்டு மொத்த நலனுக்காக தமிழக மக்களுடைய நலனுக்காக, தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்த ஒரு முதலமைச்சரைத்தான் இந்த மாநிலம் பெற்றிருக்கிறது என்பதை அந்த அருமை நண்பர்களுக்கு இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்க முடியாது. பாயின்ட் ஆப் ஆர்டர்கள் அனுமதிப்பதால் வம்புகள்தான் வளருகின்றன. . . .

**திரு. கு. சுப்பராயன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பவர்கள் எல்லாம் வம்பு வளர்ப்பவர்களா என்ன? இதுவரையில் எல்லோருக்கும் கொடுத்தீர்கள். நான் கேட்கும்போது மட்டும் இப்படிச் சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** நான் பேசி முடித்து விடுகிறேன். பிறகு தேவைப்பட்டால் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

அதே கருத்தைத்தான் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும் சொல்லி, புரட்சித் தலைவர் அவர்கள் ஏதோ மைய அரசைக் கண்டே பயப்படுகிறவர் என்பது போலச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியிலே இருக்கிறபோது எதிர்க்க வேண்டிய நேரத்தில் மைய அரசை எதிர்த்தவர் அவர். கூட்டு இருந்தபோதே, தமிழக அரசே தீர்மானித்து ஒரு பந்தை அறிவித்த மாநிலம் இந்திய துணைக் கண்டத்திலேயே நமது தமிழக மாநிலம் தான். மேற்கு வங்கத்திலே இருக்கிற அரசாங்கம் கூட அப்படி ஒரு பந்தை அறிவிக்கிற தைரியம் பெற்றிருக்கவில்லை. அதை மறுக்கவும் முடியாது. 1982 ஆம் ஆண்டு நாடு தழுவிய பந்த் ஒன்று மேற்கு வங்கத்திலே நடந்தபோது, தொழிற்சாலைகள் முழுவதும் பந்த் நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 20—1—1982 ஆம் தேதி அந்த நாடு தழுவிய பந்த் நடைபெற்றது. பந்த் நடந்ததற்குப் பிறகு 21—1—1982 ஆம் தேதியன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் கல்கத்தா நிருபர், மேற்கு வங்க முதலமைச்சரை சந்தித்து, மாண்புமிகு திரு. ஜோதிபாசு அவர்களை சந்தித்துப் பேசியபோது, ஜோதிபாசு அவர்கள் சொல்கிறார்கள்.



"Chief Minister Jyoti Basu told pressmen that the bandh was "nearly total". He made it clear that the State Government had not given the call for the bandh.".

பந்த் சிறப்பாக நடந்தது. அந்த பந்த்திற்கான அழைப்பை மேற்கு வங்க அரசு விடவில்லை. அடுத்து திரிபுரா மாநிலத்தினுடைய முதலமைச்சரை திரு. நிருபன் சக்ரவர்த்தியை நிருபர்கள் சந்திக்கிறார்கள்.

"In Tripura, the Chief Minister Mr. Niruben Chakraborthy to-day supported the cause of the striking trade union but said his Government would remain neutral.".

(முற்பகல் 10.50)

ஸ்டேட்மென் 19—1—1982 பக்கம் ஒன்று பத்தி இரண்டு. இதை நான் சொல்வதற்கு காரணம் இங்கே அரசே பந்தை அறிவிக்கிறது. மத்திய அரசின் கவனத்திற்கு அது வருகிறது. காங்கிரசை எதிர்ப்பது எங்களுடைய லட்சியம், உயிர்மூச்சு என்று சொல்கிற கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த அருமை உறுப்பினர்களைக் கேட்கிறேன். 1981 ஆம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலத்தில் மாண்புமிகு அன்வர் தைமூர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். காங்கிரசை எதிர்ப்பதும், ஒழிப்பதும், எங்களுடைய வீர லட்சியம் என்று சொல்கிற பொதுவுடைமைத் தோழர்களே, அன்றைக்கு அங்கே ஒரு சென்ஷர் மோஷன் வருகிறது. 53 ஓட்டுக்கள் பெற்று அந்த சென்ஷர் மோஷன் தோற்கடிக்கப்பட்டது. அன்றைக்கு அந்த மோஷன் தோற்கடிக்கப்படாமல் இருந்தால் ஒரு மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி அகற்றப்பட்டிருக்கும். அன்றையதினம் 11 மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. க்களும், 6 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. க்களும் சட்டமன்றத்தின் லாபியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள், வாக்களிக்காமல். இதை மறுக்கமுடியுமா? நீங்கள் வாக்களிக்கவில்லை.

அடுத்து நீங்கள் சொன்னதற்காக நான் ஒன்றைச் சொல்கிறேன். சமீபத்தில் சேலத்தில் ஒன்றைப் பேசினார்கள். நான் கூட சொல்லவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் குரலில் எந்தக் குரல் சொந்தக் குரல் என்று தீக்கதிர் பத்திரிக்கையில் செய்தி வந்ததைச் சொல்கிறேன். சேலத்தில் மரியாதைக்குரிய

பெரியவர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகிறபோது காங்கிரஸ் போடுகிற திட்டங்களை பாராட்டி, காங்கிரசோடு இணைந்து செயல்பட வேண்டுமென்ற அடிப்படையிலே சொல்லியிருக்கிறார்கள். இதை நானே சொல்லவில்லை. இந்தியன் எக்ஸ்ப்பிரசில் வந்திருக்கிறது. தீக்கதிரில் எழுதி கேட்டிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியே உன் குரல் எது? தேசிய நல்வாழ்வு அடைய கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒரு துப்பாக்கியின் இரட்டை குழல்கள் என்ற வகையில் ஒன்றாகச் செயல்பட வேண்டும். அவை தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது என்று திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் பேசியதாக செய்தி இந்தியன் எக்ஸ்ப்பிரசில் வந்தது. அந்த நிலை ஏன்? சேலத்தில் ஏன் இப்படி பேசுகிறீர்கள்? அதைத்தான் உங்களுடைய வாதத்திற்குச் சொல்கிறோம். மத்திய அரசோடு போராடுகிற போது போராடுவோம். வாதாடுகிற போதும் அவைகளைப் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தான் சொல்கிறோம். இப்படி சொல்கிற காரணத்தால் மத்திய அரசுக்கு லாலி பாடுகிறோம், மத்திய அரசினுடைய பாதங்களைத் தொடுகிறோம் என்று சொன்னார்கள். அப்படியென்றால் பொதுவுடைமை கட்சியைச் சேர்ந்த நீங்கள் எத்தனை முறை உங்களுடைய லட்சியத்தை விட்டு வெளியே போயிருக்கிறீர்கள்? பன்னாட்டு மூலதனங்களை இந்த நாட்டிலே கொண்டு வந்து போட்டு இந்திய திருநாட்டை விற்பதற்கு பிரதமர் இராஜீவ் காந்தி முயற்சிக்கிறார் என்று குற்றம் சாட்டிவிட்டு மேற்கு வங்கத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனத்தில் 'Petro-Chemical Industries' அமைப்பதற்கு அனுமதித்திருக்கிறீர்களே மேற்கு வங்கத்திலே, கம்யூனிஸ்ட் சித்தாந்தம் இன்னும் உங்களுக்குச் சொந்தமாக இருக்கிறதென்று கருதுகிறீர்களா? இன்னும் பொதுவுடைமை தான் வேண்டும், தனியுடைமையை ஒழிப்போம் என்று சொன்னீர்களே, மேற்கு வங்கத்திலே இருக்கிற 26 அரசு கம்பெனிகளை தனியார்களுக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களே, இதெல்லாம் உங்களுக்கு மறந்து போய்விட்டதா? அந்த நிலை ஏன்?



வரியில்லாத பட்ஜெட் போட்டிருக்கிறோம். உங்களால் பாராட்ட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் பேசுகிறபோது கூட சொன்னார்கள், மத்திய அரசு வரி போடுவதற்கான வாய்ப்பையே விட்டு வைக்கவில்லை. ஆகவேதான் டாக்டர் நாவலர் அவர்கள் வரி போடவில்லையென்று சொன்னார்கள். நான் கவனித்துக் கொண்டே இருந்தேன். வாதத்திற்காக இதை ஒப்புக்கொள்கிறேன். வரி போடுகிற வாய்ப்பையே மத்திய அரசு வைக்கவில்லை. அதற்கு பிறகும் வரி போட்டால் தவறு தான். அது அரக்கத்தனமான அரசு தான். மக்கள் விரோத அரசு தான். வரி போடுகிற வாய்ப்பையே இந்தியா முழுவதும் மத்திய அரசு வைக்காதபோது மேற்கு வங்கத்தில் சுமார் 50 கோடிக்கு இந்த ஆண்டு வரி போட்டிருக்கிறீர்களே, அது மக்கள் விரோத அரசா? அரக்கத்தனமான அரசை நடத்துகிறீர்களா? வரி போடவில்லையென்று பாராட்டவில்லை என்றாலும் பாவாயில்லை. அதைக் கூட ஜீரணித்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேற்கு வங்கத்தில் வரி போட்டிருக்கிறார்கள். அது ஏன் என்று தான் தெரியவில்லை. சமூக தேவையை உணர்ந்து பல்வேறு பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற இந்திய தேசிய வருமானத்தை, இந்தியாவில் உருவாகிற சொத்துக்களை மறு விநியோகம் செய்வதிலே பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. நம் திட்டங்கள் எல்லாம் நாட்டின் செல்வத்தை மறு விநியோகம் செய்வதில் தோல்வியுற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தனி நபர் வருமானம் உயர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த வருமானத்திலிருந்து பணக்காரர்களிடமிருந்து பெறுகிற வரி, வருமான வரி ஒன்று தான். அதுவும் குறைந்து கொண்டு வருகிறது. மீதி வருகிற வரிகள் முழுவதும் மக்கள் வாங்கி புசிக்கிற, மக்கள் வாங்கி உபயோகிக்கிற பொருள்கள் மீது போடப்படுகிற வரிகள். தனிப்பட்ட மனிதர்களுக்கு, நிறுவனங்களுக்கு வருகிற வருமானத்தை இந்தச் சமுதாயத்திற்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் நியாயம், சோசலிச சித்தாந்தம். அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் பல்லாண்டு காலமாக திட்டங்களைப் போடுகிறோம். இந்த நாட்டின் தனி மனிதர்கள், தனி

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1986 மார்ச் 27

நிறுவனங்கள், தனி முதலாளிகள் இவர்களுக்கு ஆண்டுக்கு ஆண்டு உருவாகிற வருமானங்களை, சொத்துக்களை சமுதாயத்திலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது தான் சோசலிச சித்தாந்தம் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். ஆனால் இன்று இந்தியத் துணைக் கண்டத்திலே இப்படிப்பட்ட தனிப்பட்டவர்களுடைய வருமானத்திலேயிருந்து அரசு பெறக்கூடிய வாய்ப்பு வருமான வரி ஒன்றுதான். மீதி முழுமையும் மக்கள் உபயோகிக்கிற பொருட்களுக்கு. ஏழையும் வரி கட்டுகிறான். பணக்காரனும் வரி கட்டுகிறான். ஆகவே பணக்காரர்களுக்கு குறைக்கிற வாய்ப்பை, அவர்களுடைய செல்வங்களை ஏழைகளுக்கு பகிர்ந்து அளிக்கிற வாய்ப்பு இல்லாமல் போகிறது, நான் இவைகளைச் சொல்வதற்குக் காரணம் சமூக ஞானம் இல்லாத அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்தியத் திருநாட்டிலேயே இத்தனை ஆண்டுக் காலமாக புறக்கணிக்கப்பட்ட ஏழையை என்னிப் பார்த்து, அவனுக்கு மறு வினியோகம் போய்ச் சேர வேண்டும் என்ற சமூக ஞானம் கொண்ட ஒரே ஒரு முதல் அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான், இந்த அரசுதான் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். (கை தட்டும் ஒலி), மறுப்பது என்றால் கடைசியிலே மறுக்கலாம்.

1975-76-ல் இந்த நாட்டினுடைய வருமான வரி 1,214 கோடி ரூபாய். மைய அரசு வருவாயில் இது 9.96 சதவீதம். 1984-85-ல் 1,549 கோடி ரூபாய் வருமான வரி. இது மைய அரசு செய்த செலவில் 3.3 சதவீதம். தனி மனிதர்களுடைய சொத்துக்களை, தனி மனிதர்களுடைய ஆஸ்திகளைக் குறைக்க வேண்டும் என்ற முயற்சியில் நாம் தோல்வி அடைகிறோம். இருக்கிற நிலைமை 3.3 சதவீதம் தான். இதிலே அரசு மக்களிடமிருந்து வரியைப் பெறுகிறது. அதைப் பகிர்ந்து அளிக்கிறபோது கூட ஏழைகளுக்கு அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது. வசதியானவர்களுக்கே வாய்ப்புகளை உருவாக்குகிற நிலைமை தான் 22 மாநிலங்களிலேயும்.



1986 மார்ச் 27] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

கடந்த 5 ஆண்டுத் திட்டங்களிலே தனிப்பட்டவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கிவிட்டார்கள். மிகப் பெரிய பொருளாதார நிபுணர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். 'இவ்வாறாக உயர் வருமானப் பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கும் அதை மேலும் உயர்த்துவதற்கும் தேவையான உற்பத்திகளுக்கு நமது ஆதார சாதனங்களின் பெரும்பகுதி ஈடுபடுத்தப்பட்டது. இந்தச் சிறு பிரிவினரின் பகட்டான உபயோகங்களுக்கு வேண்டிய நேரடியான பொருள்களின் உற்பத்தியில் மட்டுமின்றி இவர்களது உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு வேண்டிய உயர் ரக வீடமைப்பு, நகர்ப்புற வசதிகள், விமானப் போக்குவரத்து முதலான உயர் ரக போக்குவரத்து வசதிகள், டெலிபோன் சேவைகள், ஐந்து நட்சத்திர வாழ்க்கை முறை ஆகியவற்றின் உற்பத்தியிலும் நமது தொழில் துறையின் ஒரு பெரிய பகுதி ஈடுபட்டு இருக்கிறது. பெரும்பான்மையான ஏழை மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய உடைமை, வீடு இவைகளைப் பற்றி திட்டம் தீட்ட சிந்திக்கத் தவறியிருக்கிறது' என்று மால்கம் ஆதிசேஷையா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சிந்திக்கத் தவறியிருக்கிறது இந்த நாட்டினுடைய அரசு என்று கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இதை, புரட்சித் தலைவர் அவர்கள் தாய் உள்ளத்தோடு சிந்தித்ததன் அடிப்படையில்தான், 3,500 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே எறத்தாழ இலவசமாக, ஏழை எளியவர்களுக்கு, நேரடியாக பல பொருட்களாக போய்ச் சேருகின்ற வகையிலே மட்டும் நான் சொல்கிறேன். 625 கோடி ரூபாய், ஐந்திலே ஒரு பாகத்தை, வேறு எந்த மாநிலத்தினுடைய பட்ஜெட்டிலேயும் நீங்கள் காண்பிக்க முடியும் என்றால் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இந்த அரசை விட வேறு அரசுக்கு சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கிற ஞானம் இருக்கிறதா என்றால் இல்லை. இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, பொதுவுடைமையைச் சேர்ந்தவர்கள் இன்னும் கூடுதலாக எதிர்பார்க்கலாம், அது வேறு விஷயம். அப்படியானால் நிரம்பச் சொல்ல முடியும். இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்து, இருக்கிற அதிகாரங்களை வைத்து சத்துணவுத் திட்டத்திற்கு

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1986 மார்ச் 27

169 கோடி ரூபாய், சீருடை, பாட நூல் ஆகியவற்றிற்கு 30 கோடி ரூபாய், ஏழை எளியவர்களுக்கு உணவு வினியோகிக்கின்ற பணம் மட்டும் 100 கோடி ரூபாய் நட்டம். இலவச மின்சாரம், விவசாயிகளுக்கு சலுகை மின்சாரத்தால் 221 கோடி நட்டம். 7 லட்சம் குடிசைகளுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம், 325 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் விபத்து உதவித் திட்டம் என்று எத்தனையோ திட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, இங்கே பலர் சந்தேகித்தார்கள். ஏதோ விளம்பரத்திற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் என்று சொன்னார்கள். நான் உண்மையிலே சொல்கிறேன், இந்த நோக்கத்தை நீங்கள் பாராட்டியிருக்க வேண்டும். எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் பாராட்டத் தவறினார்கள் என்றே சொல்கிறேன். நிதி ஒதுக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நோக்கம் நல்ல நோக்கம். நிதி ஆதாரங்களை உருவாக்க மறுக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதிலே தோல்வி அடைந்தாலும் கூட பின்தங்கியவர்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தர வேண்டும் என்று எந்த மாநிலத்திலும் சிந்திக்கவில்லை. மத்திய அரசு நிதி ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நிதியை வைத்துச் செய்கிற வாய்ப்பு இருக்கிறது. பல்வேறு நிதி நிறுவனங்களின் மூலமாகச் செய்கிற வாய்ப்பு இருக்கிறது. இதை எப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்றும், நிதியைப் பெற வேண்டும் என்றும், 10 லட்சம் வீடுகள் இல்லை என்றாலும் கூட 5 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு ஊக்குவிப்பதற்குப் பதிலாக கேலி செய்கிறார்கள். அண்ணா அவர்கள் கூட 3 படி அரிசி போட வேண்டும் என்று சொன்னார்கள். இருக்கின்ற நிதி நிலையில் முடியவில்லை என்கிறபோது, லட்சியம் 3 படி அரிசி போட வேண்டும் என்கிறார்கள், ஆனால் ஒரு படியை நிச்சயம் போட்டுக் காண்பிப்பேன் என்று சொன்னார்கள். அந்த வகையிலே வீடு கட்டுகிற இந்தத் திட்டத்தை இந்த அரசு அறிவித்து இருக்கிறது.



1986 மார்ச் 27] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

தொழில் வளர்ச்சியைப் பற்றி பல்வேறு வகையிலே பல நேரங்களிலே சொல்லியிருக்கிறோம். பல்வேறு நேரங்களில் கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை ஒத்துக்கொள்கிற வகையிலே கூட இங்கே வாதங்கள் அமைந்தன. தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்கிற அதே நேரத்திலே, காங்கிரஸ் கட்சித் தரப்பிலே, தொழில் வளர்ச்சிக்கு இங்கே மைய அரசு முதலீடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மறைமுகமாக தொழில் இங்கே வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் கூடுதலாக வளர வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

நாங்கள் குறை சொல்கிறபோது இன்னும் கூடுதலாக நிதி வேண்டுமென்று கேட்கிறோம். அப்படிச் சொல்கிறபோது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்கள் வருத்தப்பட வேண்டியதில்லை. (குறுக்கீடு) தொழில் வளர்ச்சியைப் பற்றியெல்லாம் நிறைய பேசியிருக்கிறோம். சமூகத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கின்ற ஞானம் இல்லை என்று சொல்கிறார்கள். இந்திய திருநாட்டிலே ஏழை எளியவர்கள் வாங்கிப் புசிக்கின்ற, விவசாய தொழிலாளர்கள் வாங்குகிற உணவுப் பண்டங்களின் விலையை குறைவாக வைத்திருக்கிற மாநிலம் தமிழ்நாடு தான். 9 ஆயிரம் நியாய விலைக் கடைகளுடன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 21 ஆயிரம் நியாய விலைக் கடைகளை இந்த மாநிலத்திலே உருவாக்கி விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டிருக்கிறார். கடந்த காலங்களில் பார்த்தோம். 75 ஆம் ஆண்டு, உலக வரலாற்றிலேயே இல்லாமல், புள்ளிவிவரங்களை வைத்தே சொல்கிறேன். புள்ளிவிவர புத்தகத்திலே, உலக வரலாற்றிலேயே கிடையாது; விலைவாசி புள்ளி 105 சதம் ஓரேயாண்டில் உயர்ந்த கொடுமை தமிழ் மாநிலத்திலே தான் 1975 ஆம் ஆண்டு நடைபெற்றது. 105 சதம்—தமிழக அரசினுடைய சாதனைப் புத்தகத்திலே இருக்கிறது. எங்குமே கிடையாது, ஆனால் இந்தியாவிலேயே ஏழை எளியவர்கள் லட்சக்கணக்கில் இருக்கின்றார்கள். பெரும்பான்மையான ஜனத்தொகையில் கிராமங்களில் இருக்கிற விவசாய தொழிலாளர்கள் வாங்குகிற பொருட்களின் விலைவாசிகளை குறைவாக வைத்திருக்கிற மாநிலம் புரட்சித்

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1986 மார்ச் 27

தலைவர் ஆளுகின்ற புண்ணிய பூமி. 1985 அக்டோபர் திங்கள் வரையில் தந்திருக்கிற லேட்டஸ்ட் ரிசர்வ் பேங்க் ஆப் இண்டியாவின் புல்லட்டினுடைய தகவல். அதனுடைய பக்கம் 557 சொல்கிறது; தமிழகத்திலே விலைவாசி புள்ளி 519; மேற்கு வங்கத்திலே விலைவாசி புள்ளி 582; கர்நாடகத்திலே விலைவாசி புள்ளி 558; கோளாவிலே விலைவாசி புள்ளி 582; ஒரிஸ்ஸாவிலே விலைவாசி புள்ளி 629; ராஜஸ்தானிலே விலைவாசி புள்ளி 612; உத்தர பிரதேசத்தில் விலைவாசி புள்ளி 601; பஞ்சாபிலே விலைவாசி புள்ளி 606; மத்திய பிரதேசத்திலே விலைவாசி புள்ளி 611; அஸ்ஸாமிலே விலைவாசி புள்ளி 570; பீகாரிலே விலைவாசி புள்ளி 560; குஜராத்திலே விலைவாசி புள்ளி 522; ஜம்மு & காஷ்மீரிலே விலைவாசி புள்ளி 521; மகாராஷ்டிராத்திலே விலைவாசி புள்ளி 531. ஆக, ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் இருக்கிற எந்த மாநிலத்திலும் ரிசர்வ் பாங்கினுடைய விலைவாசி புள்ளி இங்குதான் குறைந்தது என்கிற நிலையிலே இன்றைய புரட்சித் தலைவர் ஆட்சி. கிராமங்களை எண்ணிப் பார்க்கின்ற ஆட்சி புரட்சித் தலைவர் ஆட்சியில் தான். 24—12—1985 ஆம் தேதிய தினமணி பத்திரிக்கையிலே ஒரு புள்ளிவிவரம் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே கிராம மேம்பாட்டுத் துறை நிறுவனம் மத்திய அரசு சொல்கிற இந்தியா முழுவதும் 38,748 கிராமங்களில் குடிப்பதற்கு தண்ணீர் வசதி என்பது கொஞ்சம் கூட கிடையாது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல் இருக்கிற ஒரே ஒரு மாநிலம் தமிழகம்தான். என்று அந்தத் துறை புள்ளிவிவரம் கொடுக்கிறது. நான் சொல்கிறபோது ஜனதா கட்சி உறுப்பினர் கூட புன்முறுவல் புரிகிறார். நான் சொல்வது உப்பு நீராக இருக்கிற அந்த கிராமங்கள் வற்றாமல் இருக்கலாம். ஆனால் வசதிகளே செய்யாத கிராமங்கள் இந்தியாவில் 38 ஆயிரம். ஆனால் தமிழகத்தில் அப்படிப்பட்ட குடிதண்ணீர் வசதியில்லாத கிராமங்கள் இல்லை என்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். ஆக புரட்சித் தலைவர் அரசின் சார்பில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகிற பட்ஜெட்; ஏழை எளியவர்களை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு சமூக நீதி வழங்குவதற்கு மற்ற



1986 மார்ச் 27]

மாநிலங்களும் பார்த்து பயன்படக் கூடிய பட்ஜெட் என்கிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையை மனதார பாராட்டி எனக்கு வழங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்; நன்றி வணக்கம்!

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது, இங்கே தமிழகத்திலே அரசே பந்துக்கு வேண்டுகோள் விடுத்தது என்றும் மத்திய அரசை எதிர்ப்பதிலே நாங்கள் ஏன் நடுங்குகிறோம் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி மேற்கு வங்கத்திலும் திரிப்புராவிலும் நடந்ததா என்றும் கேட்டார்கள். மேற்கு வங்கத்திலும், திரிபுராவிலும் இந்த நாட்டு மக்களுடைய பிரச்சனைகளின் மீது இந்த நாட்டு மக்களின் பொருளாதார கோரிக்கைகள் மீது 7, 8 முறை பந்து நடைபெற்று இருக்கிறது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி அன்று கூட ஒரு பந்து நடந்து இருக்கிறது. தமிழகத்தில் நடந்த பந்து என்பது இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அரசும் சேர்ந்து சர்வ கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தான் அரசு அந்த பந்துக்கு வேண்டுகோள் விடுத்ததே தவிர, மத்திய அரசின் கொள்கைக்கு எதிராக விட்ட வேண்டுகோள் அல்ல என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக மத்திய அரசை கண்டு நீங்கள் நடுங்குகிறீர்கள் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. மத்திய ஆளும் கட்சியோடு இருக்கக்கூடிய அரசியல் உறவின் காரணமாக நீங்கள் பின்வாங்குகிறீர்கள் என்று தான் குறிப்பிட்டோம். குறிப்பாக இந்த வரி உயர்வு, விலை உயர்வை நாடே எதிர்க்கிறது. காங்கிரஸ் கட்சியே மத்தியில் கூடி விலை உயர்வு தவறு என்று தீர்மானம் போட்டு இருக்கிறது. அப்படி போட்டும் கூட. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி பேசிக் கொண்டு இருந்தால் இன்று முழுவதும் இரண்டு பேர் தான் பேச முடியும். இனிமேல் நடைபெறும் விவாதங்களில் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் கடைசியில் பேசுவது நல்லது. அப்போது ...ர் பேசும்போது இதற்கு எல்லாம் பதில் சொல்வதற்கு,

வசதியாக இருக்கும். முதலிலேயே 3 பேரும் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) 2 பேர் பேசியதும் அவைக்குறிப்பில் இருக்கிறது. படிப்பவர்கள் புரிந்துகொள்வார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது மத்திய அரசை எதிர்ப்பதில் நாங்கள் பின்வாங்க வில்லை என்று சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு ஜனதா ஆட்சி ஏற்பட்டபோது மாண்புமிகு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தஞ்சையில் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கு டெல்லியில் ஒத்துக்கொண்டு வந்தவர் அவர் பிளேனில் ஏறும்போது அதை வாபஸ் வாங்கி விட்டார்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைப் புகழ்ந்து பேசியதை எல்லாம் சொல்ல வேண்டி வரும்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவரமாக விஷயங்களின் உள்ளே போகவில்லை. அடுத்து பல்வேறு மானியக் கோரிக்கைகள் வரும்போது பல்வேறு விஷயங்களைத் தரலாம் என்பதற்காக நாங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் 3 பிரச்சினைகளில் அவர் சொன்னதற்கு மட்டும் நான் மறுப்பு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒன்று, எங்கள் தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் சேலத்தில் பேசியதாகப் பத்திரிக்கையில் வெளிவந்த பேச்சை மட்டுமே அவர் படித்தார். ஆனால் ஒரு பொறுப்புள்ள சட்ட மன்ற உறுப்பினர் என்று கருதிக் கொண்டு இருக்கிற அவர் பத்திரிகையில் வெளிவந்த அதற்குரிய மறுப்பையும் படித்து இருக்க வேண்டும். எனவே அதற்கு ஒரு மறுப்பும் வந்துள்ளதால் அப்பிரச்சினைக்குப் போகவில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, மறுப்பு ஒரு மாதம் கழித்து வந்து இருக்கிறது.





**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, நான் முடிக்கும் வரை பொறுத்து இருங்கள். இன்னும் நான் முடிக்கவில்லை. ஆக அதற்கு ஒரு மறுப்பு வந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அசாம் விஷயமாக காங்கிரஸ் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை நான் மறுக்கவில்லை. இந்தியாவினுடைய தேசிய ஒற்றுமையை குறிப்பாக அசாம் என்பது எல்லைப்புற மாநிலம் என்பதாலும், அந்நிய ஏகாதிப்பத்திய சக்திகளின் பல்வேறு சதித் திட்டங்களை அங்கே நிறைவேற்றி, நாட்டைத் துண்டாட நினைக்கிற சக்திகளைப் பின்னுக்குத் தள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவும், தேசிய ஒற்றுமைக்காகவும் நாங்கள் ஆதரிக்க வேண்டிய அவசியம் வந்தது இருக்கிறது. அடுத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியே போனால் பெரிய விவாதம் போல் ஆகிவிடும். (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடு) நீங்கள் தான் மறுத்துவிட்டீர்களே, உட்காருங்கள்.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே பொதுவாக ஆளும் கட்சி நண்பர்கள் தங்கள் தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டு, எதிர்க்கட்சிக்கு மறுப்புச் சொல்ல மறுத்தும் விடுகிறீர்கள். இது நல்லது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இல்லை. நிறைய கருத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நான் எல்லோருக்கும் வாய்ப்பைக் கொடுத்து இருக்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, மல்யுத்தத்தில் எங்கள் கையைக் கட்டிப் போட்டுவிட்டு சண்டைப் போடச் சொன்னால் எப்படி. நீங்கள் செய்வது அது போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இல்லை.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** * *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்கிறேன். நான் இருக்கும் வரை ஒருவருக்கும் ஒன்றும் ஆகாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அசாம் பிரச்சினையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியோ, மார்க்சிஸ்டு கட்சியோ காங்கிரசை ஆதரிக்கிறது அதை நாங்கள் மறுக்க வில்லை என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். ஆக நீங்கள் விரும்புகிற ஒரு பிரச்சினையிலே இந்திரா காங்கிரசை ஆதரிக்கலாம். நாங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரித்தால் அது தவறு என்பது எப்படி பொருந்தும். மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா?

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் தாக்குதல் இல்லை. இது அவருடைய நாவன்மை, இலக்கிய வன்மையைக் காட்டுகிறது.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, இது ஒருதலைப் பட்சமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாரையும் தாக்க விடமாட்டேன். எல்லோருக்கும் பாதுகாப்பு உண்டு, நான் இருக்கும் வரை.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆங்கிலத்திலே 'மேரேஜ் ஃபார் கன்வீனியன்ஸ்' என்று சொல்வார்கள். இப்போது பேசிய பேச்சிலே ஒவ்வொரு கட்சியும் அவ்வப்போது காங்கிரசோடு இணைந்தோ, அல்லது கூட்டாகவோ, அல்லது ஆதரித்தோ செயல்பட்டு வருவது தெளிவாகிறது. அப்படியிருந்தும், நாங்கள் ஏதோ தீண்டத் தகாதவர்களைப் போல அவர்கள் இங்கே பேசுவது உண்மையிலேயே எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆக அரசியலில் நிரந்தரமாக எவரும் எதிரிகளும் அல்ல. நிரந்தரமான நண்பர்களும் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தோடு இதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது. 1990-ல் சந்திப்போம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு ரூ. 12.24 கோடி பற்றாக்குறை இருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். அந்த விரிவான அறிக்கையிலே நான் பார்க்கிறேன். எந்த இடத்திலாவது வருவாய் இவ்வளவு, செலவு இவ்வளவு என்ற மொத்த கணக்குக் கொடுக்கப்படவில்லை. அது ஏன் என்பதை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாகப் பார்க்கின்ற நேரத்திலே, ஒவ்வொரு ஆண்டும் வரவு—செலவுத் திட்டத்தைப் பார்க்கின்ற நேரத்தில், வரி போடாமல் 10 சதவீதம் வருவாய் அதிகரிப்பது வழக்கமாக இருக்கிறது. சான்றாக 1984-85-ல் ரூ. 2227 கோடியாக இருந்தது, 1985—86-ல் 2578 கோடியாக உயர்ந்திருக்கிறது. காரணம், வரி போடுவது ஒரு புறமிருக்க, தொழில் பெருக்கம், உற்பத்திப் பெருக்கம், பல்வேறு வளர்ச்சிப் பெருக்கத்தினால் வருவாய் பெருகிறது. அது ஏறத்தாழ 10 சதவீதமாகும். 1986—87-ல் கணக்கைப் பார்க்கின்ற நேரத்தில், 2674 கோடி என்று தான் இருக்கிறது. ஆனால் 2800 கோடிக்கு மேற்பட்டுத் தான் இருந்திருக்க வேண்டும். ஏன் 10 சதவீத வருவாய் உயர்த்தப் படவில்லை என்பதை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1986-87-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பல்வேறு தலைப்புகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, செலவழிக்கப்படுகின்ற நிதி, குறைந்து வருவதாகப் பார்க்கின்றபோது, எனக்குக் கவலையாக இருக்கிறது. சான்றாக சமூக சமுதாய உட்பிரிவுகளில், குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதாரம் என்ற

தலைப்புகளில் 1985—86-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 146 கோடி. செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 116 கோடி தான். உங்களுக்குத் தெரியும், தமிழகம் எப்படிப்பட்ட வறட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்று. குடிநீர்த் தேவைக்கு அதிக நிதி ஒதுக்கீடு அவசியமாகிறது. ரூ. 116 கோடி செலவழிக்கப்பட்டு, ரூ. 30 கோடியை ஏன் செலவழிக்கவில்லை என்று நாவலர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

1986—87-ல் வேளாண்மை குறித்த மூலதனச் செலவிற்காக ரூ. 147 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணமாவது முழுக்க செலவழிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 1984-85-ல் ரூ. 5.79 கோடி அளவிற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 1985-86-ல் ரூ. 5.69 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் எனக்கு வேதனையாகவும், வியப்பாகவும் இருக்கிறது. 1986-87-ல் ரூ. 1.48 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை குறித்த மூலதனச் செலவில் ஏன் இந்த குறைந்த தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பற்றி கடந்த 2, 3 நாட்களாக இங்கே உரையாடிக் கொண்டிருக்கிறோம், விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 1984-85 ஆம் ஆண்டிலே நாம் 12.92 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறோம். 1985-86 ஆம் ஆண்டிலே 12.53 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அது குறைந்திருக்கிறது. அதிலே வியப்பு என்னவென்றால் 1986-87 ஆம் ஆண்டிற்காக 7.47 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிற போது சற்றேறக்குறைய பாதிக்கு மேலாக குறைக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று எனக்கு விளங்கவில்லை.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப் பெற்று மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களை இன்றைக்கு அலங்கரிக்கிறார்கள். இந்த நேரத்திலே உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறைவாக இருக்கிறது. 1984-85 ஆம் ஆண்டிலே 75.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.





1985-86 ஆம் ஆண்டிலே அது 27 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது. இப்போது 1986-87 ஆம் ஆண்டிற்காக 27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால் எப்படி அந்த உள்ளாட்சி மன்றங்கள் நல்ல முறையிலே பணியாற்ற முடியும் என்ற வினாவை நான் எழுப்ப விரும்புகிறேன்.

அதைப்போலவே நகர்ப்புற வளர்ச்சிக்காக 1984-85 ஆம் ஆண்டிலே 20½ கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டிலே அது 19 கோடி ரூபாயாகக் குறைந்தது. 1986-87 ஆம் ஆண்டிலே 12¾ கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம்?

அதைப் போல சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டிலே 163 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டிலே 188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் செலவிடப்பட்டது 144 கோடிதான். 1986-87 ஆம் ஆண்டிலே அந்த ஒதுக்கீடு 134 கோடியாகக் குறைந்திருக்கிறது என்றால் சமூக வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக மக்கள் எதிர்பார்க்கிற பலன்களைப் பெற முடியுமா என்ற வினாவை நான் எழுப்ப விரும்புகிறேன்.

நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே 7-வது பக்கத்திலே தொழில் துறையைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே பதிவு செய்யப்பட்ட தொழில்கள் ஆண்டொன்றுக்கு 8.1 சதவீதம் ஆக வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம், பதிவு செய்யப்பட்ட தொழில்கள் அத்தனையும் ஆரம்பிக்கப்படுவதில்லை. பதிவு செய்யப்பட்ட தொழில்கள் ஆரோக்கியமான நிலையில் வளர்ந்து கொண்டிருக்கின்றனவா? கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றனவே அதற்கு என்ன காரணம்? அந்த நிலையைப் போக்குவதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருந்தால் இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

அடுத்து வெள்ள நிவாரணம் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டு ஏறத்தாழ 66.8 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. அதிலே மாநில அரசு 45 கோடி ரூபாய்தான் செலவிட்டு இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே இந்த நிதியாண்டிற்குள்ளாக 60 கோடியை எட்டிப் பிடித்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிகமாகக் கேட்கிறீர்கள், அதிகமாகக் கொடுக்கிறார்கள். 60 கோடியை எட்டுவோம் என்று சொல்கிறீர்களே, மிச்சம் எட்டுக் கோடியை அடுத்த வருஷத்திற்கு சேமித்து வைத்து இருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். வெள்ள நிவாரணத்தின்போது கொடுக்கப்பட்ட ரூபாயை உடனடியாகச் செலவிட்டால்தானே அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் ஏற்பட முடியும். ஏன் இந்தச் சுணக்கம்?

அடுத்தபடியாக எலக்ட்ரானிக் குட்ஸ், மின்னணுப் பொருட்கள் உதிரி பாகங்கள் வரி 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்கள் வருகிறபோது 90 சதவீதம் வெளிமாநிலங்களிலிருந்துதான் மின்னணுப் பொருட்கள் வருகின்றன, ஆகவே அந்த வரியை 4 சதவீதமாகக் குறைத்தால் இங்கே அந்தப் பொருட்களின் உற்பத்தி பெருகும், வெளி மாநிலங்களில் இருந்து இங்கே வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

நேற்றையதினம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொழில் துறையைப் பற்றி மெத்த கவலைப்பட்டுக் கொண்டார்கள். இந்த பொருட்களுக்கு 4 சதவீதம் என்ற அளவுக்கு வரி குறைக்கப்படுமானால் தமிழகம் தங்கச்சுரங்கம் போல் அற்புதமாக தொழில்கள் வளர்ச்சியடையும். பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மக்களுக்கு குறைந்த விலையிலே பொருட்கள் கிடைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தாவர எண்ணெய்க்கு ஒருமுனை வரியாக இந்த ஆண்டிலிருந்து 4 சதவீதம் விதிக்கப்படுகிறது என்றால் தாவர எண்ணெய்க்கு அடுத்த புண்ணாக்கிற்கு 3 சதவீதம் பலமுனை வரியாக இருப்பதால் அதையும் ஒருமுனை வரியாக மாற்ற





வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெல்லத்தைப் பொறுத்தவரையிலே ஒருமுனைவரியாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே 8 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளி மாநில விற்பனைக்கு வரி நிவாரணம் கொடுக்கப்படவில்லை. 80 சதவீதம் வெளி மாநிலங்களுக்குக்குப் போகிறது. மாநில அரசு போட்டிருக்கிற 8 சதவீதம் மத்திய அரசின் 4 சதவீதம் ஆக 12 சதவீதம் வருகிற காரணத்தினால் அதன் விலையைக் குறைப்பதற்கும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பமுடியாத நிலைமையும் இருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே அந்த வரி 8 சதவீதம் வரி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கெஜட்டிலே 8 சதவீதம் கொள்முதல் வரி என்று போடப்பட்டிருக்கிறது. என் இந்த மாறுபாடு? உண்மை நிலையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே வறட்சியைப்பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் உரையிலே நான் பேசியபோதே சொன்னேன். தமிழகம் முழுவதுமாக, குறிப்பாக தென் மாவட்டங்களிலே பல்வேறு இடங்களிலே பருவ மழை பொய்த்ததன் காரணமாக மக்கள் குடிபெயரக்கூடிய அபாயநிலை உருவாகியிருக்கிறது. குடிநீர்த் தட்டுப்பாடு 6 மாதம் கடுமையாக இருக்கும் என்று சொன்னேன் அதற்கான வேலைகள் இப்போதே தொடங்க வேண்டுமென்று குறிப்பிட்டேன். ஆனால் வறட்சி பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அரசாங்கத்திற்கு தமிழகத்திலே உள்ள வறட்சி நிலைபற்றி முழுமையான தகவல் வரவில்லையோ என்று நான் அஞ்சுகிறேன். அதேநேரத்தில் இப்பொழுதாவது வறட்சி நிலையைப்பற்றி ஒழுங்காகக் கணக்கெடுத்தால்தான் மத்திய அரசாங்கத்திடத்திலேயிருந்து வறட்சி நிவாரணத்திற்கு உரிய தொகையை உரிய நேரத்தில் பெற்று மக்களுக்கு நிவாரணம் அளிக்க முடியும். ஆகவே வரிவஜா சம்பந்தப்பட்ட அறிவிப்புகளை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மார்ச் 27

(முற்பகல் 11-20)

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் பற்றாக்குறையை மிகவும் கனிசமாகக் குறைத்து, அநேகமாக பற்றாக்குறையே இல்லை என்று சொல்லும் அளவிற்கு மிகவும் சாமர்த்தியமாக நம்முடைய நிதியமைச்சரவர்கள் தயாரித்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய நிதியமைச்சரவர்களையும், செயலாளர் அவர்களையும் பாராட்டலாம். ஆனால் அதே நேரத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக, பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் எந்தவொரு உருவான திட்டமும் இல்லாத, வர்ணம் இல்லாத பட்ஜெட்டாக, கலர்லெஸ் பட்ஜெட்டாக இருப்பதை நான் பார்க்கிறேன். புதிய வரி போடக் கூடாது என்ற நல்ல எண்ணம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவாது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மறைந்த தமிழக முதல்வர் அண்ணா அவர்கள், வசதி படைத்தவர்களுக்கு வரிபோட்டு, அந்த வரிகளைத் தாங்கக் கூடியவர்களிடமிருந்து வசூலித்து கீழ்த்தளத்திலே உள்ளவர்களை பொருளாதார நிலையில் உயர்த்த வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கே உரித்தானபாணியில், 'Rob Peter and pay paul" என்று சொலலியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அணுகுமுறை என்பது இந்த பட்ஜெட்டில் இருப்பதாக என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. இதனால் ஏன் புதிய வரிகளைப் போடவில்லை என்று நான் கேட்பதாக எண்ணிக் கொண்டு ஆளும்கட்சி உறுப்பினர்கள் கேட்க நினைக்கலாம். ஆனால், அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, மாண்புமிகு நாவலர் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, ஏழை, நடுத்தர மக்களின் மாதாந்திர வருமானத்திற்குச் சொந்தக் காரர்களாக இருப்பவர்களைப் பாதிக்கக்கூடிய வரிகள் அத்தனையையும் போட்டாகிவிட்டது. மாநிலத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், அதேநேரத்தில், சாதாரண ஏழை மக்களைப் பாதிக்காத வகையிலேயும் ஒரு ஏற்பாட்டை உருவாக்குவது குறித்து யோசனை கூறியுள்ளார். மாநிலத்தின் பொருளாதாரம், குறிப்பாக அரசின் வருவாயில் மட்டும்



1986 மார்ச் 27] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நாட்டங்கொள்ளாமல் ஒட்டுமொத்தமான சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்கு என்னென்ன வழிவகைகளைக் கையாளலாம், நிதி ஆதாரங்களைப் பெருக்கலாம், அதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம் என்பது குறித்து ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுக்க பொருளாதார வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு நான் நல்ல யோசனையாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தமிழக அரசுக்குப் பொருளாதார ஆலோசகராக, மறைந்த பொருளாதார மேதை டாக்டர் பி. நடராஜன் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இதே மாமன்றத்தில் உறுப்பினராகவும் பணியாற்றி இருக்கிறார்கள். நிதி நிர்வாகத்திலே திறமைசாலி. ஒருங்கிணைந்த அன்றைய சென்னை இராஜதானியில் நிதியமைச்சராக இருந்த டாக்டர் கோபால ரெட்டி அவர்கள் காலத்தில் டாக்டர் நடராஜன் அவர்கள் பொருளாதார ஆலோசகராக இருந்து, மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்குவதற்கு பல்வேறு சீரிய திட்டங்களை அரசுக்குச் சொன்னார்கள்.

அதைப்போல, வணிக வரியைப் பொறுத்தவரையில் பல்வேறு வரிகளையும் சீரமைக்க வேண்டுமென்ற தன்மையிலே, அதன் மூலமாகத் தமிழக அரசுக்குக் காமதேனுவாக இருக்கின்ற வணிக வரியை எந்தெந்த முறையில் விதிக்கலாம் என்று ஆலோசனை சொல்ல வேண்டுமென்று அன்றைய அரசு டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை நியமித்தது. இப்படிப்பட்ட வல்லுநர்களின் சீரிய யோசனைகளின் காரணமாக, தமிழகத்தில் கள், சாராயக் கடைகளை மீண்டும் திறக்காமலேயே, கள் சாராயக் கடைகளை மூடினால் மத்திய அரசின் உதவி கிடைக்குமா என்று கேட்காமலேயே அன்றைய காங்கிரஸ் ஆட்சி திட்டங்களைத் தீட்டியது. அப்போதிருந்த மாநிலத்தினுடைய வருவாயையும், இன்றைய வருவாயையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் பத்து பன்னிரண்டு மடங்கு அப்போது குறைவாக இருந்தாலும் பல்வேறு வியக்கத்தக்க திட்டங்களை நடத்திக் காட்டியது என்பதை இந்த நேரத்தில் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்திலே,

தமிழகத்தின் பொற்காலம் என்று சொல்லும் அளவிற்குப் பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னேறியிருப்பதை என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை. ஆனால் இன்றைக்குக் கள், சாராயக் கடைகளைத் திறந்துவிட்டு, ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு போடுகிறோம் என்று பறைசாற்றிக் கொண்டு, அதேநேரத்திலே, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் மத்திய அரசு தமிழகத்தைப் புறக்கணிக்கிறது என்ற போர்க்குரலையும் இந்த மண்டபத்திலே நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மீண்டும் சொல்கிறேன், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, குறிப்பாக பெருந்தலைவர் காமராஜ் ஆட்சிக் காலத்திலே மாநிலத்தினுடைய வருவாய் என்ன? இன்றைய வருவாய் என்ன? அதை எண்ணிப் பார்க்க வேண்டும். மதுக் கடைகளைத் திறக்காமலேயே, சாராய வருமானம் இல்லாமலேயே. . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, இதற்கு எற்கனவே டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே பதில் அளித்தார்கள். திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்ற பொழுது, அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கு நாவலர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது, அன்றைக்கு ரூபாயினுடைய மதிப்பு மிகவும் அதிகமாக இருந்தது, இன்றைக்கு ரூபாயினுடைய மதிப்பு குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பேச வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, மொத்தமாகப் பார்த்தால் வருவாயும் பெருகியிருக்கிறது; மொத்தமாகச் செலவுகளும் பெருகியிருக்கின்றன. அதேநேரத்திலே வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரையில் நமக்கு சான்று கூறக் கூடிய நிலையான திட்டங்களை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே செய்தது என்பதுதான் என்னுடைய வாதம்.

அதைப்போல, அகில இந்தியாவில் பல்வேறு சாதனைகளைத் தமிழக அரசு செய்து எடுத்துக்காட்டாக இருக்கிறது. தமிழகத்திலே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கம், பெரம்பூரிலே கோச் பேக்டரி தொழிற்சாலை, இரயில் பெட்டித் தொழிற்சாலை, மணலியிலே எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை, சென்னை இரசாயனத் தொழிற்சாலை, ஆவடி இராணுவ டேங்க் தொழிற்சாலை, திருச்சியிலே பி.எச்.இ.எல். தொழிற்சாலை, டெலிபிரிண்டர் தொழிற்சாலை, சென்னை



துறைமுக வளர்ச்சித் திட்டம், தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அன்றைக்கு எடுத்துக் கொண்டு அதன் மூலமாகத் தமிழகம் முன்னேறி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, நான் ஏதோ விவாதம் எழுப்புவதற்காகவோ, விவகாரத்தை வளர்ப்பதற்காகவோ சொல்லவில்லை. காங்கிரஸ் ஆட்சி புரிந்த நேரத்தில் இவைகள் வந்தன என்று பட்டியலைப் போடுவதன் மூலம், என்ன உணர்வு வரும் என்றால், காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தால்தான் மத்திய அரசு உதவி செய்யும்; காங்கிரஸ் அல்லாத ஆட்சி இருந்தால் உதவி செய்யாது என்கிற பொருள் தான் அதற்கு வரும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், மத்திய அரசாங்கத்தை நாம் முறையாக அணுகி, அவர்களோடு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, அதன் மூலமாக, மாநிலத்தில் கேட்க வேண்டியவற்றிற்கு, தமிழகத்திலே, மத்திய அரசாங்கம் தொழில் தொடங்குவதற்காக செய்ய வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தால்தான் இவையெல்லாம் வரும். அந்த வாதத்திற்குத்தான் நான் வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, இதைவிட முறையான, இதைவிட இணக்கமான சூழ்நிலை எப்பொழுது வரும்? எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றே பேசி முடித்தாயிற்று. நேற்றே உறுப்பினர் பட்டியல் போட்டு கொடுத்தார். பிறகு எப்படி தொழில் வளரவில்லையென்று சொல்கிறார். தொழில் மானியக் கோரிக்கையிலே விளக்கமாகப் பேசலாம் என்று சொல்லி, நேற்றே நாவலர் அவர்கள் முடித்து வைத்தார்கள்.

[1986 மார்ச் 27

திரு. என் எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. வாதத்திற்காக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இவ்வளவு சாதனைகள் என்று சொன்னால் அமைச்சருக்கு ஏன் கஷ்டமாக இருக்கிறது? அவர்தானே, விவகாரத்தை வளர்க்கிறார்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே முறையாக, இணக்கமாக இருக்கிறோம் என்று சொல்வது எபபடி விவகாரத்தை வளர்ப்பதாக இருக்க முடியும்?

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, அதை நான் பின்னாலே சொல்வதாக இருந்தேன். ஒரு இணக்கமான சூழ்நிலை இப்பொழுதுதான் வருகிறது. வெகு நாட்களுக்குப் பின்னாலே, 1967-க்குப் பின்னாலே, என்று கூடச் சொல்லலாம். இப்பொழுதான் தமிழகத்திற்கும் தமிழக அரசுக்கும் மைய அரசுக்கும் ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிறைய பணம் பெற்றிருக்கிறோம், என்று சொல்லி, மத்திய அரசாங்கத்தை எவ்வளவு பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவருடைய வழியை நீங்கள் பின்பற்றினால் கொஞ்சம் நன்றாக இருக்குமே.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன கருத்து; புரட்சித் தலைவர் எவ்வளவு வாதாடி, தமிழகத்திற்கு வளம் சேர்த்திருக்கிறார், என்பதுதான்.

திரு. என் எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொல்கின்ற நேரத்திலே, மத்திய அரசு தாராளமாகக் கொடுத்திருக்கிறது என்றும் சொல்லிவிட்டுப் போகலாமே. . . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே அப்படிக் கொடுப்பது கடமை, கனிவும் ஆகாது, கருணையும் கிடையாது.



1986 மார்ச் 27]

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, பாராட்டுவதிலே தவறு ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, மனமாரப் பாராட்டுகிறோம்; இன்னும் கொடுத்தால், இன்னும் அதிகமாகப் பாராட்டுவோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, நம்முடைய அரசு, ஏனைய, அண்டை மாநிலங்களோடு ஒரு இணக்கமான, சுமுகமான உறவை வைத்துக் கொள்ள வேண்டும். தமிழகத்திலே பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற கிருஷ்ணா நதித் திட்டத்திற்குப் பல கோடி ரூபாய் செலவழித்தும்கூட, 7 ஆண்டுக்காலத்திற்குள் நாம் நிறைவேற்றி வைப்போம் என்று சொல்லப்பட்டு, 3 ஆண்டுகள் உருண்டோடி விட்ட இந்த நிலையிலே, எப்பொழுது அது முழுமையாகச் செயல்படுத்தப்படும், எப்பொழுது, சென்னைக்கு தண்ணிர் வரும் என்ற ஒரு நிலை இன்றைக்கு ஐயப்பாடாக இருக்கிறது என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். பக்கத்திலே இருக்கிற அரசுகளோடு, நம்முடைய அரசு, இணக்கமாக பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமான நிலைமைகளை உருவாக்கிக் கொண்டு, அந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். அப்படித் தீர்க்க முடியவில்லையென்றால், மத்திய அரசு தலையிட்டு, இந்தப் பிரச்னையில் தீர்வு காண வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்பதற்கு இந்த அரசு ஏன் தயங்குகிறது என்று தெரியவில்லை.

காவிரிப் பிரச்னையைப் பொறுத்தவரையில், இது மாதிரியான நிலையிருக்கிற காரணத்தாலே, வளம் கொழிக்கின்ற பகுதி, இன்றைக்கு வறண்ட பகுதியாக ஆகியிருக்கிறது. இங்குமங்கும் ஆட்சி மாற்றம் காரணமாக, பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் படவில்லை. பேச்சு வார்த்தை பலனளிக்கவில்லையென்றால், நீங்கள் தலையிட்டு, தீர்த்து வையுங்கள் என்று மத்திய அரசை இந்த அரசாங்கம் வலியுறுத்த வேண்டும். அதில் தவறு ஒன்றும் இல்லையென்று நான் கருதுகிறேன். உச்ச நீதிமன்றத்திற்கு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மார்ச் 27

இந்த வழக்கை எடுத்துச் சென்று அதன் மூலமாக, நிரந்தரமாக பரிகாரத்தைத் தேட நடவடிக்கை எடுதது்க்கொள்ள வேண்டு மென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்கிற ஒரு மனப்போக்கு, தங்களுடைய இயலாமையை மறைக்க, மத்திய அரசைப் பழிபோடும் தன்மை, இந்த ஆட்சியிலே காணப் படுகிறது. மக்களுடைய மனதிலே இடம் பெறுவதே நமது அழிக்க முடியாத மூலதனம் என்று நம்பிட வேண்டும். நேற்றையதினம் பேசுகிற நேரத்திலே கூட சேதுசமுத்திரம் திட்டத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சேது சமுத்திரத் திட்டத்திற்கும், கரூர்—திண்டுக்கல் அகல ரெயில் பாதைத் திட்டத்திற்கும் மத்திய அரசு முட்டுக்கட்டைப் போடுவதாகத் தெரிவித்தார்கள்.

முன்னாள் பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அரசு கவிழ்ந்து சரண்சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அரசுக்கு ஆதரவு அளிக்கும் என்று கூறி, மத்திய அமைச்சரவையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இரண்டு அமைச்சர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்படிச் சேர்க்கப்படுகின்ற நேரத்திலே 10 அம்சக் கோரிக்கையை, முன்னாலே வைத்து, ஒரு நிபந்தனையை வைத்துதான் அவர்கள் அமைச்சரவையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்கள், நம்முடைய தமிழகத் தேவைகளை வலியுறுத்த, திட்டங்களை நிறைவேற்றியிருப்பீர்களானால், அல்லது நிறைவேற்றுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுத்திருப்பீர்களானால், நிச்சயமாக நாங்கள் பாராட்டலாம். என்றாலும் கூட இன்றைக்கும், காலம் தாழ்ந்து விடவில்லை. நான் உங்கள் மூலமாக இந்த அரசுக்குச் சொல்ல விரும்புவது, மத்தியிலே, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக் கிறார்கள். ஒவ்வொரு முறையும் நாடாளுமன்றம் கூடுகின்ற நேரத்திலே, ஏனைய மாநில முதல் அமைச்சர்கள் அங்கே யிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களை கூட்டி வைத்து



1986 மார்ச் 27] [திரு. என். எஸ். வி. சித்தன்]

தங்களுடைய மாநிலங்களுடைய தேவை என்ன என்று சொல்லி, அதன் மூலமாக மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குச் சேர வேண்டிய, பல்வேறு திட்டங்களைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அந்த முறையிலே, நாமும் இங்கே இருக்கிற அமைச்சரவைப் பிரதிநிதிகளும் டெல்லி சென்று, தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி, அவர்கள் மூலமாக, தமிழகத்திற்கு வர வேண்டிய பல்வேறு திட்டங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற யோசனையை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்தபடியாக காவேரி படுகையில் எண்ணெய் வளம் இருக்கிறது என்பது மறைந்த மாமேதை டி.டி.கே. அவர்கள் காலத்திலே தெரிவிக்கப்பட்டது. தமிழகத்தின் வரலாற்றில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் பொருளாதார நிபுணர் டி.டி.கே. அவர்களும் படைத்த அரிய படைப்புகளில் ஒன்று காவேரிபடுகை எண்ணெய் வளம். சரண்சிங் அமைச்சரவையில் அண்ணா தி.மு.க. வினர் இருவர் இடம்பெற்றிருந்தபோது இந்த எண்ணெய் வளத்தை வெளியே கொண்டுவந்திருக்கலாம். ஆனால் தவறிவிட்டார்கள். இருந்த போதிலும் இப்போது எண்ணெய் வளம் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டிலிருந்து நாடாளு மன்ற உறுப்பினராக இருக்கிற திரு. சிங்காரவேல் அவர்களின் அரிய முயற்சியினால் இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பிரதமராக இருக்கிற மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்களின் ஒத்துழைப்பால் தஞ்சை படுகையில் எண்ணெய் வளம் எடுக்கப் படுகிறது; தஞ்சையில் நரிமணம் என்ற இடத்தில் மத்திய எரிவாயு கமிஷன் இன்றைக்கு பெட்ரோலியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி எற்படுகிறது. தஞ்சையின் எண்ணெய் வளத்தைப் பற்றிச் சொல்லும்போது விரைவிலே அங்கே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வரக்கூடும். அதைப் போன்று நாகையிலே அனல் மின் நிலையம் விரைவில் வரவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த அமைச்சரவையில் இருக்கிற மூத்த அமைச்சர்கள் மத்திய அரசுக்கு இணக்கமாக நல்ல பல கருத்துக்களைக் கூறிவருகிறார்கள். ஆனால் இளைய அமைச்சர்கள் மத்திய அரசுக்கு எதிராக கருத்துக்களைச் சொல்லி, சில நேரங்களில் சிக்கல்களை ஏற்படுத்திவிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரச்சனையை ஏற்படுத்துகிற முறையில் வெளியே சொல்லப்படுகின்றவைகளைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டாம். நேரம் வீணாகிவிடும். இன்னும் 15 பேர் பேச வேண்டும். விரைவில் முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, மூத்த அமைச்சர், இளைய அமைச்சர் என்று வயதை வைத்தா அல்லது எந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, வயதை வைத்தும், அனுபவத்தை வைத்தும் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தொழில்களைப் பொறுத்தமட்டில் பெரும் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் பல்வேறு தொழில்கள் புதிதாக தொடங்கப்பட்டன என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். புதிய, புதிய தொழில்களாக சிறு தொழில்கள், நடுத்தர தொழில்கள் தொடங்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மாநில அரசால் அப்போது நிறைவேற்றப்பட்டன. அந்த நேரத்தில் மேலும் புதிதாக என்ன தொழில்களை தொடங்க வேண்டுமென்று கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை சொல்ல ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படுவதுபற்றி கருத்து தெரிவிக்கப்பட்டது. பின்னால் அந்தக் கருத்து உருவாகாமல் போய் விட்டது. எஞ்சினீயரிங், மோட்டார் சம்பந்தப்பட்ட பொருள்கள் பஞ்சாலை சம்பந்தப்பட்ட பல்வேறு பொருள்கள் தயார் செய்கின்ற உப தொழில்களை தொடங்க ஒரு ஆலோசனைக் குழுவை அரசு இப்போதாவது அமைக்கலாம். அப்படி அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இப்போதும் அதற்கு காலம் கடந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த மாநிலம் மத்திய அரசிடமிருந்து பல்வேறு தொழில்களைப் பெறுவதிலே இந்த அரசும் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருக்கிற நாங்களும் மத்திய அரசிடமிருந்து தொழில்களைப் பெறுவதில் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறோம். வரும் காலத்தில் இந்த வகையிலே தொழில்களை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் சிமின்ட் தொழிற்சாலையைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். மற்ற மாநிலங்களிலிருக்கிற நிலைமை தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்கிறார்கள். சிமின்ட் தொழிலுக்கு மூலப் பொருளாக இருக்கிற சுண்ணாம்புக் கல்லை வெட்டி எடுப்பதற்கு தமிழ் நாட்டில் 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்ற அளவுக்குத்தான் உரிமை வழங்கப்படுகிறது. (குறுக்கீடு) எனக்கு கிடைத்திருக்கிற தகவல்களைச் சொல்கிறேன். தவறாக இருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் மற்ற மாநிலங்களிலே 20 ஆண்டுகள் உரிமை வழங்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்குத்தான் தமிழ்நாட்டில் சுண்ணாம்புக் கல்லை பயன்படுத்தும் உரிமை வழங்கப்படுவதால் பெருமளவில் சிமின்ட் தொழிலைத் தொடங்க முன்வரவில்லை என்று நான் அறிகிறேன். ஆகவே, பிற மாநிலங்களைப்போல் 20 ஆண்டுகளுக்கு உரிமை வழங்க ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பழனியாண்டி அவர்களும் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் தலைவரும் எனக்கு இப்படி தகவல் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் இதை பரிசீலனை செய்து, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் மிகப்பெரும் ஊழல் நடந்திருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கிற சட்டக்கல்லூரியில் இதற்கு முன்னால் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே பி. எல். பட்டப்படிப்பு படித்தவர்கள் 1985 ஏப்ரல் மாதம் தேர்வு எழுத வேண்டும். ஆனால் 6 மாதம் கழித்து அக்டோபர் மாதத்தில்தான் தேர்வு நடைபெற்றது. அதற்குப் பின்னாலே 5 மாதங்கள் கழித்துதான்

விடைத்தாள்கள் திருத்தப்பட்டன. திருத்தியதிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. சுற்றொப்ப 340 பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். ஏறத்தாழ 6000 விடைத்தாள்கள் இருக்கும். ஏனென்றால் ஒவ்வொருவரும் 30 அல்லது 40 பக்கம் எழுதியிருப்பார்கள். எல்லாவற்றையும் 13 ஆசிரியர்களே 8 நாளில் திருத்தியிருக்கிறார்கள். 8 நாட்களும் தொடர்ந்து அல்ல, விட்டுவிட்டு திருத்தியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மார்க்குகளைப் பதிவு செய்வதற்கு 'டேபுலேஷன்' என்று சொல்வார்களே, அதற்கு இரண்டே நாள்தான் எடுத்திருக்கிறார்கள். 340 பேர்கள் தேர்வு எழுதியதில் 45 பேர்கள் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். 75 பேர்களுடைய முடிவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 5 முதல் 9 வரை போடுகின்ற மாடரேஷன் மார்க் பரவலாக எல்லோருக்கும் போடப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

கல்வி நிர்வாகத்தினுடைய மெத்தனப் போக்கு காரணமாக, ஓராண்டுக்கு முன்னாலேயே சட்ட வல்லுநர்களாக விளங்க வேண்டியவர்கள் இன்னும் தேறாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு முறைகேடுகளைப் பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலவையில் கூட இதுசம்பந்தமான குற்றச்சாட்டு சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு நிவாரண நடவடிக்கையாக ஒரு விசாரணைக் குழு அமைத்து என்ன தவறு நடந்தது என்பதையும், எந்த இடத்தில் தவறு நடந்தது என்பதையும், தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய பேச்சின் பிற்பகுதியில் தவறு நடந்ததாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் முதலிலே பேசிய போது இரண்டு தடவை ஊழல் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னால் நாளைக்கு பரிட்சையில் ஊழல் என்று பேப்பரில் பெரிதாக வந்துவிடும். எனவே தவறு என்று சொன்னதாகவே வைத்துக் கொள்ளலாம்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிண்டிகேட்டில் கூட இதுபற்றி விசாரித்து அதில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டு இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு என்று சொன்ன வார்த்தையை எடுத்து விடுங்கள். அதையும் ஊழல் என்றேதான் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தவறு நடந்திருக்கிறது என்று சொல்வதில் தவறு இல்லை. ஆனால் ஊழல் என்று சொன்னால் குற்றச்சாட்டாக வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரிக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை. அதுபற்றி விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு என்ற வார்த்தைக்குப் பதிலாக ஊழல் என்றுதான் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஊழல் என்று சொன்னால் அலிகேஷன் என்று வரும். தவறு நடந்திருக்கிறது என்றால் லேப்ஸஸ் என்ற வகையில் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே ஊழல் என்று குறிப்பிட வேண்டாம். அவ்வாறு குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் விதி 93-ன்படி தலைவரிடம் முன் அனுமதி பெற்றுப் பேச வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதுபற்றிய முழு விவரங்களையும் கொடுப்பார்கள். நான் தெரிவிக்க விரும்புவது கல்வித் துறையிலே இருக்கிற ஒரு அலுவலர் அனுப்பப்பட்டு விசாரணை செய்திருக்கிறார். அதில் தவறு எதுவும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அது போதுமானதாக இல்லை. மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. 300-க்கும் அதிகமான பேர் வாழ்க்கையைத் தொடங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு முன்னால் கூட இந்தமாதிரி நடக்கவில்லை. இன்னும கொஞ்சம் விரிவான முறையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுங்கள் என்று நான் கூறுகிறேன். இங்கே இருக்கிற யாரும் ஊழலுக்குச் சம்பந்தப்பட்டிருப்பதாக நான் சொல்லவில்லை. ஒரு தவறு நடந்திருக்கிறது. அதாவது ஒரு கொடுமை நடந்திருக்கிறது. அந்தக் கொடுமை எதிர்காலத்தில் நடக்காத அளவுக்கு அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமுதாயச் சூழ்நிலையாக சமுதாயத்தைச் சீரழித்து வருகிற ஒரு பயங்கரமான பிரச்சினையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதாவது வரதட்சிணை பிரச்சினை. முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள பொதுநல மையத்தின் தமிழ் மாநிலப் பிரிவு சமீபத்தில் நடத்திய ஒரு கருத்தரங்கில் தலைமை நீதிபதி உட்பட பல நீதிபதிகள், சட்ட வல்லுநர்கள் சில அரிய யோசனைகளைச் சொல்லியுள்ளனர். இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒழிக்க வேண்டும். கணவரால் கைவிடப்பட்ட அல்லது துன்புறுத்தப் பட்ட, வரதட்சிணைக் கொடுமைக்கு ஆளான பெண்களுக்கு அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் மட்டுமல்லாது தனியார் தொழில்கூடங்களிலும் கூட குறிப்பிட்ட சதவிதப்படி இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்திருக்கும்போது சமுதாய அநீதிகளின் காரணமாக வாழ்க்கையில் ஊனமுற்ற அந்த வரதட்சிணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த வரதட்சிணைக்





கொடுமையில் ஈடுபடுகிறவர்களுக்கு தண்டனைக் காலத்தை 7 ஆண்டுக் காலமாக உயர்த்துகிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆளும் கட்சியினுடைய தோழமைக் கட்சி என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் மூலமும், மேலவைத் தேர்தல் மூலமும் ஆளும் கட்சிக்குச் செல்வாக்கு குறைந்து கொண்டு வருகிறது என்பது தெரிகிறது. வாக்காளர் பட்டியல் குளறுபடி போன்ற காரணங்களை நாம் சமாதானமாகச் சொல்லலாம். அது உண்மையாக ஆகிவிட முடியாது. எனவே இங்கே வர இருக்கும் அபாயத்தை உணர்ந்து, வருகிற காலங்களிலாவது உரிய முறையில் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இப்போது பேசுவதுதான் இணக்கமான பேச்சா ? இப்படித்தான் இணக்கம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, செல்வாக்கு குறைந்து வருகிறது என்பது மாநில அரசை மட்டும் கூறுகிறாரா அல்லது மத்திய அரசையும் கூறுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசை பற்றி மட்டும் தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். எந்தவிதமான கடுமையான சொற்களையும் நான் பேசிவிடவில்லை. எந்த நிலையில் பேச வேண்டுமோ அந்த நிலையில் இருந்துக் கொண்டு தான் பேசி வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திடத்திலே மக்களுக்கு இருக்கிற மதிப்பு குறைந்திருக்கிறது, செல்வாக்கு குறைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1986 மார்ச் 27

போது, இப்படி விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டது போல செல்வாக்கு குறைந்தது மத்திய அரசிற்கா, மாநில அரசிற்கா எதைச் சொல்கிறார் என்று கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே இணக்கமானவர்கள் அதையும் இணக்கமாக வைத்து பேசுவது நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடிப்பதற்கு முன்னாலேயே குறுக்கிட்டு விட்டார்கள். கொஞ்சம் பொறுமையோடு கேட்டிருந்தால் பொருத்தமாக அது இருந்திருப்பதை புரிந்துக் கொண்டிருக்கலாம்.

அடுத்து இந்த தமிழக அரசினுடைய ஆட்சியினாலே திறந்து வைக்கப்பட்ட மதுக் கடைகள், குடிப்பவர்களை மட்டும் சீரழிக்கவில்லை. இந்தக் கட்சியையும் ஆட்சியையும் சேர்த்தே சீரழித்திருக்கிறதோ என்ற கவலை எனக்கு ஏற்படுகிறது. கிளைக் கடைகள் என்ற பெயராலே சாராயக் கடைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கியிருப்பது, இந்தக் கட்சியின் ஆணி வேரையே அசைத்துக் கொண்டிருக்கிறதோ என்று நான் அச்சப்படுகிறேன். . . .

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியான விவாதம் ஆகாது * *

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதை எக்ஸ்பன்ஞ் பண்ண வேண்டும். அவர் அப்படிச் சொல்லவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, கட்சியை இணைத்து இதில் நான் எதுவும் பேசவில்லை. நான் அந்த மாதிரி சொல்லவும் இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்சியைப் பற்றிச் சொன்னதை நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மார்ச் 27]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கிளைக் கடைகள்—பிரான்ச் என்ற பொருளிலே சொன்னேன். ஒரு வேளை அது கட்சி என்று கேட்டிருக்கலாம். . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு கொள்கையை அமல் படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் எப்போதுமே வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை இன்னும் அழுத்தமாக அவர் சொல்வதிலே தவறு இல்லை. ஆனால் தேர்தலிலே ஏற்பட்டிருக்கிற முடிவுக்கு அதைக் காரணமாகச் சொல்லி, அதனால் எங்கள் கட்சியினுடைய செல்வாக்கு தேய்ந்து இருக்கிறது, குறைந்திருக்கிறது என்று அவர்கள் சொல்வது சரியானது அல்ல. நண்பர்களுக்கு உரிய எடுத்துக் காட்டு, வெற்றி தோல்வி இரண்டிலும் பங்கேற்றுக் கொள்வதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, மூத்த அமைச்சர்கள் எல்லாம் மைய அரசை பாராட்டுகிறார்கள், பிரதமரைப் பாராட்டு கிறார்கள். ஆனால் இளைஞர்கள் தாம் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்னை எப்படி எழுகிறது என்றால், பிரதமரும் நமது முதல்வரை பாராட்டுகிறார்கள். நமது முதல்வரும் பிரதமரைப் பாராட்டு கிறார்கள். அதேபோல் அங்குள்ள மூத்த தலைவர்களும் தமிழக அரசைப் பாராட்டுகிறார்கள். இங்கே உள்ள மூத்த [illegible]களும் பாராட்டுகிறார்கள். அங்கே உள்ள சில இளைஞர்கள் தமிழக அரசை குறை சொல்வது போல், இங்கே இருக்கிற இளைஞர்கள் சிலர் அங்கேயிருப்பவர்களைப் பற்றி குறை சொல்கிறார்கள். இந்தப் பிரச்னையே அப்படித்தான் எழுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுக் கடைகளை [illegible] எற்கெனவே இந்த அரசாங்கம் ஜனவரி முதல் தேதியிலிருந்து அடுத்த வருடம் மூடிவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதை ஏப்ரல் 1 ஆம் தேதியே மூடலாம் என்று நான் சொன்னேன். நிர்வாக காரணங்களுக்காக.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 1 ஆம் தேதி அவ்வளவு நல்லது அல்ல.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஏப்ரல் 1 ஆம் தேதி அவ்வளவு நல்ல தேதியல்ல என்று சொல்லுகிறார்கள். நான் ஒரு யோசனைக்காகச் சொல்ல விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதியன்று மதுவிலக்கை அமல்படுத்தினால் தாய்க் குலம் உங்களை வாழ்த்தும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, **

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் ஒன்றும் வரவில்லை. ஆகவே அப்படித்தான் இறந்தார் என்று இணைத்துக் கூறுவது அவைக் குறிப்பிலே ஏறுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது நீக்கப் படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவரவர்களே, இவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக எடுத்துச் சொன்னேன். அதுபோன்ற விரும்பத்தகாத முறைகள் எதிர் காலத்திலே வரக்கூடாது என்று சொல்லிக் கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களைப் பற்றி ஒரு வார்த்தை. இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வந்திருக்கிறார்கள். 1958 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் என்ன லட்சியத்திற்காக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் துவக்கப் பட்டனவோ அந்த லட்சியத்திலிருந்து விலகிப் போய்க் கொண்டிருக்கின்றனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் கட்டுப்பாட்டிலிருந்த கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் போன்றவைகளைப் பிரித்து அவை வேறு வேறு துறைகளுக்கு சென்றுவிட்ட காரணத்தால் ஊராட்சி ஒன்றியங் களில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தாலும் அவர்கள் மக்களோடு இணக்கமாக மக்கள் நலப் பணிகளை செய்ய முடியாமல் இருக்கிறார்கள். 1962 ஆம் ஆண்டிற்கு முன்னால் ஊராட்சி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஒன்றியங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருந்தனவோ அந்த அதிகாரங்களைத் திரும்பக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களிடமிருந்து நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தெலுங்கு கங்கை திட்டம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துவக்கி வைத்தத் திட்டமாகும். இன்றைக்கு தமிழக அரசும், ஆந்திரா அரசும் அனுமதி கேட்கிற போது இன்றைய பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களால் காலம் தாழ்த்தப்படுகிறதே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் திட்டம் இந்த ஆண்டே துவக்கப்படுவதற்கு இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இருப்பதால் டெல்லிக்குச் சென்று பிரதமர் அவர்களைச் சந்தித்து அனுமதியை வாங்கிக் கொடுப்பதற்கு பொறுப்பேற்றுக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, எங்களைப் பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்பது வேடிக்கை யாக இருக்கிறது. இங்கே இருக்கிற அத்தனை பேரையும் பொறுத்த அளவில் தெலுங்கு கங்கைத்திட்டம் விரைவிலே உருவாக்கப்பட வேண்டும், சென்னை மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்பதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. இந்தத் திட்டம் நல்ல முறையிலே உருவாக வேண்டுமென்பதற்காகத்தான் அன்றையதினம் அன்னை இந்திரா காந்தி அவர்கள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு தமிழக அரசின் சார்பிலே ஆந்திர அரசிற்கு செக்கை கொடுத்தார்கள். பக்கத்திலே இருக்கிற மாநிலங்கள் இந்தத் திட்டத்திற்கு ஆட்சேபனை செய்கின்றன என்பது தான் நமக்கு இப்போது இருக்கிற கவலையெல்லாம். உதாரணமாக கர்நாடக மாநிலமும், மகாராஷ்டிர மாநிலமும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். காரணம் ஆந்திர மாநிலம் தமிழ் நாட்டிற்கு குடிதண்ணீருக்காக கொண்டு வருகிற தண்ணீரை வழியில் பாசனத்திற்கு எடுத்துக் கொள்கிறார்கள். அதிலே தான் சிக்கல் வருகிறது. 15 டி.எம்.சி. தண்ணீர் குடிதண்ணீருக்காக கேட்பதில் அவர்களுக்கு எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆகவே இந்த மூன்று

மாநிலங்களும் சேர்ந்து மத்திய அரசிடம் மத்தியஸ்தம் செய்யுங்கள் என்று சொன்னால் நிச்சயமாக மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளும். நம்மைப் பொறுத்தவரையில் மூன்று மாநிலங்களுக்குமிடையே ஒரு இணக்கமான சூழ்நிலையில், தண்ணீர் மூன்று மாநிலங்களுக்கும் பயன்படுகிற முறையிலே வரவேண்டும். இதற்கு காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாங்களும் துணையாக இருப்போம்.

* திரு. தி. நா. கோ. அ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூதறிஞர்களும், பேரறிஞர்களும் பணியாற்றிய இந்த மாமன்றத்திலே என்னைப் போன்றவர்களுக்கு வாய்ப்பளித்து என்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாத மலர்களுக்கு என்னுடைய நன்றி மலர்களை காணிக்கையாக்கிக் கொண்டு என்னுடைய கன்னிப்பேச்சைத் துவக்குகிறேன். என்னை தேர்ந்தெடுத்த திருநாவலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக தன் இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் உழைத்திட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடலேறுகளுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பை அளித்த தங்களுக்கும், இந்த அவை முன் நல்லபல திட்டங்களை அறிவித்திருப்பதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் கடந்த ஆண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதனால் இடர்ப்பாடுகள் ஏற்பட்ட போதிலும் அனைத்து தரப்பிற்கும் ஏற்ற பல்வேறு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டு அவற்றை சிறப்பாகவும் செம்மையாகவும் போர்க்கால அடிப்படையில் நிவாரண பணிகளை முறையாகவும் முனைப்பாகவும் நடவடிக்கைகள் எடுத்து செயல்படுத்தியதை இந்த நாடு நன்கு அறியும். நல்லவர்கள் அறிவார்கள். ஆனால்



குறுகிய மனம் படைத்தவர்கள் புழுதி வாரித் தூற்றுகிறார்கள். இன்றைக்கு இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் பின்பற்றத்தக்கதாக அமைந்திருக்கிற தனனிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், பாடநூல் சீருடை வழங்குகிற திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் நரிக்குறவர், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது போன்ற இன்னும் பல போற்றத்தக்க மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். நலிந்தவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களையும், பொதுவான வளர்ச்சித் திட்டங்களையும், வறட்சி நிவாரணம் போன்ற பணிகளையும் நிறைவேற்ற மத்திய அரசின் கையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் தன்னாட்சிப் பெற வேண்டும். அதற்காக இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரினார். இந்தக் கொள்கையை நாடு ஏற்கிற அளவிற்கு நம்பிக்கை ஒளி பிறந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

(முற்பகல் 11-50)

முற்போக்கு எண்ணம் கொண்ட நமது பிரதமர் இராஜீவ் அவர்கள் நடைமுறைப்படுத்துவார், நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இதை வலியுறுத்தியிருப்பதற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை, தமிழக அரசும், ஆந்திர அரசும் சேர்ந்து செயல்படுத்த திட்டங்கள் தீட்டி, தமிழக எல்லைகளில் கால்வாய்களை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அந்தப் பணிகளை தொடர மத்திய அரசு ஆணைக்காக காத்திருப்பதாக அறிகிறேன். இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கும் மக்கள் நலப் பணிகளுக்கும் மத்திய அரசு காலம் தாழ்த்தாமல் அவற்றை நிறைவேற்ற உடனடியாக ஆணைகளைப் பிறப்பித்து தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. நா. கோ. அ. மனோகரன்] [1986 மார்ச் 27

தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன் கிராமங்களுக்கு உள்ள குடிநீர்ப் பிரச்சனையைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக கைப் பம்புகள், விசைப் பம்புகள், பாதுகாக்கப் பட்ட மேல்நிலைத் தொட்டிகள் ஆகியவற்றை ஏற்படுத்தியது பாராட்டுக்குரியதாகும். இன்னும் பல கிராமங்களில் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாமல் இருந்து வருகிறது. குறிப்பாக எனது தொகுதியிலே ஆனந்தூர், குமார மங்கலம், மண்டமேடு, சரவணபாக்கம், ஓடப்பங்குப்பம், எலவத்தடி, பரிக்கல், கூவாகம், பெரும்பாக்கம், நல்லாலகுப்பம், பாண்டூர் போன்ற கிராமங்களில் இதுபோன்ற பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக் கின்றன. எனவே அரசு விரைவில் நடவடிக்கை எடுத்து, இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். இந்தக் குடிநீர் திட்டத்திற்கு 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். என்றாலும் இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு மேலும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு வளம் சேர்த்திடும் கல்வித் திட்டத்தை அறிவித்து அனைவரும் ஏற்கும் வகையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, புதிய கல்வி முறையை கொண்டு வந்து இருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இப்படி புதிய கல்விக் கொள்கையை அறிவித்து இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

மேலும் பல்வேறு மாவட்டங்களில் பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், அழகப்பா போன்றவர்கள் பெயராலேயும், அன்னை தெரசா போன்றவர்கள் பெயரிலும் பெண்களுக்கு என்று ஒரு தனிப் பல்கலைக் கழகத்தையும், தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றையும் ஏற்படுத்தியதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த ஆண்டு கல்விக்காக 551 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டு உள்ளது. கடந்த ஆண்டை விட 83 கோடி ரூபாய் அதிகமாக உள்ளது வரவேற்கத்தக்கதாகும்.



1986 மார்ச் 27] [திரு. தி. நா. கோ. அ. மனோகரன்]

அதேபோன்று முதியோர் கல்வித் திட்டத்தை மிகச் சிறப்பாக நடத்தியமைக்காக, மத்திய அரசின் 25 லட்ச ரூபாய் பரிசு பெற்று இருப்பது பாராட்டத்தக்கதாகும்.

மக்கள் நல்ல சுகாதாரத்தோடும் ஆரோக்கியத்தோடும் வாழ, வளமான மருத்துவ வசதியை அளிப்பது அரசின் கடமையாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, கிராமப்புறங்களில் 5,000 பேர் வாழும் சமவெளிப் பகுதிகளிலும், 3,000 பேர்கள் வாழும் மலைப் பழங்குடியினர் பகுதியிலும் சுகாதாரத் துணை நிலையங்களை அரசு ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் பழுதடைந்த மருத்துவ மனைகளில் உள்ள அவல நிலைமைகளைப் போக்கவும், பாதிப்புக்கு உள்ளானவர்களை காப்பாற்றவும் அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக உள்ள தஞ்சாவூரில் பருவ மழை தவறியதன் காரணமாக நெற்பயிரைக் காப்பாற்ற கர்நாடகத்தை எப்போதும் கையேந்துகிற நிலைமை இருக்கிறது. பருவம் தவறிய பருவ நிலைமைகள் இருந்தும் பல்வேறு இடங்களில் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தும், ஏரிகளை நவீனப்படுத்தி, சீரமைத்து, மதகுகளை புதுப்பித்தும் அவற்றை வலுப்படுத்தியும் சிறுபாசன வசதிகளை உருவாக்கியும், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விதைப் பொருள்கள், பூச்சி மருந்துகள் போன்றவைகளை மானிய விலையில் வழங்கி. விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கத் தொகை அளித்து வருவதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். கூலி உயர்வு, விவசாயம் செய்பவர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் ஆகியவற்றைக் கருத்திலே கொண்டு, தற்போது நெல்லுக்கு கொடுக்கப்படுகின்ற விலையை அதிகரித்தும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் வரை கொடுக்கவும் அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையில் தமிழக அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகிற பேச்சு வார்த்தை முற்றுப் பெறாத சிந்துபாத் கதை போன்று நீண்டு கொண்டே இருக்கிறது. இது ஆரோக்கியமான

[திரு. தி. நா. கோ. அ. மனோகரன்] [1986 மார்ச் 27

ஜனநாயகத்திற்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் ஊனமாக இருந்து வருகிறது. என்ன காரணமோ, மத்திய அரசு இதில் அக்கறை செலுத்தாமல் இருந்து வருகிறது. இது இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்று கருதாமல், தேசியப் பிரச்சனையாகக் கருத்தில் கொண்டு இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் மத்திய அரசு திட்டம் கொண்டு வந்து உதவி புரிய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே சிறப்பு பெற்ற கோயில்கள் பழுதடைந்து இருப்பதைக் கருத்திலே கொண்டு, அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், இந்த ஆண்டு 15 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்பதோடு எனது தொகுதியிலுள்ள சில குறைகளைச் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். பின்தங்கிய பகுதியான எனது திருநாவலூர் தொகுதியில் ஒரு அரசினர் கல்லூரியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் எனது தொகுதியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்தார்கள். அது லாபகரமாக இயங்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, அதன் மூலம் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருள்களை பயன்படுத்தி பல புதிய தொழிலகங்களை உருவாக்குமாறும், என்னுடைய தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகள் இருப்பதால் நூற்பாலை ஒன்றை அமைத்து நகரப் பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதி கிராமப் பகுதிகளைக் கொண்டது. குடிசைகளில் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருவதால், அடிக்கடி குடிசைகள் தீக்கிரையாகிவிடுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு இரண்டு தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தித் தருமாறும், புகழ்பெற்ற சமயக் குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த இடமான திருநாவலூரையும், சடையப்ப வள்ளல் வாழ்ந்த பாடல் பெற்ற ஸ்தலமான திருவெண்ணெய் நல்லூரையும் சுற்றுலா ஸ்தலமாக அமைக்குமாறும் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்.



1986 மார்ச் 27]

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சபையினுடைய முன்னவரும், நிதியமைச்சருமாகிய மாண்புமிகு நாவலர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்ததற்கு முதலாவதாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கை மீது, நிதி நிலை தவிர வேறு எந்தக் கருத்தைப் பற்றியும் சொல்லலாம் என்று ஒரு எண்ணம் இந்தச் சபையில் பரவலாக இருப்பதாக நான் சபையினுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வரும்போது அறிகிறேன். இதற்காக இதுவரையிலும் ஒதுக்கப்பட்ட நேரத்தை ஏதாவது ஒரு அரசியல் மாணவன் தொகுத்தெடுத்து பார்ப்பானேயானால் கிட்டத்தட்ட 10 சத நேரம்கூட நிதிநிலை பற்றி பேசப்படுவதற்கு ஒதுக்கப்படவில்லை என்பதை நாம் கண்டுகொள்ள முடியும். எதிர்காலத்திலாவது, முறையான ஒரு விவாதம் மிகுந்த ஒரு சபையாக நம்முடைய பேரவை மாற வேண்டுமென்று என்னுடைய பெருவிருப்பத்தை, யாருடைய மனத்தையும் வேதனைபடுத்தாத முறையிலே வெளியிட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பேரவை தமிழ் நாட்டிலே ஒரு மௌன புரட்சி நடந்து முடிந்து விட்ட காலத்தில் கூடியிருக்கிறது. அண்மையிலே நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலைத் தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தத் தேர்தலுடைய முடிவுகளை வைத்து நான் விமர்சிக்க விரும்பவில்லை. அதை நாம் சபையின் வெளியே செய்து கொள்ளலாம். என்ன இருந்தாலும் ஏறத்தாழ 3 கோடி வாக்காளர்கள் கலந்து கொண்ட ஒரு பொதுத் தேர்தலுக்கு அச்சான ஒரு தேர்தலை நம்முடைய தமிழகத்தில் வெகு அமைதியாக, திருப்திகரமாக நடத்திக் காட்டியதற்காக நான் தமிழக அரசை பாராட்டுகிறேன். இந்த அமைதி எப்படி நடந்தது என்று சிந்தித்து பார்க்கும்போது ஒரு சமயம் தேர்தல் ஒரு நாளிலேயே தமிழகம் முழுவதும் நடந்த காரணத்தினாலே இப்படிப்பட்ட நன்மை விளைந்து இருக்கிறது என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல, தேர்தல் நடக்கக்கூடிய ஊர்களிலெல்லாம் அந்த ஊரினுடைய வாக்காளர்களைத் தவிர வேறு எவரும் வர முடியாத ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தாலும் கூட இப்படிப்

பட்ட ஒரு அமைதியான மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். என்ன இருந்தாலும் இப்படிப்பட்ட அமைதியான தேர்தலை நடத்தி முடித்த காவலர்களை. . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் சமத் அவர்கள் ஒரு நாளிலே தேர்தல் நடந்ததால் வேறு ஊர்களிலிருந்து ஆட்கள் வராத காரணத்தால் இந்த மாற்றம் எழுந்திருக்கலாமோ என்று குறிப்பிட்டார்கள். சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளிலெல்லாம் கூட தேர்தல் நடத்த இருக்கிறோம். . .

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். வைக்க வேண்டிய நேரத்தில் வையுங்கள். நாளையே வைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஆனால் நடந்து முடிந்த நிலையைப் பார்க்கும்போது, என்ன இருந்தாலும், வாக்காளர்களைத் தவிர, வாக்கு சேகரிப்பவர்கள் தான் தேர்தல் நடக்கக் கூடிய நேரத்திலே வந்து குவிந்து விடுகிற காரணத்தினாலேதான் தேவையற்ற கலவரங்கள் பல இடங்களிலே வளர்ந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. நீங்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தியபோதே மாநகராட்சி தேர்தலையும் வைத்திருந்தால் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்குரிய தேவையே இல்லாமல் இது நடந்து முடிந்திருக்கும். என்ன இருந்தாலும், உள்ளாட்சிகளுக்கும், மற்ற பேரூராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் முடிந்து விட்ட பிறகு இங்கு மாநகராட்சி தேர்தல்களை நடத்துவதில் மாத்திரம் பின்தங்கி விடாமல் அதையும் நீங்கள் முன்னாலேயே நடத்த வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

தேர்தலினுடைய முடிவாக பல்வேறு அரசியல் கட்சிகள் பொறுப்பில் அமர்ந்து இருக்கின்றன. இப்படி அமர்ந்து இருக்கக்கூடிய காரணத்தால் வேறு எந்தவித அரசியல் கண்ணோட்டமும் இல்லாமல் அந்த உள்ளாட்சிகளின் நடைமுறைகள், அதன் அரசு முறைகள் செவ்வனே





நடைபெறுவதற்கு அரசு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும், அரசியல் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நிதியை எல்லாம் தாராளமாக, காலந்தாழ்த்த கொடுத்து அவை எல்லாம் செவ்வனே செயல்படுவதற்கு உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே ஏறத்தாழ ஒரு மாமாங்க காலத்திற்கு பிறகு இந்தத் தேர்தல்கள் நடந்து முடிந்து பொறுப்புக்கு வந்து இருக்கிறார்கள் என்ற இந்த நிலையில், பொதுமக்கள் எதிர்பார்க்கக்கூடிய இந்த கால கட்டத்தில், அவர்களுக்கு இப்படி நிதிப் பிரச்சினைகள், பணிகளை நிறைவேற்றுவதற்கு போதுமான ஆதாரம் இல்லாமல் அவர்கள் தடுமாறுகிற நிலை இல்லாமல் எல்லாவிதமான உதவிகளையும் அரசு செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து மதுவிலக்கு முற்றாக அமல் நடத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்று அறியும்போது நான் மகிழ்கிறேன். அந்தக் கொள்கையில் அரசு பிடிப்பாக இருப்பது பற்றி நானும் பாராட்டுகிறேன். இதைப் பற்றி மாண்புமிகு நாவலர் அவர்கள் கோடிட்டுக் காட்டும்போது நடப்பு ஆண்டில் 60 கோடி இழப்பும், 1986-87 ஆம் ஆண்டு முழுமைக்குமாக 250 கோடி ரூபாய் இழப்பும் ஏற்படக்கூடும் என்றும் இந்த இழப்பை ஈடுகட்ட மத்திய அரசு பாதி அளவுக்காவது நிதி ஆதாரம் தந்து உதவிட வேண்டும் என்ற ஒரு கொள்கையை வலியுறுத்தியிருக்கிறோம் என்றும், அப்படி வலியுறுத்தும்போது கடந்த 1977 ஆம் ஆண்டில் இருந்த நிலையில கணக்கெடுத்து மதுவினால் வந்த வருமானத்தை கணக்கெடுத்து தான் மத்திய அரசு தர இருக்கிறது என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த குறிப்பிட்ட ஆண்டில் தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்ட காரணத்தால் எந்த கணக்கின் ஆதாரத்தை கணக்கு எடுக்க முடியும் என்ற ஐயப்பாட்டையும் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். நான் சபையினுடைய முன்னவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், கேட்பதை கொஞ்சம் தாராளமாக கேளுங்கள். பாதி அளவு கேட்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் உங்களுக்கு உண்டாயிற்று, என்று எனக்குத் தெரியவில்லை. காந்திஜி அவர்கள் கொள்கையை, நாட்டு மக்களை வாழ வைக்கக்கூடிய ஒரு நல்ல

திட்டத்தை அமல் செய்வதால் ஏற்படக்கூடிய இந்த இழப்பில் பாதி அளவை மத்திய அரசு தர வேண்டும் என்று கேட்காமல் முழு அளவையும் மத்திய அரசு தரவேண்டும் என்று வற்புறுத்தி நீங்கள் கேட்க வேண்டும். அதற்கு இந்த சபையில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் நிச்சயமாக ஒத்துழைப்பார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, இப்படி மதுவிலக்கு அமல் செய்வது பற்றி சொல்லும்போது ஆளும் கட்சியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர்கள் சில பேர்கள் கூட இந்த 50 சதவீதம் வருமா என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டு இதில் மேற்கொண்டு நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அது எனக்கு சில ஐயப்பாடுகளை உண்டாக்கியிருக்கிறது. அந்த நிலைகள் எல்லாம் இல்லாமல் நீங்கள் அறிவித்து இருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை நீங்கள் திட்டவட்டமாக கொண்டு வர வேண்டும். தெளிவான அறிவிப்பை நீங்கள் தரக்கூடிய பதிலில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படி மதுவிலக்கு அமல் நடத்துவதால் ஏற்படக்கூடிய இந்த இழப்பை மட்டும் நீங்கள் கணக்கு எடுத்து அதிலும் ரூபாய், பைசாவினுடைய அளவில் அதை கணக்கு எடுப்பதை விட, இப்போது தமிழகம் இழந்து வருவது எவ்வளவு? அரசுக்கு கிடைப்பது ரூபாய் 200 கோடி, 250 கோடியாக இருக்கலாம். ஆனால் தோராயமாக கணக்கிட்டுப் பார்க்கும்போது தமிழ் நாட்டினுடைய மதுக் கடைகளில் தமிழ் நாட்டினுடைய மக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 4,500 கோடி ரூபாய்க்கு குடித்து அவர்கள் தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொள்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. ஆகவே இப்படி மதுவிலக்கை அமல்படுத்துவதால் அரசுக்கு 250 கோடி ரூபாய் வருமான இழப்பு என்பதை மட்டும் கணக்கு எடுக்காமல் தமிழ் நாட்டினுடைய மொத்த நல வாழ்வுக்கு 4,500 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அது தடுத்து நிறுத்தப் படுகிறது என்பதை நீங்கள் கணக்கு எடுத்துப் பார்த்து



136459 ...-600 008.



எவ்வளவு இழப்பு தா நேர்ந்தாலும் கூட இந்தத் திட்டத்தை நீங்கள் தீவிரமாக அமல் நடத்தி, மொத்த தமிழகத்தினுடைய நல வாழ்வு மேன்மையுறும் என்பதை நீங்கள் கணக்கில் எடுத்து நீங்கள் பிடிவாதமாக இருக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சபையினுடைய விவாதங்களைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறபோது, இப்போது இந்தச் சபையிலே ஒரு புதுமையை நாம் எல்லோரும் கவனிக்கின்றோம். தொழிற் துறையில் தொழில் வளர்ச்சி பற்றி தமிழகம் பின்தங்கியிருக்கிறதா, இல்லையா, முன்னேறியிருக்கிறதா, என்ற சுவையான விவாதங்கள் இடையிடையே வருகிறது. அதிலே தொழில் வளர்ச்சியில், இந்த முன்னேற்றத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய தேக்கத்திற்குக் காரணம் மத்திய அரசு நம்முடைய கோரிக்கைகளை உடனுக்குடன் கவனிக்காமல் அனுமதி தராமல் இருப்பது தான் என்ற ஒரு உணர்வை அமைச்சரவர்களும், ஆளுங்கட்சியினரும் வெளியிட, அப்படியல்ல, அனுமதிக்கப்பட்ட தொழில்களைக் கூட நீங்கள் தொடங்கவில்லை, மெத்தனமாக இருந்து, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்குக் குந்தகத்தை ஏற்படுத்தியிருப்பதாக மத்தியிலே ஆளுகின்ற கட்சியினுடைய பிரதிநிதிகள் இங்கே சொல்ல, அடிக்கடி இந்த விவாதம் சபையிலே எழுந்து கொண்டிருக்க, அமைச்சரவர்கள் சில புள்ளிவிவரங்களைக் கொடுத்தார்கள். அதுவும் மத்திய அமைச்சர் தந்த புள்ளி விவரத்தின் அடிப்படையில் அவர் சொல்ல, அதேபோல் காங்கிரஸ் உறுப்பினர்கள் சில புள்ளிவிவரங்களை, மத்திய அமைச்சரின் புள்ளிவிவரத்தின் அடிப்படையில், திரும்பக் கொடுக்க, இதைப் பார்க்கும்போது, நாம் எங்கே நிற்கின்றோம் என்ற குழப்பம் எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் நாங்கள் மத்தியிலும் ஆளும் பொறுப்பில் இல்லை, மாநிலத்திலும் ஆளும் பொறுப்பில் இல்லை. ஆகவே இதை ஒரு நாளைக்கு முழுக்க முழுக்க விவாதிப்பதற்கு, ஒரு இடைக் காலத்தில், காங்கிரஸ் கட்சியினரும் சேர்ந்து, நம்முடைய அரசு தங்களிடம் இருக்கக்கூடிய புள்ளிவிவரங்களையும் சேர்த்து, ஒரு நல்ல விவாதத்தை இந்தச் சபையிலே ஏற்படுத்துவீர்களேயானால், நாம் எங்கே இருக்கிறோம்

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 மார்ச் 27

என்பதைப் புரிந்து கொண்டு, யார் சொல்வதில் உண்மை யிருக்கிறது என்பதை நாட்டு மக்களும் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையிலே வற்புறுத்தியோ, வேண்டுகோளை விடுத்தோ, அல்லது வாதாடியோ, போராடியோ அதன் மூலமாக நன்மைகளைப் பெறமுடியும். இந்த நாட்டு மக்கள் பெறுவதற்கு அது ஒரு உடன்பாடாக இருக்குமென்று நான் கருதி, அப்படிப் பட்ட ஒரு நாளை நீங்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது நடக்கக் கூடிய விவாதங்களைப் பார்த்தால், இங்கே அமர்ந்திருக்கக் கூடிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்திய சர்க்காரின் பிரதிநிதிகளாக இங்கே அமர்ந்து கொண்டு, அந்த அரசைப் பற்றிக் குற்றச் சாட்டுக்களைச் சொல்கிறபோது அவைகளுக்கு உடனடியாக பதில் அளிப்பது போன்ற ஒரு தோற்றம் இருக்கும்போது, எங்கே இரண்டு அரசினுடைய அமைச்சர்களாக இங்கே இருக்கின்றார்களோ என்ற ஐயப்பாடு கூட எங்களுக்கு ஏற்படுகிறது.

உதாரணமாக, ஹிந்துஸ்தான் ஃபோட்டோ பிலிம்ஸ் தொழிற் சாலையை உதகையில் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு, ஏறத்தாழ தமிழகத்திற்கு இல்லாமல், உத்தரப்பிரதேசத்திற்குச் சென்றுவிட்டதோ என்று எனக்கு ஒரு குறைபாடு மேலோங்கி இருக்கக்கூடிய நேரத்தில், நம்முடைய அருமை நண்பர் சித்தன் அவர்கள் அந்தத் தொழிற் சாலை வரயிருக்கிறது, அந்த அறிவிப்பை நீங்கள் பெற இருக் கிறீர்கள் என்ற முன்னறிவிப்பை செய்வதைப் பார்த்தால், மத்திய சர்க்கார் அவர்களுடைய கட்சியினருக்கு முன்னதாக அறிவித்துவிட்டு இந்த மாநில அமைச்சர்களுக்குக் கூட அறிவிக்காமல் இருக்கின்ற நிலையைப் பார்க்கின்றபோது, ஏன் இந்த முறை என்று எனக்குப் புரியவில்லை.

எங்களைப் போன்ற பாமர பொதுமக்கள், பொதுவாக இந்த நாடு வாழ வேண்டும், வளரவேண்டும், முன்னேற வேண்டுமென்று ஆசைப்படுகிற எங்களுக்கு இதிலே ஒரு குழப்பம் ஏற்பட்டிருக் கிறது. அதில் தெளிவு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறேன். தமிழகம், தொழிற்துறையில் ஏறத்தாழ 13-வது இடத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது ஆனால் அது பழைய நிலையில் நான்காவது இடத்தில் இருக்கிறது என்று நம்முடைய



1986 மார்ச் 27] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

தொழிற்துறை அமைச்சர் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (பேரவைத் துணைத் தலைவர்) பேசும் போது 5-வது இடத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இங்கிருந்து சொல்லக் கூடாது. திட்ட உதவியைப் பற்றிச் சொன்னேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** துணைத் தலைவர் அவர்களே, ஆக எங்கேயிருக்கிறது என்கிற புள்ளிவிவரம் எனக்குத் தெரிய வில்லை. பெரியார் அவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். பொய் என்பது இரண்டு வகைப்படும் என்று. ஒன்று பொய், இன்னொன்று புள்ளிவிவரம். ஒருவேளை அந்த அடிப்படையில் நாங்கள் குழப்பமடைந்திருக்கக் கூடிய காரணத்தால், என்னைப் பொறுத்தவரையில், 13-வது இடத்திலோ, 14-வது இடத்திலோ இருப்பது பற்றி கவலையில்லை. ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழகம் மூன்றாவது இடத்தில் இருந்தது. தாக்கிலே இல்லை. அகில இந்திய அளவிலே 3-வது இடத்தில் இருந்தது, 13-வது இடத்திற்கு பின்தங்கிப் போயிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அதற்குக் காரணம், 1967-க்குப் பிறகு தமிழகம் முழுவதும் தொடர்ந்து, சிந்தனையோட்டம் மட்டுப்பட்டுப் போய்விட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1967-க்குப் பிறகு மற்ற மாநிலங்களைப் பார்த்தால், தொழிற்துறையில், முனைப்பாக முயற்சிகளை எடுத்தும், நாம் மெதுவாக முன்னேறியிருக்கிறோம் என்ற காரணத்தினால், இப்படிப்பட்ட பின்னடைவு ஏற்பட்டிருக்கிறதோ என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மொத்தத்தில் தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக இன்னும் முனைப்போடு செயல்பட வேண்டும்.

(பிற்பகல் 12-10)

இன்னும் அதிகமான உரிமங்களை எப்படிப் பெற வேண்டும் என்று பார்க்க வேண்டும். அதோடு உரிமங்களைப் பெற வேண்டுமென்று ஆயிரக்கணக்கான உரிமங்களைப் பெற்று ஆரம்பிக்காமல் இருப்பதால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் கூட முற்றாக நாள் முழுவதும் வேலை செய்யக்கூடிய அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறதா என்றால் முடியாத தன்மையைத் தான் நாம் பார்க்கிறோம்.

தொழில் வளர்ச்சி முற்ற முற்ற மின்சாரத்தின் வளர்ச்சியைத் தான் பொறுத்திருக்கிறது. மின்சாரத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்கக்கூடிய நம்முடைய நிலைமையைப் பொறுத்து, உற்பத்தியைப் பார்க்கிறபோது இந்த ஆண்டு மின்சாரத்திற்காக 391 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அதை நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அந்தச் செய்தியை அறிவிக்கக் கூடிய அதே நேரத்திலே தமிழகத்தினுடைய மின்சார சப்ளைக்கு ஆதாரமாக இருக்கக் கூடிய கல்பாக்கத்தினுடைய இன்றைய நிலை என்ன? நேற்றைய தினம் கல்பாக்கத்திலே ஒரு யூனிட் மூடப்பட்டிருக்கிறது என்று செய்தி வருகிறது. கல்பாக்கத்திலே உண்மையிலே என்ன நடக்கிறது? ஆரம்பித்த காலத்திலேயிருந்து மூடப்பட்ட நாள்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறதே தவிர அது உற்பத்தி செய்து வழங்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை என்ன என்பதைத் தெளிவாக என்னால் கணக்கிட முடிய வில்லை. குறிப்பாக கோடையின் கொடுமை அதிகமாகி இருக்கிறபோது அதிகமாக மின்சாரம் கொடுக்கப்படுகிற தொழிற் சாலைகளுக்குக்கூட இன்றைக்கு குறைவாகக் கொடுக்கிற நிலையும் வீடுகளுக்கு வழங்கப்படுகிற மின்சாரத்திற்குக் கூட கட்டுப்பாடு விதிக்கப்படுகிற நிலையும் இருக்கிறபோது கல்பாக்கத்திலே ஒரு யூனிட் மூடப்படுகிறது என்பதை பார்க்கிற போது அது மிக்க வேதனையைக் கொடுக்கிறது. ஏன் இந்த நிலை? உடனே அதைச் செப்பனிடக்கூடாதா என்றால்

"........A replacement for the faulty generator transformer is not available with BHEL at present. It is expected that the Unit could be made operational by May end when the component from the Narora atomic power station is brought here. Transportation of the generator transformer weighing 180 tonnes poses some problems........".

என்று சொல்லிக் காட்டப்படுகிறது. நான் அறிந்துகொள்ள விரும்புவது எல்லாம் நம்முடைய பிரதமருடைய நேரடி நிர்வாகத்திலே பார்வையிலே இருக்கக்கூடிய மின் உற்பத்தி சாலையில் பழுதுபட்டுள்ள நிலை ஏற்படுகிறபோது ஸ்டாண்ட் பை ஜெனரேட்டர் வைக்க வேண்டும் என்று ஏன் சிந்திக்கவில்லை என்பதுதான். 150 டன் உள்ள ஜெனரேட்டரைக் கொண்டுவருவதற்கு இரண்டு மாதங்கள் ஆகும் என்று சொன்னால் எதிர்காலத்திலே இந்தியாவின் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வந்து சேருவதற்கு 2 மாத



காலம் ஆகும் என்றால் தமிழகத்திற்கு 250 மெகா வாட் மின்சாரம் கிடைக்கக்கூடிய நிலை தடைபடும் அளவுக்கு ஏன் நிலைமை ஏற்பட்டது என்பதை இந்திய அரசினுடைய பாராட்டையும் பலவிதமான பட்டங்களையும் பெற்றிருக்கக்கூடிய கல்பாக்கம் மின்னணுத் துறையிலே இருக்கக் கூடியவர்கள் யோசிக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிலை இல்லாமல் நல்ல முறையிலே அது செயல்பட அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த சபையிலே அடிக்கடி கவலையோடு விவாதிக்கப் படுகிற விஷயம் தமிழ்நாட்டிற்கு குடிநீர் வழங்குவதற்கு குறிப்பாக சென்னை நகரத்திற்கு குடிநீர் கொண்டு வருகிற திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சி பற்றியதாகும். கடந்த காலத்திலே அதற்காக 45 கோடி ரூபாய் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்காக தமிழக அரசு தந்திருக்கிறது. இந்த ஆண்டு மேற்கொண்டு 45 கோடி ரூபாய் தர இருப்பதாக நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை மேலும் கொடுப்பதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட 45 கோடியால் நாம் பெற்றிருக்கிற தன்மை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய பகுதியிலே 22 கிலோ மீட்டர் அளவுக்கு வாய்க்கால் வெட்டப் பட்டிருக்கிறது. ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் வரையிலே மத்திய அரசின் பொறுப்பிலே உள்ள வனப் பகுதியிலே வாய்க் காலை வெட்டுவதற்காக விண்ணப்பித்து மத்திய அரசின் அனுமதிக்காக நாம் காத்து இருக்கிறோம். ஆகவே இந்த நாட்டில் நம்முடைய மாநிலத்திலே நம்முடைய மண்ணிலே நம்முடைய நிலப்பரப்பிலே தமிழகத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியிலே நீர்வருவதற்கான வாய்க்காலை வெட்டுவதற்கு மத்திய அரசிற்கு விண்ணப்பித்து மத்திய அரசின் அனுமதிக்காக நாம் காத்து இருக்கிறோம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. நாம் தக்க வகையிலே என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பதற்கு அவை முன்னவர் அவர்கள் ஒரு குறிப்பை ஒரு மென்மையான ஒலியிலே அமைதியாக தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த நிலைமை மாறுவதற்காகப் போராடுகிறோம் என்று சொல்லி அவர்கள் மறைந்து 10 ஆண்டு

களுக்குப் பிறகு இன்றைக்கும் அதை வலியுறுத்திச் சொல்லக் கூடிய அளவுக்கு அந்தக் குறிப்பு அமைந்திருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். ஏதோ இப்பொழுது நாவலர் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள்; மற்ற இளைய அமைச்சர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலே இன்னும் வலிவு மிக்க ஒலியாக மத்திய அரசுக்குக் கேட்டு, இந்த நன்மைகளையெல்லாம், இந்த உரிமைகளையெல்லாம் உரிய காலத்திலே வழங்கக்கூடிய மனப்பான்மையை நண்பர் சித்தன் அவர்களைப் போன்றவர்கள் வளர்க்கக் கூடிய நல்ல சூழ்லிலே நிச்சயமாக ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

முப்பது கோடி ரூபாயைச் சென்ற ஆண்டு கொடுப்பதற்கு முன்னாலேகூட நீங்கள் கொஞ்சம் நிதானித்துக் கொடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் சொன்னபொழுது அவர்கள் எனக்கு ஒரு தத்துவத்தைச் சொன்னார்கள். அது எனக்கு நினைவில் இருக்கிறது. நம்பிக்கைதான் வாழ்க்கையினுடைய அடிப்படை என்று அவர்கள் சொன்னார்கள். அது என் காதிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், 45 கோடி ரூபாய் கொடுத்தும்கூட அந்த நம்பிக்கைக்கு அடிப்படை இல்லாமல் இருக்கிறதே, எப்பொழுது இதற்கு விடிவுகாலம்? இப்பொழுது பிரச்சனை எங்கோ போய்விட்டது. ஆந்திர அரசுக்கும் நமக்கும் ஏற்பட்ட உடன்பாடு நிறைவேற்றப்படுவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி இல்லை என்றால் அந்த அனுமதியைப்பற்றி என்ன நினைப்பது என்றே தெரியவில்லை. அதிலும், இந்த கிருஷ்ணா நதி திட்டத்தைப் பற்றி முதல் அறிவிப்பு செய்ததே மத்திய அரசிலே பிரதமராக இருந்த நம்முடைய மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவராக விளங்கிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தான். 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதியன்று மெரினா பீச்சிலே நடந்த ஒரு கூட்டத்தில் அவர் இதை மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியாக அறிவித்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பதவியிலிருக்க முடியாமற்போய், மீண்டும் 1980 ஆம் ஆண்டு பதவிக்கு வந்து 1984 ஆம் ஆண்டு வரையிலேயும் அவர்கள் இருந்த நேரத்திலேகூட,



நான்கு முதல்வர்களும் கலந்து கொண்ட நிகழ்ச்சி நடந்து, அவர்களே தொடங்கி வைத்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அந்தத் திட்டம் இன்னும் அனுமதி பெறாமல், அனுமதிக்கக் கூடாத நிகழ்ச்சியாக இருந்திருக்க முடியுமா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, மத்திய அரசு இதற்கு அனுமதி தருவதிலே வேறு காரணங்களைக் காட்டாமல், இது பூரணமாக நிறைவேறுவதற்கு உடனடியாக அனுமதி தர என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதற்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பையும் தரத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் நேற்று முன்தினம் டெல்லிக்குச் சென்று வந்தார்கள் என்று நான் அறிகின்றேன். அங்கே நடந்த, அதிலும் குறிப்பாக இந்தத் தண்ணீர் போக்குவரத்து பற்றிய பேச்சுவார்த்தையில் தொலைக் காட்சியில் அறிவித்தார்கள் எல்லா மாநில முதல்வர்களும் கலந்து கொண்டார்கள் என்று. அப்படிப்பட்ட மாநாட்டில் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு இருந்தால் நன்றாக இருந்திருக்கும். என்றாலும்கூட. . . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சரியான விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன். அனைத்து முதல்வர்களும் பங்கேற்றார்கள் என்பது சரியான கருத்து அல்ல. அப்படியே தப்பித் தவறி செய்தி வந்திருந்தாலும் கூட அது சரியான செய்தி அல்ல. மூன்று முதல்வர்கள் பங்கேற்றார்கள்; மற்றபடி அந்தந்தப் பாசனத் துறை அமைச்சர்கள்தான் பங்கேற்றார்கள்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** துணைத் தலைவர் அவர்களே, தவறு தூர்தர்ஷனிலே இருக்கிறது. நான் நேரிலே பார்த்து கேட்ட காரணத்தால் சொன்னேன். அப்படிச் சொன்ன பொழுது தங்களையும் அதிலே பார்த்தேன். ஆகவே, நீங்கள் கலந்து கொள்வதற்கு உரிமை இருக்கிறது. நான் சொல்ல வந்தது, டெல்லிக்குச் செல்லுகின்ற நேரத்தைப் பயன்படுத்தி, இந்த

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 மார்ச் 27

ஆண்டு ஹஜ்ஜுக்குச் செல்லக்கூடிய தமிழகத்திலுடைய ஹாஜிகள் சென்னையிலிருந்து விமானம் வழியாக நேராக அரபு நாட்டுக்குச் செல்வதற்கு மூன்றாண்டுகளாக வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே காத்திருந்தார்கள். அந்த மக்களுக்கு கடந்த ஆண்டு அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. இந்த ஆண்டாவது அந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படி எடுத்துக் கொண்டிருந்தால், அதனுடைய விளைவுகளை இப்படிப்பட்ட சபைக்குத் தெரிவிப்பது பொருத்தம் என்று கூறிக்கொள்கிறேன். மற்ற கருத்துக்களை வழங்குவதற்குப் பின்னால் வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்களுக்கு வேண்டுகோள். அடிக்கடி இப்படி குறுக்கிட வேண்டாம். 10 உறுப்பினர்கள் பேச வேண்டும். தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். உறுப்பினர்கள் நேரம் குறைகிறது என்று கேட்கிறார்கள். உறுப்பினர்கள் மத்தியிலே, We are becoming unpopular தயவுசெய்து குறுக்கிடாதீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** * *

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * எல்லாவற்றையும் நீக்கிவிடலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முடியாமற்போய், மீண்டும் 1980 ஆம் ஆண்டு பதவிக்கு வந்து 1984 ஆம் ஆண்டு வரையிலேயும் அவர்கள் இருந்த நேரத்திலேகூட,



1986 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பக்கத்தில் சொன்னதையும் நீக்க ஆணையிடுகிறேன். ஆகவே, அதோடு விட்டுவிடலாம் (குறுக்கீடு).

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** ஒரு விளக்கம் மட்டும் கூற விரும்புகிறேன். * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சனைபற்றி ஏற்கெனவே குறிப்பிட்டவை எல்லாம் நீக்கப்பட்டிருப்பதால் இதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

***திரு. ஜெ. ராஜாபாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை பற்றிய என்னுடைய கருத்தை இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழக அரசின் நிதிநிலை ஏழை எளிய மக்களை மிகவும் பாதிக்கின்ற விதத்தில் உள்ளது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அளிக்கின்ற திட்டத்தைப் பற்றி அறிக்கையில் ஏதும் சொல்லப்படவில்லை. படித்த பட்டதாரி தெருத்தெருவாக அலைகின்ற நிலையை மாற்றி அமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யவில்லை. இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற அதே நேரத்தில் தமிழக அரசின் நிதி நிலையில் அடிப்படைத் தேவையான குடிநீர், மின்சாரம், சாலைப் பிரச்சனைகளை கூட தீர்த்துக்கொள்ளக் கூடிய நிதிநிலை அறிக்கையாக அமையவில்லை. ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு பதில் சாராயக் கடைகள் மூடப் போகிறோம் என்ற விளம்பரம்தான் இந்த நிதிநிலையில் பெரிது படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஏழைகளை வேண்டிய அளவிற்கு சாராயத்தை இப்பவே குடிக்கச் சொல்வதாக நான் கருதுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசு செம்மையான முறையில் நிர்வாகம் செய்ய முடியாத நிலையில் எதற்கெடுத்தாலும் தனியார் துறைக்கும், பணம் படைத்தவர்களுக்கும் கல்வி நிறுவனங்களை விற்பனை நிலையங்களாக இந்த அரசு மாற்றி, தனியார் வியாபாரத்தை பெருக்குகின்ற விதத்தில் அரசின் கொள்கை அமைந்திருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை விளக்குகிறது.

உதாரணமாக வேண்டுமானால் ஸ்ரீ இராமச்சந்திரா மெடிக்கல்ஸ் நிறுவனத்தின் அதிபர் ஒரு மருத்துவ சீட்டிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிதி கொடுத்தால் ஒரு மருத்துவ படிப்பு சீட்டு என்று பத்திரிகை வாயிலாக விளம்பரப்படுத்தியுள்ளதை இம்மாமன்றத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலிருந்து தமிழக அரசின் நிதிநிலை ஜனநாயக ரீதியில் அமையவில்லை என்பது நிருபணம் செய்கின்றது.

ஏழ்மையை அகற்றுவேன் என்று பிரகடனப்படுத்துகின்ற தமிழக அரசின் நிதிநிலை 30 இலட்சம் வீடுகள் கட்டித்தருவேன் என்று விளம்பரப்படுத்தி விட்டு மூவாயிரம் வீடுகள் கூட கட்ட முடியாத நிதியை ஒதுக்கியிருக்கிறது என்பதை பார்க்கின்ற பொழுது இந்த நிதிநிலை மேலும் ஏழ்மையை பாதிக்கின்ற நிதிநிலையாக உள்ளது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநாயக நாட்டில் வாக்களித்த மக்கள் தனக்கிருக்கின்ற உரிமைகளைப் பெறுவதற்கு பிரதிநிதிகளை இம்மாமன்றத்திற்கு அனுப்பினால் இம்மாமன்ற உறுப்பினர்களின் உணர்வுகளை தமிழக அரசின் நிதி நிலை உதாசீனப்படுத்திவிட்டது. விவசாய முன்னேற்றம், கல்வி, சாலை, கிராம மேம்பாட்டு வளர்ச்சி, மருத்துவமனை பற்றியோ இந்த நிதிநிலையில் தெளிவாக சொல்லவில்லை. இந்தியப் பேரரசால் வழங்கப்படுகின்ற உதவியை எந்தந்த விதத்தில் இந்த நிதிநிலை பயன்படுத்துகின்றது என்பதை குறிப்பிடவில்லை.

வடார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதை நான் வரவேற்கிறேன். புதிய மாவட்டத்திற்கு "சம்புவராயர் மாவட்டம்" என பெயர் சூட்டுவதாக நிதியமைச்சர்





அறிவித்திருக்கிறார். சம்புவராயர் என்ற அரசர் ஆரணி தாலுகாவில்தான் ஆட்சி செய்திருக்கின்றார். எனவே, புதியதாக அமைய உள்ள மாவட்டத்திற்கு ஆரணியைத் தலைநகரமாக அறிவிக்க வேண்டுகிறேன். அண்மையில் பாரதப் பிரதமர் வருகை தந்த "ஜமுனாபுத்தூரை" சுற்றுலா மையமாக அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அமிர்தி காட்டிலுள்ள வனவிலங்கு இல்லத்தை அபிவிருத்தி செய்யுமாறு கோருகிறேன். போளூரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை ஏற்படுத்துமாறும் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இப்பகுதியில் பஸ் போக்குவரத்து சரியான முறையில் இல்லாத காரணத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அந்தப் பகுதியில் போளூர் டு போளூர் வழி மாம்பட்டு, எடப்பிறை வழியாக ஒரு நகரப் பேருந்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். துஞ்சிக்குப்பம் முதல் ஆரணி வரை, கல்வாசல், இலுப்பகுணம், களம்பூர் வழியாக ஆரணிக்கு பேருந்து விட கோருகிறேன்.

ராமநாதபுரம் டு ஆரணி நகரப் பேருந்தை சந்தவாசல், நடுக்குப்பம் வழியாக விடவேண்டும். சேதாரம்பட்டு டு ஆரணி பேருந்தை மேல்நகர், குன்னத்தூர் வழியாக இயக்கும்படிக் கோருகிறேன்.

சரித்திரப் புகழ்பெற்ற எ. கே. படவேடு ரேணுகாம்பாள் கோவிலில் வெளியூர் பக்தர்கள் தங்க வசதியாக சுற்றுலா குடியிருப்புகளைக் கட்டித்தருமாறு கோருகிறேன்.

எனது தொகுதியில் அனைத்து பகுதிகளிலுமுள்ள சாலை வசதிகள் சரியாக இல்லை. அங்கே மாட்டுவண்டிகள் கூட செல்ல முடியாத நிலைமையில் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். குறிப்பாக மாதிமங்கலம் டு ஆத்துவாம்பாடி, கண்ணமங்கலம் டு எ. கே. படவேடு, எ.கே. படவேடு டு ஆரணி, போளூர் டு ஆரணி, கல்பட்டு டு இரும்புலி ஆகிய பகுதிகளில் சாலைவசதி சரியாக இல்லை. அவற்றை நல்ல முறையில் அமைத்துத் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜெ. ராஜாபாபு] [1986 மார்ச் 27

போளூர் பகுதியில் நல்ல குடிதண்ணீர் கிடைக்காத காரணத்தால் சென்ற ஆண்டு காலரா நோய் பரவியது. அதனால் நான்கு பேர் இறந்துவிட்டார்கள். எனவே அந்தப் பகுதியிலே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் நீர்த்தேக்கத் தொட்டி கட்டி வசதி செய்து கொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கைப்பம்புகள் அமைத்துத் தரும்படியும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் பெண்ணாத்தூர், சந்தவாசல் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற தலா ரூ. 25,000 கட்டி ஒரு வருடம் ஆகிறது. ஆனால் இந்த பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு இன்னும் அரசிடமிருந்து உத்தரவு வரவில்லை. எனது தொகுதி பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. எனவே அங்கேயுள்ள மாணவர் களுக்கு உதவுகின்ற வகையில் அதனை மேல்நிலைப்பள்ளியாக மாற்றித் தரும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டிலேயே அவ்வாறு மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்குச் சரியான கட்டட வசதி இல்லாமல் மாணவர்கள் மரத்தடியில் கல்வி பயில்கின்றனர். எனவே இதன்மீது நடவடிக்கை எடுத்து மாணவர்களைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மாணவர்களைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக உள்ளது. குறிப்பாக சந்தவாசல், ஏ. கே. படவேடு, சோழவரம், கணியம்பாடி, கம்மவான்பேட்டை, கேளூர், அரசம்பட்டு ஆகிய கிராமங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சரியான கட்டட வசதி செய்து தரும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையின்போது செண்பகத் தோப்பு அணை ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டில் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை நிறைவேற்றினால் 5,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். அந்த வகையில் விவசாயிகள் பயன் அடைவார்கள். அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற நிலைமை இருப்பதன் காரணத்தால் மின்



1986 மார்ச் 27] [திரு. ஜெ. ராஜாபாபு]

இணைப்புகள் கொடுக்கப்படுவதற்கு அங்கே இருக்கிற தடைகளை நீக்க வேண்டும். அதாவது பாலார் சர்ட்டிபிகேட் சான்று பெற்றுத்தான் மின் இணைப்புகள் கொடுக்க வேண்டும் என்ற வகையில் தடை ஏற்பட்டிருக்கிறது. அதனை நீக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. மிகவும் பின்தங்கி இருக்கின்ற காரணத்தால் போளூர் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையையும், கணியம்பாடிப் பகுதியில் ஒரு காகித ஆலையையும் ஏற்படுத்தித் தரும்படி நான் கோருகிறேன்.

அடுத்து விற்பனை வரி பதிவுக் கட்டணம் என்பதைப் பொறுத்த வரையில் ஆண்டு ஒன்றுக்கு 10 ரூபாய் என்று இருந்தது 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் கிடங்கு களுக்கான கட்டணத்தைப் பொறுத்தவரையில் ஆண்டு ஒன்றுக்கு 5 ரூபாய் என்று இருந்த வீதத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணத்தால் பதிவு செய்துள்ள சில்லறை வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அதைக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏ. கே. படவேடு பகுதியில் 40 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கே நிறைய மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். மருத்துவ வசதிக்காக அவர்கள் 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆரணி, போளூர் போன்ற இடங்களுக்குத் தான் செல்ல வேண்டி இருக்கிறது. எனவே அவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கின்ற வகையில் மருத்துவ மனை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தஞ்சைக்கு அடுத்து அதிகமான நெல் உற்பத்தி செய்கின்ற மாவட்டம் வடாற்காடு மாவட்டம். எனவே தஞ்சை மாவட்டத்திற்கு அளிக்கப் படுகின்ற ஒரு குவிண்டாலுக்கு 35 ரூபாய் என்ற போனசை அதாவது ஊக்கத் தொகையை வடாற்காடு மாவட்டத்திற்கும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கே நெல் உற்பத்தி அதிகமாக ஆகின்ற காரணத்தால் அங்கே ஒரு நவீன அரிசி ஆலை

[திரு. ஜெ. ராஜாபாபு] [1986 மார்ச் 27

அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கை குறித்து சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கின்ற வரிகளை உயர்த்தாமலும், அத்தியாவசிய பொருள்களின் மீது புதிய வரிகளை புகுத்தாமலும், வறுமைத் தேளால் கொட்டப்பட்டிருக்கிற மக்களுடைய துன்பங்களைப் போக்குகின்ற அளவிலே அவர்களுக்கு இலவச வீடுகளைக் கட்டித் தருகின்ற திட்டத்தையும், உயிர் காக்கின்ற மருந்து பொருள்களுக்கு வரி குறைப்பு போன்று பல்வேறு சலுகைகளைச் செய்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் நல்ல இதயங்கள் படைத்தவர்களெல்லாமும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் சொன்னார்கள். இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையை குறித்து அவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்திலே 'இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை இன்னும் தீர்க்கப் படவில்லை, புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே இன்னும் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படவில்லை' என்பது போல, இலங்கைத் தமிழர்களின் அவல நிலையைப் போக்க இந்த அரசு உதவி செய்ய வில்லை என்ற நோக்கத்தோடு அவர்கள் பேசினார்கள். அவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். செய்யாறு இடைத்தேர்தல் நடை பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையிலே, போராட்டத்திலே இறந்துவிட்ட ஆசிரியர் கருப்பண்ணனுக்கு உதவியைச் செய்வதற்காக நிதி வசூலைத் திரட்டினார் முன்னாள் முதல்வர் அவர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போராட்டத்திலே இறந்தார் என்று நீங்களே தகவலை மாற்றிச் சொல்லுகிறீர்கள். அவர் மாரடைப்பினால் இறந்திருக்கிறார்கள. அதை மாற்றிக் கொள்ளுங்கள்.



1986 மார்ச் 27]

திரு. க. சோலைராசு: சரி மாற்றிக் கொள்கிறேன். மாரடைப்பினால் இறந்த ஆசிரியர் கருப்பண்ணனுக்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி, ஒரு நிதியை வசூலித்துக் கொடுத்த முன்னாள் முதல்வர் அவர்கள், இன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்களே தவிர, ஏதாவது உதவி செய்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே, மற்ற அனைத்து இயக்கங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம், இலங்கைத் தமிழர்களுக்காக உதவ வேண்டும் என்ற நல்ல உள்ளத்தோடு அதற்கான நிதி ஆதாரங்களை திரட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே, அரசியல் லாபத்திற்காக பல்வேறு இனங்களுக்கெல்லாம் நிதியை வசூலித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிற முன்னாள் முதல்வர் அவர்கள், இலங்கைத் தமிழர்களுக்காக எந்தவிதமான நல்ல நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதை இங்கே நான் குற்றச்சாட்டாகக் கூற விரும்புகிறேன். அதேபோன்று அங்கே ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த பாலகுமாரன் என்பவர் சொல்கிறார், ராணுவம் எங்களுக்குத் தேவையில்லை, காரணம் இலங்கையிலே வாழ்கிற சில சிங்களவர்களே எங்களுக்கு உதவி புரிகிறார்கள். அவர்களுடைய உதவியை நாங்கள் இழக்க நேரிடும். ஆகவே தமிழகத்தைப் பொறுத்த வரையில், தார்மீக உதவியைத் தந்தாலும், பொருள் உதவியைத் தந்தாலும் போதுமானதாக இருக்கும் என்கிற கருத்தை அங்கேயுள்ள விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களே சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையிலே, இலங்கையிலே வாழ்கின்றவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று அவர்கள் கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று மற்றொரு கருத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக மக்கள் அரிசி கூட கிடைக்காமல் வறுமையால் வாடிய நேரத்திலே மத்திய தொகுப்பிலே இருந்து அரிசி தரவேண்டும் என்று சொல்லி புரட்சித் தலைவர் அவர்கள், மத்தியப் பேரரசை கேட்டுக் கொள்கிற வகையிலே, கண்டிக்கிற

[திரு. க. சோலைராசு] [1986 மார்ச் 27

வகையிலே, இருந்த உண்ணாவிரதத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் சொன்னார் ஓரங்க நாடகம் என்று. நான் அவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசை கண்டித்து, தமிழக மக்களுடைய உணவிற்கு அரிசி வேண்டும் என்று, அவர்களுடைய உணர்விற்கு மதிப்பளித்து, உண்ணாவிரதம் இருந்த அந்தச் சம்பவம் ஓரங்க நாடகம் என்று சொன்னால், இலங்கைத் தமிழர்கள் பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று சொல்லி, அது தீர்க்கப்படாத வரையில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்க மாட்டேன் என்று சொல்லி சட்டமன்ற பதவியை ராஜினாமா செய்து விட்டு, மூன்று மாதத்திற்குள்ளாகவே, மேலவையிலே எம்.எல்.சியாகப் போய் அமர்ந்துக் கொண்ட, முன்னாள் முதல்வர் அவர்களுடைய நாடகத்தை என்ன நாடகம் என்று சொல்வது எனத் தெரியவில்லை. துக்ளக் என்று சொல்லப்படுகிற நாடகத்தை விட கேலிக்கூத்தாக இருக்கிறது. மூன்று மாதத்திற்கு முன்பாக எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்கிறார்கள்; பிறகு மேலவைக்கு செல்கிறார்கள். அது என்ன நாடகம் என்று சொல்ல வேண்டுமென அவர்களைக் கேட்கலாம் என்றாலும் கூட, அவையிலே இருந்து அவர்கள் வெளியே சென்றிருக்கிற காரணத்தாலே, இந்தக் கேள்வியை அவர்களிடத்திலே கேட்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை; ஆனாலும் கூட அவர்கள் இன்னும் சற்று பொறுப்பான முறையிலே மக்களுக்கு பணியாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு மற்றொரு பழைய சம்பவம் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலவையிலே பேசிய நேரத்தில் மேலவை உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே, அரசு ஊழியர்கள் இறந்து விடுகிற சூழ்நிலையிலே, அவர்கள் வீடு கட்டுவதற்காக பெற்றிருக்கிற கடனை வட்டியோடு தள்ளுபடி செய்கிறோம் என்ற திட்டம் நல்லதொரு திட்டம் அல்ல என்றும், அந்த திட்டத்தினால் எத்தனை பேருக்கு பயன் விளையப் போகிறது என்றும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த கருத்திற்காக நான் ஒரு பழைய சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1986 மார்ச் 27] [திரு. க. சோலைராசு]

(பிற்பகல் 12.40)

மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராகவும் பின்னர் தமிழகத்தினுடைய கூட்டுறவுத் துறை பதிவாளராகவும் பணியாற்றிய மரியாதைக்குரிய வி. கே. சி. நடராஜன் என்பவர் இருந்தார். அவர் திடீரென்று ஒரு நாள் எதிர்பாராத விதத்தில் மரணம் அடைந்து விட்டார். அப்படி மரணம் அடைந்துவிட்ட வி. கே. சி. நடராஜன் என்கிற அந்த அதிகாரி அன்றைய கருணாநிதி கட்சியினுடைய ஆட்சிக்கு மிகவும் நெருங்கியவராக இருந்தார் என்ற காரணத்திற்காக, அத்தோடு தலைமைச் செயலகத்தில் மிகவும் பழக்கத்தில் உள்ளவராக இருந்தார் என்ற காரணத்திற்காக, அவர் அரசிடம் வீடு கட்டுவதற்காகக் கடனாகப் பெற்றிருந்த 1 லட்சம் ரூபாயை, அன்றைக்கிருந்த முதலமைச்சர் ஆட்சி தள்ளுபடி செய்தது. ஆகவே அந்தப் பகுதியில் முகவை மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களில் எல்லாம் முக்குலத்தோர் மனதைக் கவர வேண்டும் என்பதற்காக பேசினார்கள். கூட்டுறவுத் துறை பதிவாளர் இறந்துவிட்டபோது இறந்தவரின் குடும்பம் நிர்க்கதியாக நிற்கக் கூடாது என்பதற்காக அவர் பெற்றிருந்த கடனை இன்றைக்கு தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்றைக்கிருந்த ஆட்சிக் கட்டிலுக்கு நெருக்கமானவர்கள் பெற்ற அந்தக் கடன் தள்ளுபடியை இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றக்கூடிய பணியாளரிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றும் கடைநிலை ஊழியர் வரையில் பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அரசாங்கத்தில் கடனுதவி பெற்றவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தூய உள்ளத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தால் எத்தனை பேர்களுக்கு நன்மை வந்து விடுமென்று கேட்டவர்களுக்கு பதிலாகச் சொல்ல விரும்புகிறேன். என்.ஜி.ஓ. சங்கத்தின் தலைவர் சிவ இளங்கோ அவர்கள் ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். 8½ லட்சம் ஊழியர்கள் பணியாற்றுகிற தமிழக அரசில் ஏறக்குறைய வருடத்திற்கு 6,500 பேர்களுக்கு மேல் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே 6,500 பேர்களில் அரசுக் கடனை

பெரும்பகுதியினர் பெற்றிருப்பார்கள். 1977 ஆம் ஆண்டிற்கு முன்னாலே 4 கோடி ரூபாய் கடனாகப் பெற்ற அரசு ஊழியர்கள் இன்றைக்கு 15 கோடி ரூபாய் வீடு கட்ட கடனுதவி பெறுகிறார்கள். ஆகவே அப்படி கடனாகப் பெறுகிறவர்கள் இறக்கிற நேரத்தில் அவர்களுக்கு சலுகை வழங்க வேண்டுமென்றுச் சொன்னால் அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியாக போய் விடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மாண்புமிகு சித்தன் போன்றவர்கள் சொன்னார்கள். தமிழகத்தின் வரவு செலவு அறிக்கையில் ஒதுக்கப்படும் பணம் ஆண்டுதோறும் முழுவதுமாக செலவழிக்கப்படுவதில்லை. அவர்கள் மீதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுறுசுறுப்பின்றி பணியாற்றுகிறார்கள் என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். பிரிட்டிஷ் பாராளுமன்ற அமைப்பு முறையிலே பட்ஜெட்டில் மீதம் வைக்கிற ஒரு முறை இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் பினான்ஷியல் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையில் ஒரு தொகுப்புரை எழுதுகிறபோது சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக அவர்கள் எடுத்துக் கொண்ட 1979-80 ஆம் ஆண்டு பட்ஜெட்டைப் பற்றி சொல்கிறபோது கேரள மாநிலத்தில் 923 கோடி ரூபாயில் செலவழிக்கப்பட்ட தொகை 743 கோடி ரூபாய். ஆக 150 கோடி ரூபாய் மிச்சப்பட்டிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 1,866 கோடி ரூபாயில் செலவழிக்கப்பட்ட தொகை 1,467 கோடி; மீதமிருப்பது 399 கோடி ரூபாய் மிச்சப் பட்டிருக்கிறது. அதைப்போல தமிழ் நாட்டில் 1,482 கோடி ரூபாயில் 1,336 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 147 கோடி ரூபாய் மீதப்பட்டிருக்கிறது. சதவீதக் கணக்கிலே எடுத்துக் கொண்டால் கேரளா 19.5 சதவீதம், மத்திய பிரதேசம் 21 சதவீதம், தமிழ் நாடு 10 சதவீதம். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு மத்திய அரசு தீட்டுகிற வரவு—செலவில் கூட ஆண்டு இறுதியில் பணம் மீதியாக வந்து





கொண்டிருக்கிறது. அப்படி சில மாநிலங்களில் வருகிறபோது அவர்கள் அந்த வருட இறுதியில் ஒரு மாதத்திற்குள் மீதி யிருக்கிற பணத்தை அவசரம் அவசரமாகத் திட்டங்களைத் போட்டு செலவழிக்கிறார்கள். இப்படிச் செய்வதால் அந்தப் பணம் முறையாக செலவழிக்கப்படுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றனவென்று பினான்ஷியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை பாராட்டியிருக்கிறது என்பதை பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு சுப்பராயன் ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்தினுடைய ஆட்சி ஞானமில்லாத ஆட்சியாக இருக்கிறது. சமுதாயத்தில் உள்ள மக்களுடைய உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாத ஆட்சியாக இருக்கிறதென்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன ஞானம் என்பதற்கு அவர்கள் என்ன பொருளைத் தெரிவிக்கிறார். அவர்கள் சொல்கிற ஞானம் என்பதற்கு என்ன கோட்பாட்டைத் தெரிவிக்கிறார் என்பது புரியாத புதிராக இருக்கிறது. புரட்சித் தலைவரின் புனித ஆட்சி தமிழ் மண்ணில் தோன்றிய பிறகு தான் பல உன்னதத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இதுபற்றி அனைவரும் சொல்கிறார்கள். இளம் குழந்தைகளைப் பார்த்து எதிர்கால இந்தியாவை உருவாக்கும் இளம் சிங்கங்கள்; இன்றைய மாணவர்கள் நாளைய ராஜாக்கள் என்று சொல்கிறார்கள். இதுபோன்று எந்த மாநிலத்திலாவது இன்றைய மாணவர்கள் நல்ல முறையில் வளர வேண்டுமென்பதற்காக திட்டங்களைத் தீட்டி யிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சி தான் நாளைய ராஜாக்களாக இருக்கிற குழந்தைகள் நலமோடு வளர வேண்டுமென்பதற்காக 85 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சத்துணவைச் சாப்பிட்டு அந்தக் குழந்தைகள் நலத்தோடு வாழ்ந்தால் மட்டும் போதாது அறிவுமிக்க குழந்தைகளாக வளர வேண்டும் என்பதற்காக இலவச பாடப் புத்தகங்களைத் தந்து கொண்டிருக்கிறது. ஒரு நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பத்திலே கூட, 2 குழந்தைகள், 3 குழந்தைகளுக்கு ஒரே நேரத்திலே பாடப்

[திரு. க. சோலைராசு] [1986 மார்ச் 27

புத்தகத்தை வாங்க முடியாத ஒரு அவல நிலைமை ஏற்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்து, புரட்சித் தலைவர் அவர்கள், இலவச சத்துணவு சாப்பிடுகிற அனைத்துக் குழந்தைகளுக்கும், இலவசப் பாட புத்தகம் தருகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆற்றல் மிக்க குழந்தைகளாக, அறிவு மிக்க குழந்தைகளாக மட்டும் வளர்ந்தால் போதாது, அந்தப் பிஞ்சு உள்ளங்களிலே எல்லாம் ஏற்றத்தாழ்வு வந்துவிடக் கூடாது என்ற காரணத்தாலே புரட்சித் தலைவர் அவர்கள் சீருடையைக் கொடுத்து இருக்கிறார்கள். இந்தச் சமுதாயப் பிரச்சனையை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், ஞானத்தோடு செய்கிற செயல் இல்லை என்று சொன்னால், நாங்கள் என்ன சொல்வது ?

அதேபோன்று பத்து மாதம் சுமந்து, பாலூட்டி, சீராட்டி, முத்துமணிகளை பூட்டார்விட்டாலும், முழுநிலவே, சந்திரனே என்று கொண்டாடுகின்ற அந்தத் தாய்மார்கள், அந்தத் தந்தைமார்கள், கடைசி காலத்திலே அனாதைகளாக கைவிடப் படுகிற சூழ்நிலையில், பெற்றால்தான் பிள்ளையா, என்று சொல்லி, அதற்கு நான் இருக்கிறேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்கு ஆண்டுக்கு 2 முறை வேஷ்டி, சேலையையும், மாதத்திற்கு ஒரு முறை ஓய்வு ஊதியத்தையும் கொடுத்து கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆட்சியைப் பார்த்து ஞானம் அற்ற ஆட்சி என்று அவர்கள் சொல்கிறார்களே, அந்தக் கட்டுக்கோப்பான அந்த ஞானம் எங்களுக்குத் தேவையில்லை. புரட்சித் தலைவருடைய ஆட்சி இந்த ஏழை எளியவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, ஏழைகளின் வேதனையைத் தீர்ப்பதற்காக நடைபெறுகிற ஆட்சி என்ற எண்ணத்தோடு தான் அவர்களுக்கு பல நன்மைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வோடு கூட்டு வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, ஒரே ஒரு பைசா மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொன்னதற்காக, தி.மு.க. ஆட்சி, வேடசந்தூரிலும், பெருந்தநாயக்கன்பாளையத்திலேயும், ஆத்தூரிலேயும் காக்கைக் குருவிகளைச் சுடுவதைப் போன்று



1986 மார்ச் 27] [திரு. க. சோலைராசு]

சுட்டுக் கொன்றார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சி யாருமே கேட்காமல் எந்த இயக்கமும் கேட்காமல், சமுதாய ஞானத்தோடு சமுதாய உணர்வோடு அந்த விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று சொல்லி, இன்றைக்கு மின்சாரத்தை இலவசமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய மருங்காபுரி தொகுதியினுடைய கிழக்குப் பகுதியிலே புதுக்கோட்டை மாவட்டம் இருக்கிறது. அது அரசினுடைய சிறப்பான சலுகைகளை எல்லாம் பெற்றுக் கொண்டு இருக்கிறது. அதேபோல் தெற்குப் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே ராமநாதபுரம் மாவட்டம் இருக்கிறது. அது ஏற்கனவே பிற்பட்ட மாவட்டம் என்று அரசினுடைய பல்வேறு சலுகைகளை பெற்றுக் கொண்டு இருக்கிறது. அதேபோல் மேற்குப் பகுதியை எடுத்துக் கொண்டால், பேரவைத் துணைத் தலைவர் தொகுதியாக இருக்கிற வேடசந்தூர் தொகுதி அடங்கி யிருக்கிற அண்ணா மாவட்டம் இருக்கிறது. அங்கே கூட நாவலர் அவர்கள் 2 தினங்களுக்கு முன்னால் வறட்சி நிலவுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று பகுதிகளும் பின்னிப் பிணைந்து இருக்கிற என்னுடைய தொகுதி; திருச்சி மாவட்டத்திலே இருக்கிற ஒரே ஒரு பாவத்திற்காக என்னுடைய தொகுதிக்கு பல்வேறு சலுகைகள் கிடைக்க முடியாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேடசந்தூர் தொகுதியைச் சார்ந்து இருக்கிற சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஓட்டுக் கேட்க வருகிற நேரத்திலே என்னுடைய தொகுதிக்குள்ளே நுழைந்து வருகிறார். அதேபோல் அவருடைய தொகுதியிலே நுழைந்து சென்று ஓட்டுக் கேட்கிற நிலைமை எனக்கு இருக்கிறது. எனவே இப்படி பின்னிப் பிணைந்து இருக்கிற இந்த 3 பகுதிகளுக்கு—திருச்சி மாவட்டத்திலே இருக்கிற காரணத்தினால்,—என்னுடைய தொகுதிக்கு சலுகைகள் இல்லை. அங்கே கூட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வறட்சி நிலவுகிறது என்கிற எங்களுடைய கோரிக்கையை ஏற்று, பொன்னியாறு, வையம்பட்டி

[திரு. க. சோலைராசு] [1986 மார்ச் 27

பகுதிக்கு பாசன வரியை ரத்து செய்திருக்கிறார்கள். அதேபோல் நிலவுகிற வறட்சி குறித்து நாங்கள் பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஏக்கர் உழுகிறார்கள் என்றால், அதிலே 3 களைப்புகள் வருகின்றன. குடிப்பதற்கு தண்ணீர் வேண்டும் என்று சொன்னால், 100 அடி தோண்டினால் கூட தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஒரு வேலை பார்க்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரு தொழிற்சாலை கூட அங்கே கிடையாது. எனவே அப்படிப் பட்ட பிற்பட்ட பகுதியாக இருக்கிற, வானம் பார்த்த பூமியாக இருக்கிற என்னுடைய மருங்காபுரி தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய திருச்சியிலே ஆப்பரேசன் தியேட்டர் தொடர்ந்து மூடப்பட்டு இருக்கிற காரணத்தாலே ஒரு பொறுப்பான ஒரு சிறந்த ஒரு மாவட்டத்ினுடைய துணை ஆட்சித் தலைவரை இழந்துவிடக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அங்கே இருக்கிற மருத்துவமனையிலே அந்த ஆப்பரேசன் தியேட்டர் தொடர்ந்து மூடப்பட்டுக் கொண்டு இருக்கிற நிலைமையை விரைவில் மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.... (மணி யடிக்கப் பெற்றது).

*திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி, தமிழகம் நன்றி உணர்வு மிக்கது என்றாலும், அந்த உணர்வு இந்த நிதி நிலை அறிக்கையிலே இல்லை என்பதற்காக நான் வருந்தப்படுகிறேன். ஏன் என்றால், பத்தி இரண்டிலேயும் பத்தி மூன்றிலேயும், மத்திய அரசு ஏராளமாக பண வசதி தந்திருப்பதாக கூறி இருந்தும் கூட, அதற்கான நன்றியைக் கூட வழங்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, வணிக வரி பற்றி சொல்ல விரும்புகிறேன். ஒரு வணிக வியாபாரம் செய்பவர், பதிவு செய்ய வேண்டுமானால், கடந்த ஆண்டுகளிலே 10 ரூபாய் என்று இருந்ததை, ஒரேயடியாக 100 ரூபாயாக ஆக்கியிருப்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்



1986 மார்ச் 27] [திரு. எஸ். வேணுகோபால்]

இதிலே இந்தத் தொகையை ஒரேயடியாக உயர்த்துவதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. எனவே இதிலே அரசு கவனம் செலுத்தி, அதைக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்து, இதற்கு முன்னாலேயே மொத்தமாக வியாபாரிகள் நேரடியாக சில்லரை வியாபாரிகளிடம் விற்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது, 29—2—1936 கெசட்டிலே போடப்பட்டு இருக்கிறது. மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பார்களானால் அங்கே பண முடக்கம் ஏற்படுகிறது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மொத்த வியாபாரிகளுக்கு விற்றால்தான் அதிலே பண முடக்கம் ஏற்படாமல் இருக்கும் என்பதால் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கூறி அடுத்து ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலே 666 கோடியிலிருந்து 1,438 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு சொல்லும்போது, மத்திய அரசு மொத்தமாக குற்றம் சாட்டி இந்த அவையிலே அடிக்கடி விவாதங்கள் தொடர்ந்தாற்போல் நடந்து கொண்டு வருகிறது. 666 கோடி 1,438 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தமிழக வளர்ச்சியிலே தமிழக தொழில் துறையானாலும் சரி, தமிழகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும், வருங்கால இளைஞர்கள், வருங்கால சமுதாயம், தமிழகம் நன்றாக இருக்க வேண்டும் என்ற காரணத்தாலே இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, காங்கிரஸ் கட்சி எந்த விதத்திலும் குறைந்தது இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை 1,25,000 பேர் அகதிகளாக வந்து இருக்கிறார்கள் என்று சொல்லி 45 கோடி ரூபாய் இதற்காக செலவிடப்பட்டிருக்கிறதென்று சொன்னார்களே தவிர, 45 கோடி ரூபாயை மத்திய அரசுதான் கொடுத்தது என்பதை இவர்கள் சொல்ல மறுத்திருக்கிறார்கள். அதனை வேதனைக்குரிய செய்தியாக உங்கள் முன்னாலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 மார்ச் 27

அடுத்து, நிதி நிலை அறிக்கையை வரவேற்பதற்கு முன்னாலே நம்முடைய மீனளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே, அந்தச் செய்தியை அப்படியே நான் படிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சமூக விரோத சக்திகள், கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற செயல்முறைகள் நடப்பதால் மெரினா கடற்கரையை முதலமைச்சர் அவர்கள் ஒழுங்குபடுத்த முயன்றார் என்றும் இதனால் கட்டுமரச் சொந்தக்காரர்களும், அரசியல்வாதிகளும் பிரச்சினையை திசை திருப்பி விட்டார்கள் என்றும், இதன் காரணமாக அரசியல்வாதிகள் லாபம் அடைந்தார்கள் என்றும் மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்டு தோழமைக் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இந்தப் பிரச்சினையை தீர்க்கவில்லை என்றும், உண்ணாவிரதம், போராட்டம், ஊர்வலம் என்று மீனவர்களை தூண்டிவிடுவதிலே இவர்கள் அரசுக்கு விரோதமாக திருப்பி விடுவதில் கவனமாக இருக்கிறார்கள் என்றும் இதே கருத்தை உதிர்த்திருக்கிறார்கள். பிரச்சினைபற்றி நான் முன்பே விரிவாக, விளக்கமாக பேசி இருக்கிறேன். உச்ச நீதிமன்றம் இதிலே தீர்ப்பு கூறி இருக்கிறது. அரசின் அணுகுமுறை சரியில்லாத காரணத்தினாலே இந்த நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்களே தவிர, உச்ச நீதிமன்றம் தனிப்பட்ட ஒரு கட்சிக்காரர் தூண்டி விட்டார் என்று சொல்லவில்லை.

இங்கே நான் இன்னொன்றையும் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே ஆயிரம் கிலோ மீட்டர் கொண்ட நீண்ட கடற்கரையைப் பெற்றுள்ள மாநிலம் தமிழகம்தான். இந்த மாநிலம்தான் கடல் செல்வங்களை மிக அதிகமாகப்பெற்றுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையை புரட்டிப் பார்ப்போமேயானால் 50 ஆயிரம் பேர் வாழ்கின்ற அந்த நீண்ட கடற்கரையிலே இருக்கின்ற மீனவ மக்கள், உடலாலும் உள்ளத்தாலும் தமிழக முதலமைச்சருடன் ஒன்றுபட்டவர்கள், அவருடைய பின்னாலே இருக்கிறவர்கள் என்று வீர வசனங்களை பேசுகின்றவர்கள் எண்ணிப் பார்க்க



1986 மார்ச் 27] [திரு. எஸ். வேணுகோபால்]

வேண்டும். என்ன சொல்கிறார்கள், நீண்ட கடற்கரையில் கோடிக்கணக்கான மீனவ மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள்: ஆனால் ஒதுக்கி இருப்பதோ 50 லட்சம் ரூபாய்தான். இது வேதனையாக இல்லையா? சிந்தித்து பார்க்க வேண்டாமா? மீனவர்களுக்காக கேட்பதற்கு ஆள் இல்லாத காரணத்தினாலே * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஹைப்பாத்தடிக்கலாக கேள்வி போட்டுக் கொண்டே போகக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அமைச்சரவை பற்றி கூறியவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்: சட்டமன்ற மரபுக்குள்ள வார்த்தைகளைத்தான் சொன்னேனே தவிர தனிப்பட்ட முறையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மரபுக்கு அப்பாற்பட்டது. அமைச்சரவையில் என்ன நடந்தது என்பது பற்றி உங்களுக்கு தெரிய வாய்ப்பு இல்லை, கற்பனையில் வாதங்களை சொல்வது மரபு அல்ல, சட்ட மன்றத்தில் அமைச்சரவையில் நடப்பதை எல்லாம் அமைச்சர்கள் வெளியே சொல்லக்கூடாது பதவிக் காப்பு பிரமாணப்படி. ஆகவே அமைச்சர், அமைச்சரவையிலே பேசினாரா என்றெல்லாம் கேட்கக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கீடு போதாது என்று சொல்லுங்கள். இதற்கு அதிகம் வேண்டும் என்று சொல்லுங்கள். இதற்கு கொஞ்சம் வரி போட்டு எடுங்கள் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு அமைச்சரைப் பற்றியும், இதற்கு ஒரு அமைச்சரவை தேவையா? அப்படியா? இப்படியா? என்று சொல்வது நல்லது அல்ல. அப்படி பேசுவது உறுப்பினருக்கு பொருத்தமாக அமையாது.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 மார்ச் 27

கிறேன். இல்லை என்று சொல்லவில்லை. என்னுடைய ஆதங்கத்தை, எண்ணங்களை, என் மனதில் உதித்ததை சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்ற காரணத்தால் நான் அதை சொல்லுகிறேன்.

மேலும், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நான் சென்னையில் வாழ்கிறவன். இங்கே சென்னைக்கு எல்லா உறுப்பினர்களும் வருகிறார்கள். சென்னையைச் சுற்றிப் பார்க்கிறார்கள். இப்போது 2-வது சட்டமன்ற கூடுகின்ற நேரத்தில் கூட இந்த சென்னை நகரம் சுத்தமாக இருக்கிறதா என்று பார்த்தால் சுத்தமாக இல்லை. சொல்லி சொல்லி அலுத்து விட்டது என்று தான் என்னால் சொல்ல முடியும். இப்போது நடந்த ஊராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல்களில் நாம் 2 கட்சியும் சேர்ந்து தோற்று இருக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இங்கே சென்னையில் இருக்கிற மக்கள் என்ன நினைக்கிறார்கள். நகரமன்ற தேர்தல் நடக்கும் என்று காத்து இருக்கிறார்கள். நாங்களும் சென்னை நகர மன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லுகிறோம். யார் ஆட்சிக்கு வருகிறார்கள் என்பது பிரச்சினை இல்லை. மக்களுக்கு நல்ல வாழ்வு கொடுக்க வேண்டும் என்பது தான் பிரச்சனை. தோழமை நமக்குள் இருக்கிறது என்று அதிகாரபூர்வமாக சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் உங்களை கேட்டுக் கொள்வது எல்லாம் இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்களும், மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களும் இணைந்து இந்த சென்னை நகரத்தில் செயல்பட்டால் தான் இந்த நகர மன்றத்தை பிடிக்கமுடியும். இல்லை என்றால் பிடிக்கவே முடியாது. ஏன் என்று சொன்னால் எங்கு பார்த்தாலும் சாக்கடை நீர் ஓடுகிறது. சொல்லி சொல்லி அலுத்துவிட்டது. இங்கே குப்பைகள் கோபுரம் போல் இருக் கிறது. விளக்குகள் சுத்தமாக எரிவது இல்லை. எங்கு பார்த்தாலும் இதே புகாரை சொல்லுகிறார்கள். இங்கே விளக்குகள் எரியவில்லை இந்த எம்.எல்.ஏ. தண்டம் என்றும் மக்கள் சொல்லுகிறார்கள். இது எங்களை மட்டும் குறிப்பது இல்லை. நாம் 2 கட்சியும் சேர்ந்து பொதுத் தேர்தலில் வென்று வெற்றிப்பெற்று இருக்கிறோம். ஆகவே மக்கள் கேட்கின்ற கேள்வி இரண்டு பேருக்கும் ஒத்ததாகத்தான் இருக்கும். 2 பேரும் சேர்ந்து வெற்றி பெற்றாலும் கூட இன்றைக்கு சென்னை



1986 மார்ச் 27] [திரு. எஸ். வேணுகோபால்]

நகரம் சீர் அழிந்து கொண்டு இருக்கிறது. சாக்கடைகள் சரியாக இல்லை. விளக்குகள் எரிவது இல்லை. குப்பை குளங்கள் ஏராளமாக இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் குட்டை மாதிரி சாக்கடை நீர் தேங்கியிருக்கிறது. பல தடவை சொல்லியாகி விட்டது. நகர மன்றத்தில் போய் சொல்லுவதற்கு நாதி இல்லை.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் பேசும்போது நீண்ட பட்டியலைப் போட்டுக் காட்டினார்கள். இந்த அரசு என்ன செய்து இருக்கிறது என்று. நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அவர் சொன்னது உண்மை. அதை எல்லாம் அரசு செய்து இருப்பது உண்மை என்று ஏற்றுக் கொண்டாலும் ஆளும் கட்சியாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் செய்யலாம் என்ற குறிக்கோளையும், எதிர்முகாமில் உள்ள தோழமை கட்சியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் செய்யக்கூடாது என்ற அருவெறுப்பும் நல்லது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சொன்னேன், மூப்பனார் நகரில் இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. கே. எஸ். டி. போர்டில் அடி நீர் தொட்டி கட்டினார்கள், அதை பாதியிலே காண்டிராக்டர் விட்டு விட்டு போய்விட்டான். மறுபடியும் கட்டவில்லை என்று சொன்னேன். தண்ணீர் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது என்று சொன்னேன். பாதைகள் சரியாக போடப்படவில்லை, கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன். பூங்காக்கள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று சொன்னேன். சென்னை நகரம் பாதுகாக்கப்பட வில்லை, சீர் அழிந்து போகிறது என்று சொன்னேன்.

இங்கே சென்னை நகர மேம்பாட்டுக் குழு என்று ஒன்று இருக்கிறது. அந்தக் குழு ஒரு முறை இரண்டு முறை கூடியது. அதற்கு பின்னால் கூடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்குகிற நேரத்தில் மெத்த மகிழ்ச்சி

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 மார்ச் 27

யோடு இருந்தோம். சென்னை நகரம் சிங்கார நகரமாக ஆகிவிடும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அது சரியாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, 30 லட்சம் வீடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை எல்லா மக்களும் வரவேற்பார்கள். 30 லட்சம் வீடுகள் என்று சொன்னால் ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்று சொன்னால் 100 கோடி ரூபாய் ஒரு வருடத்திற்கு இந்தத் திட்டத்திற்குத் தேவை. ஆனால் நீங்கள் ஒதுக்கியிருக்கிற பணம் 40 கோடி ரூபாய். அதில் எங்கள் மத்திய அரசின் பணம் உள் அடக்கப்பட்டு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். மத்திய அரசு 16 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறது. 26 கோடி ரூபாயில் எப்படி வீடுகளை கட்டமுடியும் என்று சொன்னால் அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம் மிகவும் விந்தையாக இருக்கிறது. எப்படி என்று சொன்னால் தனியார் நிறுவனங்கள், எல்.ஐ.சி. போன்றவைகள், கூட்டுறவு சங்கங்கள், மற்றும் எங்கு எங்கு கட்டுகிறார்களோ அப்படி கட்டுகின்ற அத்தனை வீடுகளையும் இதில் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதிலே ஒன்றை மட்டும் விட்டு விட்டார்கள். அதாவது வி. ஜி. பன்னீர்தாஸ் கட்டும் வீடுகளையும் இதில் சேர்த்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அது நல்ல முறை இல்லை என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். நிறைய அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பது நியாயம்.)

(பிற்பகல் 1-00)

மத்தியில் அதிகாரம் இருக்கிறது. மாநிலத்திற்கு அதிகாரம் வேண்டும். வேண்டாம் என்று நான் சொல்லத் தயாராயில்லை. ஆனால் கொடுத்திருக்கின்ற அதிகாரங்களில் ஏற்பட்டிருக்கின்ற மோசமான சூழ்நிலையைப் பற்றி நம்முடைய அக்கௌண்டன்ட் ஜெனரல் சொல்லியிருக்கிறார்கள்.

1984-ஆம் ஆண்டு ஆடிட்டர் ஜெனரல் சொல்லியிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தில் ஊழல், மருத்துவத்துறையில் ஊழல், பொதுப்பணித் துறையில் ஊழல், கல்வித்துறையில் ஊழல்



1986 மார்ச் 27] [திரு. எஸ். வேணுகோபால்]

நடந்திருக்கிறது. உலகத்தமிழ் மாநாட்டில் பல இடங்களில் ஊதாரித்தனமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றி தினந்தோறும் செய்தித்தாள்களில் கட்டுரையாக எழுதப்பட்டு வருகிறது. இந்தத் தவறுகளுக்கு யார் காரணம்? என்ன ஆதாரம்? இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை, காரியங்களை செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச்சொன்னார்கள். இந்த வாரம் முழுவதும் ஒரு பிரச்சினை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் பேசியதை விட மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் அதிகமாக இதிலே ஈடுபட்டவர்கள் என்று நான் சொல்வேன். ஏனென்றால், தொழில் மையங்களுக்கு சரியாக அனுமதி கொடுக்கவில்லையா, மாநிலங்களுக்கு கிடைக்கவில்லையா என்பதற்கான ஆதாரங்கள் எனக்குத் தெரிந்த வரையில், சொல்ல முடியும். ஏனென்று சொன்னால், மைய அரசு தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கவில்லையா, அல்லது அனுமதி கொடுத்தும் ஃபைல்கள் எங்கே தேங்கியிருக்கின்றன என்பது பற்றி, ஒரு மணி நேரத்திற்கு தனியாக விவாதம் நடத்துவதற்கு காங்கிரஸ் கட்சி தயாராக இருக்கிறது என்று நான் சொல்வேன். ஏனென்று சொன்னால், இது மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும். மாநில அரசு சரியாகக் கேட்கவில்லையா, அல்லது மத்திய அரசு சரியாக கொடுக்க வில்லையா என்பதை தெளிவாக மக்கள் மத்தியில் சொல்லியாக வேண்டுமென்ற காரணத்தினால், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்ல விழைகிறேன்.

1984-ல் 344 தொழிற்சாலைகளை தொடங்குவதற்கான உரிமங்கள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. அதில் 142 மட்டும் தான் பயன்படுத்தப்பட்டன. மற்றவை பயன்படுத்தப்படவில்லை. இதிலே இன்னொன்றைச் சொல்ல விரும்புவது, சில உரிமங்களை வழங்கியும், அவற்றை முடக்கி வைத்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அதிலே சில ஃபைல்களை தமிழக அரசின் அதிகாரிகள் முடக்கி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஏன் மேஜைக்கு மேஜை மாற்றப்படவில்லை என்று சொன்னால், அதற்காக சில சட்டங்கள் இருக்கின்றன.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 மார்ச் 27

அந்தச் சடங்குகள் செய்யப்படவில்லை. அந்தச் சடங்குகளைச் செய்யாததால் அங்கே ஃபைல்கள் மூடக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

1985-ல் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக, லெட்டர் ஆப் இண்டெண்ட் 109-ம், இன்டென்ட் ஆப் லைசென்ஸ் 177-ம், புதிய நிறுவனங்கள், அதாவது ந்யூ அண்டர்டேகிங்ஸ் 66-ம், ந்யூ ஆர்டிகிள்ஸ் 26-ம், விரிவு படுத்தப்பட்ட திட்டங்களாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது அதிலே பயன்படுத்துவதற்காக மாவட்டத்திற்கு கொடுக்கப்பட்டிருப்பது, லெட்டர் ஆப் இண்டென்ட் 47-ம், லைசென்ஸ் 65-ம் என்று. இந்தியாவின் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான எண்ணிக்கையில் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திருமதி வளர்மதி அவர்கள் இந்த அவையிலே ஒன்றைச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை, மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இன்னொன்றையும் சொன்னார்கள். இலங்கைப் பிரச்சினையைப் பார்க்கின்றபோது இலங்கைக்கு தூதுவர்களை அனுப்புவதைவிட, துப்பாக்கியை அனுப்ப வேண்டும். இலங்கைக்கு பந்தாரியை அனுப்புவதைவிட, படையை அனுப்புங்கள் என்று எதுகை மோனையுடன் தெரிவித்தார்கள். அழகான வார்த்தை. இதை அடுக்குமொழியில் சொன்னார்கள். நன்றாகத் தான் இருக்கிறது. இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எல்லாவித நடவடிக்கைகளையும், மத்திய சர்க்காரில் இருக்கிற இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவ்வப்போது எடுத்திருக்கிறார்கள். அவர்கள் காலத்திற்கேற்றாற்போல், நேரத்திற்கேற்றாற்போல், சமயத்திற்கேற்றாற்போல் செயல் பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு இன்றைக்கு சுருதி மாறுகிறது. தாளம் மாறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது நல்லதல்ல, வல்லதல்ல என்று தான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தண்ணீர் பிரச்சினை. தமிழகத்தில் தண்ணீர் பிரச்சினை. தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற காலத்தில் வீராணம் திட்டம் உருவாக்கப்பட்டது.



1986 மார்ச் 27] [திரு. எஸ். வேணுகோபால்]

அந்தத் திட்டத்திற்காக சைதாப்பேட்டையில் ஒரு அம்மையாரை நிறுத்தி, அவர் கையிலே குடத்தைக் கொடுத்து, அந்தக் குடத்தில் தண்ணீர் வருவதுபோல் ஒரு காட்சியை அமைத்தார்கள். வீராணம் உடனடியாக அமல்படுத்தப்படாமல் போய்விட்டதற்கான காரணம், கட்டளைக் கால்வாய் வந்ததினால் தான். அந்தத் திட்டத்திற்காக முடிவு எடுக்கப்பட்டு, சிந்தித்து, மாநாடு நடத்தி, கடைசியில் கைவிடப்பட்டது. அதைக் கைவிட்டு விட்டார்கள். அதனால் ஒரு அதிகாரி பழிவாங்கப்பட்டு, வேலையை ராஜிநாமா செய்துவிட்டார்.

அதற்குப் பிறகு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம். அந்தத் திட்டத்தை எங்களுடைய மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துவக்கி வைத்திருந்தாலும் கூட, சிலபல நேரங்களில் மற்றைய மாநிலங்களின் பிரச்சினையாக இருந்தாலும், அதை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பணம் எல்லாம் கொடுத்தும்கூட—அது வர வேண்டும். வர வேண்டாமென்று யாருமே சொல்லவில்லை—யார் செய்கிறார்கள் என்பது பிரச்சினையில்லை, எப்படிச் செய்கிறார்கள் என்பது தான் முக்கியம். எப்படியும் சென்னையில் இருக்கிற மக்களுக்கு தண்ணீர் வந்தாக வேண்டும். இந்தத் திட்டம் இப்படி இருக்கும்போது ஆரணி ஆறு, கட்டளையாறு திட்டத்திற்காக 98 கோடி ஒதுக்குவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். உலக வங்கி உதவியோடு செய்யப் போகிறீர்கள் என்று சொல்கிறீர்கள், அப்படியானால் இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்ன ஆகும். அது நிற்குமா, போகுமா, வருமா என்பதைத் தெளிவாக அவை முன்னவர் பேச்சிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு பற்றிச் சொன்னார்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் ஒன்றை எங்களால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சொல்லக்கூடாது என்றாலும் அடக்கினாலும்கூட தேசிய உணர்வு நெஞ்சத்தை விட்டு வெளியே வந்துவிடுகிறது. 1967-க்கு முன்னாலே. . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, தேசிய உணர்வு வெளியே வந்துவிடக்கூடாது; உள்ளேதான் இருக்க வேண்டும் (சிரிப்பு).

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே, தேசிய உணர்வை சொல்லாததால் போராடிப் பெற்ற சுதந்திரத்தை வெளியே சொல்லாததால் நாங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டோம். * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது நீக்கப்படுகிறது.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே, ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் 1967-க்கு முன்னாலே பெருந்தலைவர் காமராஜ், அதற்கு முன்னாலே ராஜகோபாலாச்சாரி ஆண்ட காலத்திலும் சரி தமிழகத்திலே சாராயக் கடைகள் இல்லை. ஒரு தலைமுறையே சாராயக் கடைகள் இல்லாமல் இருந்ததை ஒரு தலைமுறைக்குப் பின்னாலே திராவிடப் பாரம்பரியம் வந்ததற்குப் பின்னாலே, சுற்றி எரிகிறது நெருப்பு, உள்ளே கற்பூரம் இருக்கிறது. அந்தக் கற்பூரம் காப்பாற்றப்படுமா என்று சொல்லி பெங்களூரிலே குடிக்கிறார்கள், பாண்டிச்சேரியிலே குடிக்கிறார்கள், ஆந்திராவிலே குடிக்கிறார்கள், தீபகற்பம் போல் தமிழ்நாடு இருக்கிறது என்று சொல்லி எப்படியோ சாராயக் கடைகளைக் கொண்டு வந்துவிட்டார் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கட்சி மாநிலக் கட்சி. அதனாலே பிரச்சினை வருகிறது. . . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கை என்பது தமிழ்நாட்டிலே மட்டும் இருக்கிற காங்கிரஸ்காரர்களுடைய குறிக்கோளா? அல்லது அகில இந்தியாவிலே இருக்கிற காந்தியால் வளர்க்கப்பட்ட காங்கிரஸிலே இருக்கிறவர்களுடைய கொள்கையா? (சிரிப்பு)

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு. (சிரிப்பு).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தமிழ் மாநிலம் தனி மாநிலமாகவும் தனி நாடாகவும் ஆகலாம் என்று விரும்புகிறார்களா?

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலம் தனி மாநிலமாகப் பிரிந்து போக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. தமிழகத்திற்கென்று ஒரு பண்பாடு உண்டு, ஒரு பாரம்பரியம் உண்டு. ஏனைய மாநிலங்களிலே ஏற்கெனவே திறந்து விட்டார்கள், நாம் மூடி வைத்திருந்தோம், திறந்தோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, ஆகவே காங்கிரஸின் கொள்கை அல்ல அது. தமிழனுடைய பண்பாட்டின் அடிப்படையிலே அது நிலைநாட்டப்படுகிறது வள்ளுவர் காலத்திலிருந்து சொல்லப்படுவதன் காரணமாக.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, இதிலிருந்து மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் தேசிய ஒருமைப்பாட்டைக் கைவிட்டு விட்டார்கள் என்று தெரிகிறது (சிரிப்பு).

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ காரியங்கள் இருக்க இந்தப் பிரச்சினையில் ஏன் மற்ற மாநிலங்களை நாம் பின்பற்ற வேண்டும், மற்றவர்களுக்கு நாம் முன்மாதிரியாக இருக்கலாமே.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்தக் காலகட்டத்திலே கலைஞர் கொண்டு வந்து விட்டார். இப்போது இருக்கிற பரம்பரை 20 ஆண்டுகளுக்குப் பின்னாலே இன்றைக்கு எல்லோரும் குடிக்கிற அளவுக்கு உரிமையைக் கொடுத்தது திராவிடப் பாரம்பரியம் என்று சொன்னால் மிகையாகாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக திராவிடப் பாரம்பரியத்தைப் பழிப்பது சரியல்ல. அப்படியென்றால் மற்ற மாநிலங்களிலே மதுவிலக்குத்

தளர்த்தப்பட்டிருப்பது எல்லாம் தேசியப் பாரம்பரியம் என்று வரும். ஆகவே அதற்கு தேசியம், திராவிடம் என்று வேறுபாடு கற்பிப்பது சரியல்ல.

(பிற்பகல் 1.10)

**திரு. எஸ். வேணுகோபால்:** தலைவர் அவர்களே, நான் சொல்வது தி.மு.க. ஆரம்பித்துவிட்ட விளக்கை கொழுந்து விட்டு எரியச் செய்வது அண்ணா தி.மு.க. அப்படி ஒரு தலைமுறை பின்னாலே போய்விட்டது. உங்கள் மதுவிலக்குப் பிரச்னையில், சாராயக் கடைகளை மட்டும் மூடாதீர்கள்; பிராந்திக் கடைகளையும் மூடுங்கள். அதையும் மூடினால்தான், நல்லது. தமிழன் என்ற சொல் உண்டு, தனியே அவர்க்கொரு கருத்து உண்டு என்பதை நான் வரவேற்கிறேன். அந்தக் கருத்தில், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு என்னென்ன ஒத்தாசை செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்.

நான் முன்னர் சொல்லியதைப்போல, நகரத்தையும் கவனியுங்கள், நகரத்தில் உள்ள பிரச்னைகளையும் கவனியுங்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை புரட்சித் தலைவரின் அரசின் சார்பில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டி, வரவேற்றுப் பேசுகிறேன்.

இந்தியாவில் 22 மாநிலங்கள் இருப்பதை அறிவோம். அத்தனை மாநிலங்களிலும், தமிழகத்தைத் தவிர, எல்லா மாநிலங்களிலேயும் வரி உயர்வை இந்த ஆண்டில் பெரும்பாலானவை செய்திருக்கின்றன. ஆனால், தமிழகம் மட்டும் இருபது கோடி ரூபாய்க்கு வரி விலக்கை அளித்திருப்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதானே தவிர, டாக்டர் நாவலர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையே தவிர, இந்தியாவில் வேறு எங்கும் பார்க்க முடியாது என்பதை இந்த நேரத்திலே சொல்லி அதற்குப் பாராட்டைத் தெரிவிக்கிறேன்.





பக்கத்திலே உள்ள பாண்டிச்சேரி கூட ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபாய்க்கு இந்த ஆண்டு புதிய வரிகளை நிர்ணயித்து இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். சென்னையிலே பாதி அளவிற்குக் கூட இல்லாத பாண்டிச்சேரி ஒரு கோடியே முப்பது இலட்சம் ரூபாய்க்குப் புது வரிகளை உயர்த்தி மக்களுடைய வளத்தைக் காண தாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்றும் கூறுகிறார்கள். ஆனால், அதே நேரத்திலே, ஐந்து கோடி மக்களைப் பெற்றுள்ள இந்தத் தமிழகத்தில் வரி உயர்வு இல்லாத, இருக்கின்ற வரியிலேயே இருபது கோடி ரூபாய்க்குக் குறைத்து இப்படிப்பட்ட சிறப்பு மிக்க பட்ஜெட்டை அளித்திருக்கிறார்கள் என்றால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே நமக்கிருக்கின்ற சங்கடமெல்லாம், நாம் ஒரு அணியாக இருப்பவர்களிலேயே தெரிந்தோ தெரியாமலேயோ அந்த அணியிலே உள்ள பலரில் சிலர், திராவிட முன்னேற்றக் கழக காங்கிரஸ் ஆக இருக்கிறது. எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஏதோ ஒரு அணியிலே நிற்கிறோம். நாங்கள் தவறு செய்தால் எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு முக்கிய கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், அதேநேரத்திலே, ஒட்டு மொத்தமாக எந்தக் கட்சியானாலும், எந்த ஆட்சியானாலும், ஒரு நபரை மட்டுமே நம்பி நடத்தி விட முடியாது. ஆனால், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் சொல்வதுதான் வேத வாக்கு; அவர் இடுகின்ற கட்டளைதான் எங்களைப் பொறுத்தவரையில் ஒரு தேவ மந்திரமாகவே கருதுகிறோம்.

இன்றைக்கு இங்கே சொல்கிறார்கள். வரி குறைப்பு உள்ள இந்த பட்ஜெட்டைப் பற்றி, எதிர்க்கட்சியிலே உள்ள யாராவது ஒருவர், இந்த பட்ஜெட்டில் வரியைக் குறைத்திருக்கிறார்கள், இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில் இல்லாத ஒரு செயலைச் செய்திருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன் அல்லது இதைத் தயாரித்த டாக்டர் நாவலர் அவர்களுக்கு எங்களுடைய பாராட்டு என்று சொன்னார்களா என்றால்

[திரு. எல்ல. இராசமாணிக்கம்] [1986 மார்ச் 27

சொல்லவில்லை. பரவாயில்லை அவர்கள் எதிர்க்கட்சி. இப்பொழுது என்ன தர்மசங்கடமான நிலைமை இருக்கிறது என்றால், ஊராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியிலே ஒரு பெரிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் ஜெயித்தது, அது ஜெயித்ததற்குக் காரணம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அது கடுமையாக எதிர்த்தது, அந்தக் காரணத்திற்காகத்தான் அது ஜெயித்தது என்று நினைக்கிறார்கள். அது இப்பொழுது என்ன ஆயிற்று என்றால், அவர்களைவிடக் கடுமையாக நம்மைத் தாக்கினால் மக்கள் நம்புவார்கள் என்ற வகையிலே அவர்கள் நினைக்கிறார்கள். அந்த அளவில், இங்கே அவர்களுடைய பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன என்பதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்.

அடுத்து, இங்கே, 1982-83-வது ஆண்டில், நமது மின்சார இலாகாவிற்கு ரூ. 65 கோடி ஒதுக்கினார்கள். அப்பொழுது திரு. இராயப்பா அவர்கள் செயலாளராக இருந்து ஓய்வுபெற்ற நேரம். அப்பொழுது, ரூ. 65 கோடி—மின்சாரத்திற்கு இவ்வளவு குறைவான தொகையை ஒதுக்கி, தமிழகத்தினுடைய முன்னேற்றத்தை புரட்சித் தலைவர் அரசு கேவலப்படுத்துகிறது; இவ்வளவு குறைவான தொகையை வைத்து, இந்தத் தமிழகத்தின் தொழில் கொள்கையைத் தோற்கடிக்க நினைக்கிறது என்றெல்லாம் அன்றையதினம் திரு. இராயப்பா அவர்கள் குமுதம் பத்திரிகையிலே 4 வாரங்கள் எழுதினார்கள். ஆனால், இந்த பட்ஜெட்டில், வரியை ரூ. 20 கோடிக்குக் குறைத்து, அதேநேரத்தில், சென்ற ஆண்டைக் காட்டிலும், ரூ. 395 கோடியிலே,—ரூ. 300 கோடி சென்ற ஆண்டு ஒதுக்கி, இந்த ஆண்டு, ரூ. 95 கோடியை அதிகமாக அளித்திருப்பதன் மூலம்—தொழில் கொள்கை, தொழில்கள் வளர்வதற்கு, வாய்ப்பை உருவாக்குவதற்கு, தமிழக அரசினுடைய, புரட்சித் தலைவருடைய, பொன்மனச் செம்மலுடைய அரசு, எவ்வளவு தீவிரமாக, தொழில் வளர வேண்டுமென்பதில் எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



1986 மார்ச் 27] [திரு. எல்ல. இராசமாணிக்கம்]

அதேபோல், கல்விக்கானாலும் சரி, சென்ற ஆண்டில் ரூ. 468 கோடி; இன்று 1986-87-ல் ரூ. 551 கோடி. ரூ. 83 கோடி அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. பட்ஜெட்டில் நாம் ரூ. 20 கோடி வரியைக் குறைத்தும், கல்விக்காக, ரூ. 83 கோடியை உயர்த்தி, இந்த மாநிலத்தினுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், செழிப்பாக நடத்துவதற்கும் எடுத்துள்ள முயற்சியை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

அடுத்து, குடிநீர்த் திட்டம். கிராமப்புற குடிநீர் திட்டத்திற்காக ரூ. 45 கோடி ஒதுக்கியிருப்பது, வரவேற்கத் தக்கது. நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இந்த ஓராண்டுக் காலத்தில், செல்லாத கிராமமே இல்லையென்று சொல்லலாம். ஆண்டுதோறும் எல்லா ஊர்களுக்கும் சென்று, குடிநீருக்காக, ரூ. 45 கோடி ஒதுக்கி யிருப்பதை உண்மையிலே பாராட்டுகிறோம்.

தாம்பரத்திலே, எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாமல், அங்கே சுங்கத் தீர்வையற்ற மண்டலத்தை இந்த ஓராண்டுக் காலத்தில் அமைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிலம், தண்ணீர் இவற்றையெல்லாம், அங்கேயுள்ள நிலையிலிருந்தே கொடுத்திருந்தாலும், ரூ. 50 கோடிக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துகிறார்கள். தொழிற்சாலையே வளரவில்லை, எந்தத் தொழிற்சாலையும் இல்லையென்று கூறுபவர்களுக்குச் சொல்கிறேன், இந்த ஓராண்டுக் காலத்தில், தாம்பரம் சானட்டோரியம் பகுதியில் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை, நீங்கள் பஸ்ஸிலே போகிற நேரத்தில் பாருங்கள். எவ்வளவு பெரிய தொழிற்சாலை உருவாகி—80 தொழிற்சாலைகள் உருவாவதற்கு, 3 தொழிற்சாலைகளைச் சென்ற வாரத்திலே திறந்து இருக்கிறார்கள். இன்னும் 77 தொழிற்சாலைகள் திறக்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தாம்பரம் சானட்டோரியம் பகுதியில், ரூ. 6 கோடிக்குச் சுங்கத் தீர்வையற்ற மண்டலத்தில் வேலை செய்பவர்களுக்கு, எச்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., எல்.ஐ.ஜி. என்ற

3 பிரிவினருக்கும் திட்டம் வகுத்து செயல்படுத்துவதை அறிந்து புரட்சித் தலைவர் அரசை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

அதேபோல், சோளிங்கநல்லூரில் ரூ. 5 கோடி அளவில், பால் சுத்திகரிப்பு நிலையத்தை இன்னும் ஒரு மாதத்திலே ஏற்படுத்த நடவடிக்கை எடுத்த புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டுகிறேன், நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அதேபோல், இன்றைக்கு, நீங்கள் எல்லோருமே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டுமென்பதற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1980-ல் வறுமைக் கோட்டுக்குக் கீழே தமிழ் நாட்டிலே இருந்த மக்கட் தொகை 42 சதவீதம். ஆனால், கடந்த டிசம்பரிலே, கணக்கெடுப்பின் மூலமாக இப்பொழுது தெரிவித்திருக்கிறார்கள், 36.5 சதவீதம் என்று. இப்போது 36.5 சதவீதமாக இருக்கிறது. அதாவது 5.5 சதவீதம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்த மக்களை மேலே உயர்த்தியிருக்கிறோம். அதாவது 1980-லிருந்து 1985 வரையில் உள்ள ஐந்தாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ஆறு இலட்சம் பேர்களை வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்து மேல்நிலைக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சாராயக் கடைகளைப் பற்றி பலரும் சொன்னார்கள். தயவுசெய்து எல்லோரும் மனதிலே கைவைத்துப் பேச வேண்டும். நமது குடும்ப நிலை என்பதை எண்ணிப் பார்த்து பேச வேண்டும். இதிலே இரண்டுபட்ட கருத்திற்கு இடமில்லை. மதுவிலக்கைக் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சியும் மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்கிறது. அண்ணா தி.மு.க.வும் அமுல்படுத்த வேண்டுமென்று சொல்கிறது. ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்களும் அமுல்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டும் ஏனோ பதுங்குகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று





தெரியவில்லை. உழைப்பவர்கள் குடிக்க வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணமோ என்னவோ தெரியவில்லை. அடுத்த ஆண்டிலே இந்த மதுவிலக்குக் கொள்கையை நாம் அமுல்படுத்துவதன் மூலம் 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பைத் தவிர்க்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை கருத்திலே கொண்டு, இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்று குறிப்பிட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசில் நிதியமைச்சராக இருக்கிற மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு பொருள்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது சிறு வியாபாரிகளுக்கு கடை உரிமத்தைக் கூட்டியிருப்பதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் சிறு வியாபாரிகள் ஆண்டு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வியாபாரம் செய்தால் வரி இல்லை என்று இருந்ததை இந்த ஆண்டு 75,000 ரூபாய் வரையில் வியாபாரம் செய்தால் வரி இல்லை என்று உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். காரணம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சிறு வியாபாரிகளாக இருக்கிறார்கள்.

அடுத்து, எதிர் தரப்பிலே இருந்து பேசியவர்கள் மத்தியிலே ஆளுகின்றவர்கள் ஏதோ இனாமாக நமக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருப்பது போலவும், அந்தப் பணத்தை இந்தியத் திருநாட்டினுடைய வரிப் பணத்திலிருந்து தராமல் ஏதோ ஒரு உலகத்திலிருந்து கொண்டு வந்து இனாமாக வழங்குவது போலவும் ' நாங்கள் கொடுக்கிறோம், நாங்கள் கொடுக்கிறோம், 40 கோடி

[திரு. கே. பாலாஜி] [1986 மார்ச் 27

ரூபாய் நாங்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்திருக்கிற தமிழர்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம்' என்று இங்கே பேசும்போது சொன்னார்கள்.

நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசுக்கு அதிகமாக வரி தருகின்ற மாநிலம் தமிழ் மாநிலம் தான் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ, வரி கொடுக்காமல் மத்தியிலே இருந்து பணம் கேட்கிறார்களே என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னால் ஒருவேளை பொருத்தமாக இருக்கும். ஆனால் தோழமை என்ற நிலையிலே இருந்து கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் பேசுவது சரியாக இருக்காது. பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஆளும் கட்சி ஒரு யானைக்கு சமமாக இருந்தால் பிரதான எதிர்க்கட்சி ஒரு அங்குசமாக இருக்க வேண்டுமென்று" சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஏதோ ஆட்சிக் கட்சியிலே இருக்கிற நாங்கள் திமிர் பிடித்து அலைகிறவர்கள் போலவும் நீங்கள் அங்குசத்தைக் கொண்டு அடக்குகிறவர்களைப் போலவும் இங்கே குறை சொல்லி பேசுகிறீர்கள்.

அடுத்து சாராயக் கடைகளை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதிலே கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் வியாபாரத்திலே, உண்மையான தேசியவாதிகளாக இருந்தால் அந்தக் கடைகளை எடுத்து நடத்துபவர்களாக இருப்பார்களா என்பதை மனதிலே கை வைத்துச் சொல்ல வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். உண்மையான தேசியவாதிகளாக இருந்தால் சாராயக் கடைகளை நடத்துபவர்களாக இருப்பார்களா என்று சொல்வது சரியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அவைக் குறிப்பைப் பார்த்து, பின்னால் சொல்கிறேன்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிக்குப் புறம்பாக நான் பேசியிருப்பேனே யானால் அதை நீக்குவதிலே எனக்கு மாறுபாடு இல்லை எனவே நான் சொல்கிறேன். ஒரு கொள்கையை நாம் ஏற்றுக்



1986 மார்ச் 27] [திரு. கே. பாலாஜி]

கொள்கிற நேரத்தில் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் காந்தியினுடைய தத்துவம். அதை விட்டுவிட்டு இங்கே ஏதோ நாம்தான் சாராயக் கடைகளை தமிழகத்தில் நடத்துவது போலவும் மற்ற மாநிலங்களில் சாராயக் கடைகள் இல்லாதது போல் பேசுவது அவ்வளவு சரியில்லை. ஆகவே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 1—1—1987 அன்று கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடுகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி மூடுவதால் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுகிறது. அதன் பிறகு வருடத்திற்கு 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த மதுவிலக்குக் கொள்கையைக் காராராகக் கடைப்பிடிக்கிற மாநிலங்களுக்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும். அதை அவர்கள் செய்ய வேண்டும் என்று அறிக்கையிலேயும் கூறி இருக்கிறார்கள்.

அதையெல்லாம் அவர்கள் எடுத்துப் பேசி, தமிழகத்திற்காக மத்திய அரசினிடத்திலே எடுத்துச் சொல்லி இந்த நட்டத்தைச் சரி செய்யுங்கள் என்று கோரிக்கை விடுவார்கள் என்று நான் நான்கைந்து நாட்களாக பார்த்து வருகிறபோது யாருமே சொல்லவில்லை. சென்னை மாநகரம் இருட்டில் இருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் எல்லாம் குக்கிராமத்தில் இருந்து வந்தவர்கள். என்னுடைய குக்கிராமத்திலே உள்ள நிலைமையைப் பார்த்தால் இங்கே சென்னை மாநகரிலே உள்ள வசதியில் இலட்சத்தில் ஒரு பங்கு வசதி கூட பெற முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தில்—அதைச் சொன்னால் கூட அது மத்திய அரசின் திட்டம்தானே என்று சொல்வார்கள்—தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அனைத்து கிராமங்களிலும் குடிநீர் இல்லை என்ற நிலைமை இல்லாத அளவுக்கு அதாவது இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்தில் தான் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கூட இதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

பல்வேறு துறைகளில் இந்த அரசு வரியைக் குறைத்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் நம்முடைய கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான்கு சதவீதம், மூன்று சதவீதம், இரண்டு

சதவீதம் என்று விசைத்தறிக்கு வரியைக் குறைத்திருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் கைத்தறிக்கு இரண்டு சதவீதம் என்று இருந்ததை மூன்று என்று ஆக்கி இருக்கிறோம். அண்டை மாநிலமான ஆந்திராவில் வரி இல்லை. பாண்டிச்சேரியில் பல வரிகளை இப்போது அவர்கள் போட்டிருந்தாலும் சென்ற ஆண்டு அங்கே வரியில்லாத காரணத்தால் இங்கேயிருந்து அங்கே சென்று பல பொருட்களை வாங்கிக் கொண்டு வந்தார்கள்.

வண்ணத்திற்காக ஒரு பெரும் தொழிற்சாலையை நாம் தமிழ்நாட்டில் வைத்திருக்கிறோம். அதை ஊக்குவிக்க உடனடியாக அனுமதி வேண்டும். ஆனால் நம் வண்ணத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய நாம் பம்பாயிலே இருந்து வண்ணத்தைப் பெறுகிறோம். எனவே கைத்தறிக்கு விதிக்கப் பட்டிருக்கிற வரியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் அனுமதி பெற்று அந்த வரியை முழுமையாக நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள காஞ்சிபுரம் தாலுக்காவைப் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்று நான் சென்ற கூட்டத் தொடரில் கூட சொன்னேன். இந்த கூட்டத் தொடரிலே அதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

காஞ்சிபுரம் தாலுக்காவிலும், உத்திரமேரூர் தாலுக்காவிலும் ஏராளமாக கரும்பு விவசாயம் செய்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு சர்க்கரை ஆலையை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் தமிழகம் தான் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. அதன் காரணமாக நம்முடைய மாநிலம் பாராளுமன்றத்தில் ஒரு இடத்தை இழந்திருக்கிறது. அந்த இடத்தைப் பெற்றுத் தருகின்ற வகையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் எங்களோடு இணைந்து அந்த ஒரு இடத்தைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தருகின்ற வகையில் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து காஞ்சிபுரம் நெசவாளர்கள் ஏராளமாக இருக்கின்ற பகுதியாகும். அவ்வாறு அங்கே நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியில் இன்னும் ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிற எண்ணெயாக இருந்தாலும், அரிசியாக இருந்தாலும், சர்க்கரையாக இருந்தாலும் குறித்த தினங்களில் தான் தருகிறார்கள். அப்படி இல்லாமல் மளிகைக் கடைகளிலே எப்போது பணம் கொடுத்தாலும் கிடைப்பது மாதிரி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு, அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. கே. பாலாஜி:** ஒரு கடைக்கு 300 குடும்பக் கார்டுகள் அல்லது 900 குடும்பக் கார்டுகள் என்று வைத்திருந்தாலும் அவை அத்தனைக்கும் நாம் தேவையான பொருள்களைக் கொடுக்கிறோம். அந்தப் பொருள்களை பணத்தை எடுத்துச் சென்றால் எந்த நேரத்திலும் கொடுக்கிற நிலைமையை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு (மணியடிக்கப் பெற்றது) பல்வேறு கோரிக்கைகளை நான் இங்கே எடுத்து வைக்க வேண்டும்; பல்வேறு நிலைமைகளை இங்கே நான் பேச வேண்டும் என்று சொன்னாலும் நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

எங்களுடைய காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊர். அது மட்டும் அல்லாமல் செங்கல்பட்டு மாவட்டத்தினுடைய தலைநகராகவும் இருக்கிறது. சென்ற கூட்டத் தொடரிலேயே நான் கேட்டேன், காஞ்சிபுரத்திற்கு ஒரு நவீன காவல் நிலையம் வேண்டும் என்று. அதை இந்த ஆண்டாவது டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. ஆனால் அந்த

தீயணைப்பு நிலையத்தில் தீயணைப்பு வண்டி இல்லாமல் இருக்கிறது. அந்த வண்டி பழுதடைந்து இருக்கிறது. வேறு ஒரு வண்டி தருவதாக சொல்லி 6 மாதமாகியும் இதுவரை வழங்கப்படவில்லை அதையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. மாரிமுத்து:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்திய துணைக் கண்டத்தின் மொத்தப் பொருளாதாரப் பற்றாக்குறை, தமிழக மக்களின் பொருளாதார நிலையிலும் வெகுவாக பாதிப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையிலும் புதிய வரிகளைப் போடாது, குறைபாடுகளுக்கு இடம் இல்லாது வறுமை கோட்டிற்கு கீழே வாழுகின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற முறையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்துள்ளார்கள்.

வலுவான மைய அரசும், வளமான மாநில அரசுகளும் என்னும் தத்துவத்தின் அடிப்படையில் மைய அரசின் அதிகார வரம்புகள் பரவலாக்கப்பட வேண்டும்; மாநில அரசின் அதிகார வரம்புகள் உயர்த்தப்பட வேண்டும், விரிவாக்கப்பட வேண்டும் என்ற மாநில சுய ஆட்சித் தத்துவத்தை சுட்டிக் காட்டியும், இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களுக்கு குடியுரிமை, மொழியுரிமை, தொழில் உரிமை போன்றவை வழங்கப்பட்டு, ஈழத் தமிழர்கள் சம உரிமையோடு வாழ வழிச் செய்ய வேண்டும் என்னும் கருத்தையும் சுட்டிக்காட்டி இந்த நிதிநிலை அறிக்கைக்கு உயிரோட்டம் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட வித்தியாசமான புதிய முறையில் நிதிநிலை அறிக்கையை கொடுத்திருக்கும் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 20 அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்றும், கடுமையான



வறட்சியாலும் கொடுமையான வெள்ளத்தாலும் பருவநிலை அவ்வப்போது பாதிக்கப்பட்டாலும், வேளாண் விளைபொருள்களின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என்றும் சுட்டிக்காட்டுகிறபோது, நாவலர் அவர்களின் பெருமிதத்தோடு, தமிழகமே தன்னுடைய பெருமிதத்தை இணைத்துக் கொள்கிறது.

அரிசி உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்தையும் கரும்பு உற்பத்தியில் முதல் இடத்தையும், இந்திய துணை கண்டத்திலேயே தமிழகம் பெற்றிருக்கிறது என்றும் அது பொருளாதார உயர்விற்கான நம்பிக்கையை தரக்கூடியதாக இருக்கிறது என்றும் மகிழ்ச்சிகரமான செய்திகளை இந்த நிதிநிலை அறிக்கை தாங்கி நிற்கிறது.

அது மட்டும் அல்ல. அரிசி, சர்க்கரை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், மண்ணெண்ணெய், சோப்பு போன்ற அத்தியாவசிய பொருள்களையும், நியாய விலைக் கடைகளின் மூலம் குறைந்த விலையில் ஏழை எளிய மக்களுக்கு விநியோகிக்கின்ற வகையிலே 100 கோடி ரூபாய் இழப்பைக் கூட தமிழக அரசு தாங்கிக் கொண்டிருக்கிறது என்று பெருமிதத்தோடு, இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கைத்தறித் துறையின் கீழ் தள்ளுபடிக்காக ரூ. 16 கோடியும், ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலம் 150 ஏரிகளுக்கு செலவிட ரூ. 504 லட்சமும், பெரியார் வைகை பாசன வசதி இரண்டாம் கட்ட பணிகளுக்காக 50 கோடி ரூபாயும், கிராமப்புற குடிநீர் திட்டத்திற்காக 45 கோடி ரூபாயும், இலவச சீருடை பாட புத்தகம் போன்றவை வழங்க 27 கோடி ரூபாயும், சத்துணவு திட்டத்திற்காக 169 கோடி ரூபாயும் மின்சாரத்திற்காக 395 கோடியும், கல்விக்காக சுமார் 551 கோடி ரூபாயும் என்று பல இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு நல்ல முறையிலே பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறது.

[திரு. மு. மாரிமுத்து] [1986 மார்ச் 27

கிருஷ்ணா நதி நீர் திட்டத்திற்காக 45 கோடி ரூபாயையும் ஒதுக்கியிருக்கிறது. இப்படி பல்வேறு இனங்களுக்கு பல்வேறு நல்ல பணிகளுக்கு, திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கி, நன்மைகளைச் செய்திருக்கும் இந்த அரசை வரவேற்று பாராட்டுவதற்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மனம் இருக்கிறதா என்றால், இல்லை. அதற்கு மாறாக, இங்கே பேசிய அருமை கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் ஒருவர் கூட சொன்னார். இந்த அரசு பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு தீர்த்து வைக்கின்ற ஞானம் இல்லாத அரசு என்று குற்றம் சாட்டினார். அவர் எதைப் பார்த்து, எதை வைத்துச் சொன்னார் என்பது விளங்கவில்லை. யாரோ வீதியிலே போகின்றவர் சேற்றை வாரி இறைப்பதைப் போல சொல்லி விட்டிருக்கிறார் அவர். ஏதோ கம்யூனிஸ்ட் கட்சியினைச் சார்ந்தவர்களுக்குத்தான் இந்த நாட்டின் ஞானம் முழுவதும் ஏகபோக குத்தகை போலவும், அவர்களைத் தவிர இந்த நாட்டிலே ஞானம் வேறு எந்த அரசியல்வாதிக்கும் இல்லை என்பது போலவும் பேசினார். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களைப் பற்றி தமிழகம் நன்றாக அறிந்திருக்கிறது. பிரச்சினைகளை உருவாக்குவது. . . .

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இப்படி உறுப்பினர் பேசினால் அதனை மறுப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு தரவேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு விஷயத்தை தவறாகச் சொன்னார்கள். உண்மையிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சமூகப் பிரச்சினைகளை புரிந்துகொள்வதில் என்ன ஞானம் இருக்கிறது என்பதைப் பற்றி எங்களுக்கு ஒரு கருத்தோட்டம் உண்டு. அந்தக் கருத்தை நாங்கள் எப்போதும் வலியுறுத்துகிறோம். இந்தச் சமூகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மொத்த குத்தகை நாங்கள் அல்ல. எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய அடிப்படையான கொள்கை. ஆகவே அவர்கள் ஏற்றுக்கொண்டால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.



1986 மார்ச் 27]

திரு. மு. மாரிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன கருத்திற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிற அரசியல் ஞானம் இல்லையென்று சொன்னார். அது மொத்தமாக ஆளுகின்றவர்களைக் குற்றம் சாட்டுவதாகத் தான் நான் கருதுகிறேன். அப்படிச் சொல்வதற்கு பொதுவுடைமைக் கட்சிக் காரர்கள் எந்த வகையிலே தகுதி பெற்றவர்கள் என்று தெரியவில்லை. அவர்களைப் பற்றி தமிழகம் நன்றாக அறிந்திருக்கிறது. பிரச்சினைகளை உருவாக்குபவர்கள், பிரச்சினைகளை தேடி அலைபவர்கள், பிரச்சினைகளை பெரியதாக்கக் கூடியவர்கள், பிரச்சினைகளுக்கு அரசியல் சாயம் பூசக் கூடியவர்கள் என்றும் அதன் மூலமாக ஆதாயம் தேடக் கூடியவர்கள் என்றும் அவர்களை தமிழகம் நன்றாக அறிந்திருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களை . . .

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஸ்வீப்பிங்காக அலிகேஷன்களைச் சொல்கிறார். அவற்றை மறுத்து நாங்களும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட்டுகள் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி பொதுவாக குற்றம் சாட்டுவது சரியல்ல. பிரச்னைகளை உருவாக்க முடியாத அளவிற்கு ஒரு நிலையை ஏன் ஆளும்கட்சி உருவாக்கிக் கொள்ளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. மு. மாரிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பாராட்டுகிற செயல்களை பொதுவுடைமைக் கட்சிக் காரர்கள் செய்திருந்தால் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறார்கள், அவர்களும் இதில் கவனம் செலுத்துகிறார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். இதைப்போல மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட வீடு கட்டுகிற திட்டத்தைப் பற்றி தங்களின் சந்தேகத்தைத் தெரிவித்தார்கள். இவர்கள் எப்போதுமே சந்தேகத்தைச் சொல்லி, இந்தத் திட்டம் நடக்குமா, நடத்த முடியுமா, வரவு-செலவுத் திட்டத்தில் பணம்

[திரு. மு. மாரிமுத்து] [1986 மார்ச் 27

ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் பேசுகிற நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தை அறிவித்த போது கூட இப்படிதான் அவர்கள் பேசினார்கள். அதைப்போல இன்றும் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி பேசுகிறார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, நரிக்குறவர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற மாபெரும் திட்டத்தை கேலி பேசுகிற, கிண்டல் செய்கிற அளவிலேதான் அவர்கள் பேசுகிறார்கள். இந்தத் திட்டத்தை வரவேற்று திட்டம் இப்படி இப்படி செயல்படலாம் என்ற வகையில் அவர்கள் வழிவகைகளை காட்டினால் அது வரவேற்கக்கூடியதாக இருக்குமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனிமேலாவது நிதிநிலை அறிக்கையில் பேசுகிற போது அந்த அறிக்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்தத் திட்டங்களை பாராட்டுகிற பாங்கினை எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியில் இருக்கிற ஒருசில பிரச்சினைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் நிலையூர் கால்வாயை சீரமைப்பதற்காக 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டதாக செய்திகள் வந்தன. நிலையூர் கால்வாய்த் திட்டத்தில் சிமெண்ட் ஸ்லாப்கள் போட்டு நவீனப்படுத்துகிற வகையில் உருவாக்கப்படுவதாக அறிகிறேன். அதைப்போல விளையன்குளம் கிராமத்திலும், விரகனூர் கிராமத்திலும் ரெகுலேட்டர்களை ஏற்படுத்தி இரண்டையும் இணைத்து நல்லூர், சோழங்குருணி, நெடுங்குளம், விராதனூர் போன்ற பகுதிகளுக்கு பாசன வசதி செய்கிற திட்டமாக அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டே நிதியினை ஒதுக்கி நிறைவேற்றிட வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கிருதமால் நதித்திட்டம் என்று சொல்லப் படுகின்ற திட்டத்தில் மொட்டைக் கழுங்கு என்ற இடத்திலிருந்து பிரிந்து, மாடக்கால் வழியாக வருகிற வைகை தண்ணீரை



1986 மார்ச் 27] [திரு. மு. மாரிமுத்து]

மாடக்குளம் கண்மாயில் தேக்கி அதிலேயிருந்து புறப்பட்டு கிருதமால் நதி வழியாக சிந்தாமணி, சின்ன அனுப்பானடி, சாமநத்தம் வரையில் செல்கிற அந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே உலக வங்கியின் கடனுதவியோடு செயல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தையும் விரைவாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல உலக வங்கியின் உதவியோடு வைகை நதியிலிருந்து வருகிற திருமங்கலம் கால்வாய்த் தண்ணீரை புளியங்குளம் ஊர்க்குளம் கண்மாய் என்ற பகுதிக்கு வருவதை அந்தத் தண்ணீரை மேலும் கிழக்காக திருப்பிவிட்டு, வடபழஞ்சி, கீழக்குயில்குடி, மேலக்குயில்குடி, காடிப்பட்டி, முத்துப்பட்டி போன்ற பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரை கொண்டு வந்து, வடபழஞ்சியிலிருந்து தென்புறமாக தென்பழஞ்சி, சாக்கிலிப்பட்டி, வேடர் புளியங்குளம், தணக்கன்குளம், தோப்பூர் போன்ற பகுதிகளுக்கு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி அதன் மூலமாக அந்தக் கிராமக் கண்மாய்களில் வைகை தண்ணீர் வந்து பாயக்கூடிய அளவிற்கு செய்து கால்வாய் வெட்டி, அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அதைப்போலவே மதுரை மாநகரத்தினுடைய புறநகர்ப் பகுதியாக இன்று வளர்ந்து வருகிற பெத்தானியாபுரம், சம்மட்டிப் புரம், பழங்கா நத்தம், டைக்காரா, டி.வி.எஸ். நகர், ஜீவா நகர், சில்லாபுரம், சொக்கலிங்க நகர், பொன்மேனி, மூத்துப்பட்டி, சோலை அழகுபுரம், மாடக்குளம், M.K. புரம், கோச்சடை, ஜெய்ஹிந்த்புரம், விராட்டிப்பத்து போன்ற பகுதிகளில் குடிநீர் வசதி, சாலை வசதி இருந்தும் கூட அவை போதுமான அளவிற்கு இல்லை. எனவே, இந்த வசதிகளைப் பெருக்கித் தருவதற்கும், வசதிகளை உயர்த்திக் கொடுப்பதற்கும் மதுரை மாநகராட்சியின் போதுமான நிதிவசதி இல்லையென்பதைக் கருத்தில் கொண்டு, அரசு மானியம் வழங்கி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, வசதிகளைப் பெருக்குவதற்கான, இத்திட்டங்களை விரைவாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மதுரை நகரின் இடையில் அதன் ஊடே அவனியாபுரம் வாய்க்கால், அனுப்பானடி வாய்க்கால், பனையூர் வாய்க்கால், கிருமால் நதி வாய்க்கால் ஆகிய வாய்க்கால்கள் செல்கின்றன. இந்த வாய்க்கால்களில் தூர் வாராத காரணத்தால் மதுரை மாநகரத்தின் தெருக்களில் சாக்கடைகள் ஓடி பெரிய சுகாதார சீர்கேட்டை இன்றைக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் மதுரை மாநகரம் சாக்கடைப் பிரச்னையால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கால்வாய்கள் எல்லாம் தூர்ந்து போயிருக்கின்றன. இந்தக் கால்வாய்களை எல்லாம் நவீனப்படுத்துவதன் மூலம், அவற்றை தூர் வாருவதன் மூலம், கால்வாய்களை செப்பனிட்டுக் கொடுத்தால் மதுரை மாநகரத்தின் சாக்கடைப் பிரச்னை நிச்சயமாக தீரும் என்று நம்புகிறேன். இதைச் செய்வதன் மூலம் மதுரை மாநகரத்தை ஒரு சுகாதாரமுள்ள நகரமாக மாற்ற முடியும். இந்தக் கால்வாய்கள் மூலம் புறநகர்ப் பகுதியில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு பாசன வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்துக்கு பதில் சொல்லுகின்ற வகையிலே மடியபடியும் குறுக்கிட்டு அதையே அழுத்தந் திருத்தமாக சொல்லியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு சமூக ஞானம் இல்லை என்று சொன்னார்கள். சமூக ஞானம் இருப்பதை புரிந்து கொள்கின்ற சாதாரண ஞானம் கூட உங்களுக்கு இல்லையே என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு சமூக ஞானம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்கிற சாதாரண ஞானம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். உண்மையிலே, சமூக ஞானம் இருந்திருக்குமானால், தமிழ் நாட்டின் சமூகப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு





இருக்கும். நடைமுறை அனுபவத்திலே சமூகச் சிக்கல்களைத் தீர்க்கிற வலிமை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்திலே அடங்கியிருக்கிற அனைத்துமே சாதாரண மக்களை மையமாகக் கொண்டு, சமூகத்தை மையமாகக் கொண்டு வகுக்கப்பட்டு இருக்கின்ற வரவு-செலவுத் திட்டம். சமூக ஞானம் இருக்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட வரவு-செலவுத் திட்டமே வகுக்கப்பட்டு இருக்கிறது. இது ஒன்றும் மாளிகை வாசிகளை உயர்த்துவதற்காக போடப்பட்டு இருக்கிற திட்டமல்ல. ஒரு வேளை அப்படி திட்டங்கள் இருந்தால்தான் அதை சமூக ஞானம் என்று கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்றுக்கொள்வார்களோ, என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாகவே இது ஒரு வாடிக்கையாக இருக்கிறது. தேவையற்ற விவாதங்கள் செய்வதைத் தடுக்க வேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்ததன் பிரகாரம் இங்கே அலுவல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதுவரையில் 71 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் சே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கத்துக்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் சார்பாக, நடமாடும் பல்கலைக் கழகம், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டு உள்ள நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி

நிலை அறிக்கையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்' என்பதற்கு இலக்கணம் இந்த நிதி நிலை அறிக்கை. வரி இல்லாத பட்ஜெட். பற்றாக்குறை பெரும்பாலும் இல்லாத பட்ஜெட். சாமானிய மானவர்கள் சந்தோஷம் அடையக்கூடிய பட்ஜெட். ஏழை, பணக்காரன், தாழ்ந்தோர், உயர்ந்தோர், பாமரன், பண்டிதர், இப்படி எல்லோராலும் பாராட்டக்கூடிய பட்ஜெட். பெருமளவிலே தூண்டு விழாத பட்ஜெட். நிலையாக நிலுவை இல்லாத, ஓவர் டிராப்ட் இல்லாத அரசாக இருக்கின்ற ஒரு அரசின் பட்ஜெட். சுமார் 22 கோடி அளவிற்கு வரி குறைந்த பட்ஜெட். இந்தப் பட்ஜெட்டைப் போல, 1947 ஆம் ஆண்டிலேயிருந்து சுதந்திரம் அடைந்த பிறகு இங்கே அறிவிக்கப்பட்ட, தமிழக அரசினுடைய எந்த பட்ஜெட்டை எடுத்துப் பார்த்தாலும், இதைவிட சமுதாய ஞானம் உள்ள பட்ஜெட்டை யாரும் போட்டதில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த பட்ஜெட் அறிக்கையை வரவேற்பதற்கு முன்பாக, கவர்னர் உரை வந்து, அந்த கவர்னர் உரைக்கும், இந்த நிதிநிலை அறிக்கைக்கும், இடையிலே ஒரு தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலைப் பற்றியெல்லாம் பல்வேறு விஷயங்கள், உள்ளேயும் வெளியேயும் விமர்சனம் செய்தார்கள். அதுபற்றி ஒரு பட்டிமன்றம்கூட நடத்துவதைப் போல சொன்னார்கள். இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அது ஊர் கவுண்டர்கள் தேர்தல்; அவ்வளவுதான். அந்தத் தேர்தல் புரட்சித் தலைவரை பாதிக்காது; இந்த அரசை மாற்றாது. அதுமட்டும் அல்ல; நடைபெற்ற தேர்தல் அரசியல் மாறுதலுக்காக அல்ல; ஒரு சமுதாய சேவையை செய்வதற்காக; பல முறை சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் போட்டி போட்டு தோற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலே, பொது மக்கள் மிகச் சிறந்த முறையில் எடைபோட்டு தீர்ப்பு அளிக்கக் கூடியவர்கள், குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும், பலமுறை பாவமன்னிப்பு கோரினால் மன்னிப்பு கொடுப்பது. மன்னிப்பது. மனிதாபிமானம். அந்த மனிதாபிமானத்தின் அடிப்படையில்தான், அது இந்த தமிழ்நாட்டினுடைய பண்பாடு என்கிற வகையிலே மாமன்னர்களாக இருந்தவர்கள், ஆட்சி புரிந்தவர்கள். மிகச்



சாதாரண குறுநில மன்னர்களாகவாவது இருக்கட்டுமே என்று ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து, ஏதோ பாவம் போகட்டும் என்று பழந்துணி கொடுத்ததால் அதை இழுத்து முழம் போடக்கூடிய நிலையிலே வந்தால் நிலைமை வேறாக அமையும் என்பதை மட்டும் நினைவிலே நிறுத்திக் கொள்ள வேண்டும், இந்த நேரத்திலே வெத்துவேட்டு கிளப்பக் கூடியவர்கள்.

நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இங்கே அமைச்சர் பண்ருட்டியார் அவர்களுடைய தொகுதியிலே அவரை எதிர்த்து மூன்று முறை போட்டியிட்டு தோற்றவர் டாக்டர் நந்தகோபால். மூன்று முறை தோற்றவர், இப்போது நாலாவது முறையாக உள்ளாட்சித் தேர்தலிலே நிற்கின்றார். இந்த ஆட்சியும் தொடர வேண்டும். அதே நேரத்தில் உள்ளாட்சியிலே இருக்கக்கூடிய இந்த ஆட்சிக்கு களங்கமற்ற நிலையிலே, மக்கள் தீர்ப்பு கேட்டுக்கொண்டு, நான் நாயாக இருப்பேன், உதைத்தாலும் ஓட மாட்டேன்; உங்கள் கூடவே வருவேன், அங்கேயே இருப்பேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கக்கூடியவர்களுக்கு ஏதாவது ஒரு மேஸ்திரி உத்தியோகமாவது கொடுப்போம் என்கிற வகையிலே ஊசி முனையளவு இடம்கூட தரமாட்டேன் என்று சொல்லக் கூடிய துரியோதனன், துச்சாதனன் கதையாக மாறக் கூடாது. ஒரு வேளைக்கு வாய்ப்பு கொடுப்போம்; திருந்தினால் பார்ப்போம் என்கிற வகையிலே கொடுத்திருக்கக்கூடிய இந்த நிலையை பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தினுடைய முடிவு, மத்தியிலே காங்கிரஸ், மாநிலத்திலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், உள்ளாட்சித் தேர்தலிலே ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊர் கவுண்டர்களுக்கு சில வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்கிற எண்ணத்திலே கொடுக்கப்பட்ட ஒன்றே தவிர இந்த தேர்தல் முடிவு மத்திய அரசையோ, மாநில அரசையோ மாற்றக் கூடியது அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, புங்க

மரத்திலே தலை கீழாக தொங்கிக் கொண்டு, புளிய மரத்திலே உள்ள புளியைப் பார்த்து சப்புக் கொட்டுவதைப் போல, சப்புக் கொட்டிக் கொண்டிருப்பது நல்லதல்ல. அந்த வௌவால் குணம் வரவேண்டிய அவசியம் இல்லை என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நடைபெற்ற தேர்தலிலே எங்கள் தொகுதியிலே ஒரு உள்ளாட்சி தேர்தலிலே, அங்கே ஒரு ஒன்றியத்தினுடைய பதவிக்கு திராவிட முன்னேற்றக் கழக பொருளாளர் ஒருவர் போட்டியிடுகின்றார். அவர் தேர்தல் விளம்பரம் செய்கிறார். அந்த தேர்தல் விளம்பரத்திலே அந்தக் கட்சியினுடைய தலைவர் கருணாநிதியினுடைய படம் இருக்கிறது. அதை நான் ஏற்கனவே காட்டிவிட்டேன். அதுமட்டுமல்ல, கட்சியினுடைய சின்னம் உதய சூரியனும் அல்ல. அந்தக் கட்சியின் சார்பாக ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட அந்த சிம்பலும் இல்லை; ஆனால் கீழே மட்டும் தி.மு.க. இளைஞர் அணி என்று இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட பல்வேறு தில்லுமுல்லுகள் புரட்சித் தலைவரை பாதிக்காது என்கிற காரணத்தினால், மத்திய அரசை பாதிக்காது என்கிற காரணத்தினால், ராஜீவ் காந்தியை பாதிக்காது என்கிற காரணத்தினால் இங்கே இருக்கக்கூடிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது அரசை மாற்றாது என்று சொன்னதால், இங்கே இருக்கக்கூடிய ஒரு சிலர் இருந்துவிட்டு போகட்டுமே என்ற அடிப்படையிலே கொடுத்த அந்த வாக்கை வைத்து இங்கே பல்வேறு வகையிலே விமர்சிப்பது தேவையற்றது என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளத்தால் சாய்ந்துபோன ஒரு நாணலைப் பார்த்து நீங்கள் நகைத்தால் நல்லது அல்ல, நாங்கள் தேரோட்டம் செல்கிறோம்; காரோட்டம் செய்கிறோம் என்று சொன்னால் சென்று கொண்டிருக்கும்போது அங்கே ஒரு பள்ளம் இருந்தால் அதற்காக ஒரு கார் பின்னாலேயேதான் இருந்து வரும். அதற்காக வெற்றி பெற்று விட்டதாக சொல்வதற்கு இல்லை. ஆனால் இன்னும் நேரம் இருக்கிறது; காலம் இருக்கிறது. இறுதியான வெற்றியை நிர்ணயிக்கக்



கூடிய பொதுத் தேர்தல் இதற்கு தீர்ப்பு சொல்லும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் அடக்கத்தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசுகின்றபோது பல்வேறு உறுப்பினர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். தொழில் வளம், தொழில் வளம் என்று இப்போதும் கூட சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் ஏகபோக உரிமைகள் தடுக்கப்பட்டது இந்த ஆட்சியில். அரசு பொது நிறுவனங்களாக மாற்றப்பட்ட அம்சங்கள் பல உண்டு. இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் மேக்னசைட், பொது நிறுவனத்தின் கீழ், டாமின் பொது நிறுவனத்தின் கீழ், பேப்பர் பொது நிறுவனத்தின் கீழே, எல்காட் பொது நிறுவனத்தின் கீழ், சிமெண்ட் பைப் பொது நிறுவனத்தின் கீழே, வெடி மருந்து தொழிற்சாலை பொது நிறுவனத்தின் கீழே வரி இல்லாத வர்த்தக சபை அமைத்த ஒரே பெருமை இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழ்நாட்டிற்குத் தான் உண்டு. இந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே மிகப்பெரிய அளவுக்கு . . . .

(பிற்பகல் 1-50)

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாம் பொது நிறுவனத்தின் கீழே அதிகமாக முக்கியத்துவம் கொடுத்து இருப்பதாக சொல்கிறார்கள். காரைக்குடி அருகில் உள்ள தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன? அது யாருக்கு ஒப்படைக்கப்பட இருக்கிறது? பொது துறையில் இருக்கிறதா? அல்லது தனியாருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருக்கக்கூடிய பலவற்றை, தனி நபர் பல்வேறு வகையில் வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பலவற்றை அரசு நிறுவனமாக பொது நிறுவனமாக மாற்றுகின்ற பட்டியலை நான் சொல்லிக்கொண்டு

இருக்கிறேன். இந்த 240 கோடி ரூபாய்க்கு மேலாக அரசு நிறுவனமாக முதலீடு செய்து பல்வேறு வகையில் கூட்டுறவுத் துறையில்; கூட்டுறவே நாட்டு உயர்வு என்று சொல்லக்கூடிய நிலைமையை உருவாக்கியது இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு ஒன்று தானே தவிர வேறு எந்த நாடும் அல்ல. அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், அது காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட்டு அரசாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த அரசாக இருந்தாலும் சரி.

அது மட்டும் அல்ல, இங்கே பேசும்போது சில காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கூட சொன்னார்கள் 300 கோடி ரூபாய் அளவில் அப்போது பட்ஜெட் இருந்தது, இப்போது ஆயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகிறீர்கள்? எப்படி? என்று எல்லாம் கேட்டார்கள். அது தான் கலை. 'சொல்லித் தெரிவது அல்ல மன்மதக் கலை, சொன்னாலும் தெரியாது மண் ஆளும் வித்தை' என்று சொல்லுவார்கள். அதைப் போல இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்த உடன் வரவின் ஊற்று காலை பெருக்க அந்த கால்வாயை மிகப்பெரிய அளவில் உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதை யாரும் மறந்து விட வேண்டாம்.

சிறு தொழில் பதிவு செய்யப்பட்டது என்ற அளவில் 18 ஆயிரமாக இருந்தது நாங்கள் ஆட்சிக்கு வரும்போது. ஆனால் இன்றையதினம் 69 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறு தொழில்களை பதிவு செய்து தொழிலை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது தொழில் வளர்ச்சி இல்லையா ?

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அதில் எத்தனை மூடப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படி நேருக்கு நேர் எழுந்து பேசக் கூடாது.



டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, 10 குழந்தைகள் பிறந்து 2 போனால் அது பற்றி கவலை இல்லை. பிறப்பதை வைத்துதான் பேச வேண்டும். 16 குழந்தைகள் பெற்றவர்கள் என்று சொன்னால் அதில் 4 குழந்தைகள் இறந்தது கணக்கில் வருவது இல்லை. பெற்றது தான் கணக்கு. சிலது இறக்கலாம். அது சூழ்நிலையைப் பற்றியது. (குறுக்கீடு)

அது மட்டும் அல்ல, பால் வளத் துறை என்று சொன்னால் இந்தியாவில் முதல் மாநிலம் குஜராத், அடுத்து மகாராஷ்டிரம், அடுத்து தமிழ்நாடு. இவை மூன்றும் தான் சர்பிளஸ். இப்படி காங்கிரஸ் அரசில் இல்லை. தி.மு.க. அரசில் இல்லை. வேறு எந்த ஞானம் உள்ள அரசிலும் இல்லை. நாட்டுக்கு அத்தியா வசியமானது பிறப்பு முதல் இறப்பு வரை தேவைப்படுவது பால். அந்த பால் வளத்துறையில் வெற்றிப் பெற்று மிகப் பெரிய சர்பிளஸ் உபரி என்ற அளவுக்கு நாம் 3-வது இடத்தை வகிக்கிறோம் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஆகவே இப்படி பல்வேறு வகையில் புதிய வருவாயை தரக் கூடிய ஊற்றுக் கால்வாய்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிய காரணத்தால் இங்கே வரி இல்லாத பட்ஜெட்டை நாங்கள் சமர்ப்பித்து இருக்கிறோம். இங்கே சிலர் சொன்னார்கள், இதில் ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று;—நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லுவேன், டாக்டர் நாவலர் அவர்கள் இந்த பட்ஜெட் அறிக்கையில் ஒரு இணைப்பைப் போட்டு தெளிவாக கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையாக தெரிந்து கொள்வதற்காக இணைப்பு என்று போட்டு கொடுத்து இருக்கிறார்கள். அந்த புஸ்தகத்தைப் படித்துவிட்டு பேச வேண்டும். ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரம் எல்லாம் மிகத் தெளிவாக போடப்பட்டு இருக்கிறது.

[டாக்டர் கே. சமரசம்] 1986 மார்ச் 27]

அதேபோல் நான் ஒன்றை காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், 1967-க்கு முன்பு, 1967-க்கு முன்பு என்று வார்த்தைக்கு வார்த்தை குறிப்பிடுகிறார்கள். ஒரு குழந்தையைக் கொண்டு போய் ஒரு வயதில் ஒருவரிடம் ஒப்படைத்தால் 20 வயது ஆன பிறகு பார்த்தால் ஒரு அடியாக இருந்த குழந்தைகள் 5½ அடியாக உயர்ந்து இருக்கும். அதையே 21 வயது ஆன குழந்தையை கொண்டு போய் கொடுத்து அதை 40 வயதில் பார்த்தால் 5½ அடி உள்ள குழந்தை அந்த 40 வயதில் மேலும் 5½ அடி உயர்ந்து 11 அடி உள்ள குழந்தையாக இருக்கும் என்பதைப் போல வாதாடுகிறார்கள். * *

(கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உவமானத்தைத் தான் குறிப்பிடுகிறார், உவமேயத்தைச் சொல்லவில்லை. குழந்தைக்குச் சொல்லுகின்ற அந்த உவமேயத்தைத் தான் சொல்லுகிறார்.

**டாக்டர் கே. சமரசம் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த கருத்து சட்டமன்ற குறிப்பில் இருக்கிறது. அருள்கூர்ந்து பார்க்க வேண்டும்.

பல நேரத்தில் காங்கிரஸ் நண்பர்கள் குறிப்பிடும்போது அணை கட்ட வேண்டும் என்று சொல்லுகின்றபோது,—நான் கூட தி.மு.க. மேடையில் பேசும்போது கேட்டு, அதற்கு பதிலே சொல்லியிருக்கிறேன்—எல்லாவற்றிற்கும் நாங்கள் அணையை கட்டிவிட்டோம், இனிமேல் கட்ட வேண்டுமானால் ஈ. வி. ஆர். கே. ஆர். ஆர்., எஸ். எஸ். ஆர்., எம். ஜி. ஆர். இவர்கள் வாய்க்குக் தான் அணைக் கட்ட வேண்டும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் அப்போதே முடிந்து விட்டது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மார்ச் 27] [டாக்டர் கே. சமரசம்]

முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் அவையெல்லாம் எந்தெந்த பகுதிக்கு தேவை, என்னென்ன செய்வது என்பதற்காக—சீவி முடிச்சு சிங்காரிச்சு வந்தும், கட்டிய கணவன் குருடனாக இருந்தால் என்ன செய்ய முடியும்? ஆகவே எதிர்க்கட்சி என்பது என்றும் நிரந்தரமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது ஒருவர் சொன்னார். இது ஒரு விஷக் கூடு. என்று அப்போதே சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த விஷத்தில் ஊறிய வித்து என்று தனிப்பட்டவர்கள் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி. சோஷலிஸ்டு கட்சி, தி.மு.க. இன்னும் எத்தனையோ கட்சிகளிலிருந்து விஷ வித்துக்கள் வெளியேறி, மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான புரட்சித் தலைவர் அவர்களுடன் சேர்ந்து, விஷத்திலிருந்து விடுபட்டு, சத்தான வித்துக்களாக மாறியிருக்கின்றன. ஆகவே விஷத்தில் ஊறிய வித்துத்தான் அண்ணா தி.மு.க.

இங்கே பேசுகின்றபோது தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று தான் சட்டம் கொண்டு வந்தோம். அரசியல் கட்சிகளை எதிர்த்து வழக்கு மன்றத்திற்கு சென்றார்கள். தேர்தல் நடந்தே தீர வேண்டுமென்று பார்க்கின்றபோது, தாழ்த்தப்பட்டவர்கள் பலர் போட்டியிட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எதிர்க் கட்சிகள் சார்பில் தாழ்த்தப்பட்ட வேட்பாளர்களை நிறுத்தினால், அண்ணா தி.மு.க. சார்பிலும் தாழ்த்தப்பட்டவர்களை நிறுத்தலாம். ஆனால் அவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாத நேரத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் விரும்பினால், அவர்களை பலி கடாவாக நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே கோ-ஆப்ஷன் என்றும், அவர்கள் நியமனம் என்றும் சொல்கின்ற வகையிலே உள்ளே சென்றே தீரவேண்டும்,

ஆட்சியில் அமர வேண்டுமென்ற நிலையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலேயும் கூட, சிலர் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடிய வகையில் இருக்கிறார்கள் என்பதைக் கூட நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, அதுமட்டுமல்லாமல், பல்வேறு வகையிலே தமிழைப் பற்றிச் சொன்னார்கள். * *

பகைவனுக்கும் அருள்வாய் என்று பாரதி சொன்னார், என்பதோடு பாதகனுக்கும் அருள்வாய் என்று சொல்லக் கூடிய புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு பொதுத் திட்டத்தை வகுத்திருக்கிறார். அந்த அடிப்படையிலே தான் அவர் கூட பெற்றிருக்கிறார். ஆகவே இந்தத் திட்டம் மனிதாபிமானத் திட்டம், என்று இங்கே. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையிலே இல்லாதவர்கள் பற்றி பேசக் கூடாது. வைத்தியக் கல்லூரியைப் பற்றிக் கூறியது நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே இன்று இருக்கின்ற வகையிலே மத்திய மாநில உறவுகளைப் பற்றி, இங்கே பலப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகவே மத்திய மாநில உறவுகளை, பல்வேறு உணர்வுகளை, எடுத்துக் காட்டுகின்ற இந்தியாவிற்கு நிரந்தரமான விமோசனம் தேவை என்று சொன்னால், 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா' என்ற நிலை வந்தாலொழிய அது முடியாது. மத்தியிலே இருக்கின்ற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



கூட்டாட்சி, மாநிலத்திலே இருக்கின்ற சுயாட்சி, பல்வேறு வகையிலே நாம் வரி கொடுப்பது, வாங்குவது எப்படி இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், மாநிலத்திலே எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும், குற்றங்குறைகளை ஒரு மாநிலத்தினுடைய சட்ட மன்றத்திலே இப்படி எடுத்து வைப்பதிலிருந்து உண்மையான தீர்வை எதிர் காலத்திலே பெற வேண்டுமென்றால், இப்படிப்பட்ட 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா' என்ற நிலைக்கு வந்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐப் பொறுத்தவரையில், இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்த வகையில், அவருடைய பெயர் எம்.ஜி.ஆர்.

Magnanimous, Good-hearted, Rationale Government

என்று சொல்லக் கூடிய வகையில் அவர்களுடைய பெயரோடு இந்த அரசாங்கம் இணைந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லி, பேராசிரியர் டால்டர் அவர்கள் சொன்னார்கள்.

"A "Statesman" is a Trustee of the future, no less than of the present and he should have adequate vision for the future. An individual dies but the community lives on and so a "Statesman" should not anticipate quick returns."

என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி தொடர்கிறது என்று சொல்லி, வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று திங்கட்கிழமை (31—3—1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.59 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

52. பொது (காவல்) துறையின் 20—11—1935 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அறிவிக்கையில் ஓர் திருத்தம் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 31—10—1935 ஆம் நாளிட்ட 1004 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).]

53. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

46. தமிழ்நாடு அரசின் 1966-67, 1967-68, 1968-69 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது வனம் மற்றும் மீனளத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை (தமிழ்).

47. 1970-71, 1971-72 மற்றும் 1972-73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை (தமிழ்).





48. தமிழ்நாடு அரசின் 1961-62, 1962-63, 1964-65, 1965-66, 1967-68 முதல் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது வேளாண்மைத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை (தமிழ்).

ஆவணக்காப்பக சென்னை-600 008.
136459

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.